பிரயாணக் கட்டுரைகள்

ஏ. கே. செட்டியார்

○

விற்பனை ஏஜண்டு
உமையாள் & கோ.,
சேலம்

குமரி மலர் காரியாலயம்
தேனாம்பேட்டை — சென்னை

முதற்பதிப்பு ஜூன் 1947

சகல உரிமைகளும்
குமரி மலர் காரியாலயத்தாருக்கே

விலை ரூபாய் ஒன்றேகால்

குமரி மலர் பிரஸ், சென்னை.
P. I. C. No. 438 : 1000

பதிப்புரை

'குமரி மலர்' காரியாலயத்தின் முதல் வெளியீடு இந்தப் பிரயாண நூல்.

முதல் ஒன்பது கட்டுரைகள் 'குமரி மலரி'லும், 'திருவண்ணுமலை' 'சக்தி' பத்திரிகையிலும், 'புதுச்சேரி' 'ஜகன்மோகினி' பத்திரிகையிலும், கடைசி மூன்று கட்டுரைகள் ஏற்கனவே வெளிவந்த 'பிரயாண நினைவுகள்' என்ற புத்தகத்திலும் வெளியானவை.

தங்கள் பத்திரிகையில் வெளி வந்துள்ள கட்டுரைகளை வெளியிட அனுமதி தந்த 'சக்தி', 'ஜகன் மோகினி' உரிமையாளர்களுக்கு நன்றி.

பொருள் அடக்கம்

எண்		பக்கம்
1.	பிரயாணம் செய்யுங்கள்	 1
2.	நேபாளம்	 6
3.	இலங்கை	 44
4.	யாழ்ப்பாணம்	 59
5.	கப்பல் ஞாபகங்கள்	 70
6.	பூரி-ஜகந்நாதம்	 77
7.	எலிபெண்டா	 82
8.	சென்னை நகரம்	 87
9.	அதிசயமான ஊற்று	 95
10.	திருவண்ணாமலை	 100
11.	புதுச்சேரி	 106
12.	செஞ்சி	 111
13.	தரங்கம்பாடி	 117
14.	குமரி முனை	 122

*

பிரயாணக் கட்டுரைகள்

பிரயாணம் செய்யுங்கள்

திருவண்ணாமலையில், ஒரு பள்ளிக்கூடத்திற்குச் சென்று 'சமுத்திரத்தைப் பார்க்காத மாணவர்கள் கையை உயர்த்துங்கள்' என்றால் பாதிப்பேர் கையை உயர்த்துவார்கள். வேதாரண்யத்திலே, ஒரு பள்ளிக்கூடத்திற்குச் சென்று 'மலையைப் பார்க்காத பையன்கள் எல்லாம் கையை உயர்த்துங்கள்' என்றால் பாதிப் பேருக்கு மேல் கையை உயர்த்துவார்கள். இவ்வாறு சமுத்திரத்தையும் மலையையும் பாராத நிலையில் இருக்கிறார்கள் நமது எதிர்கால தேசமக்கள். ரயிலையோ டிராம் வண்டியையோ பார்க்காதவர்களைப் பற்றி நான் இங்குக் குறிப்பிடவில்லை.

"நான் இந்த ஊரில் பத்து வருட காலமாக வேலை பார்க்கிறேன். வீடுண்டு; ஆபீசுண்டு; வேறொன்றும் எனக்குத் தெரியாது. அடுத்த வீட்டுக்காரர் யார் என்று கூட எனக்குத் தெரியாது" என்று பெருமையடித்துக் கொள்ளுபவர்களும் நமது நாட்டில் இருக்கிறார்கள்.

பர்மா மலேயா முதலிய அயல் நாடுகளுக்குச் செல்லும் தமிழர்கள், அந்நாடுகளின் பெருமைகளைப் பல மடங்காகப் போற்றிப் புகழ்வார்கள். "ஆகா! ரங்கூன் வீதிகள் எவ்வளவு அழகாக இருக்கும்! சிங்கப்பூரில் கண்மூடிக் கண்திறப்பதற்குள் எத்தனை

ஆயிரம் மோட்டார்கள் வீதிச் சந்திப்புகளிலே காணப்படும்!'' என்றெல்லாம் கூறுவார்கள். இத் தமிழர்களில் பெரும்பாலோருக்கு, தமிழ் நாட்டின் பேரழகும் அதன் பெருமைகளும் தெரியாது; தெரிந்து கொள்ளவும் விருப்பமிராது.

ஹோட்டல் வேலைக்காரப் பையன்களுக்கு ஊர்கள் சுற்றிப் பார்ப்பதிலே அளவு கடந்த ஆர்வம் உண்டு. இன்று ஒரு பையன் சென்னையில் வேலை பார்ப்பான். அடுத்த மாதம் அவனைப் பம்பாயில் பார்க்கலாம். சில மாதங்கள் கழித்து "என்ன சார், சௌக்கியமா?'' என்று அதே பையன் கல்கத்தாவிலே நம்மைக் கேட்பான். பிரயாணம் செய்வதற்குப் பொருள் வசதியில்லா விட்டால், டிக்கட் இல்லாமல் கூட ரயிலில் பிரயாணம் செய்வான். எலுமிச்சம்பழத்தின் மீது ஒரு எறும்பை விட்டால், அது சுற்றிக்கொண்டு மீண்டும் பழைய இடத்திற்கே வந்துவிடுவதாக நாம் பூகோளத்தில் படிக்கிறோம். அதே போல இந்த ஓட்டல் வேலைக் காரப் பையனும் சில வருடங்கள் பல இடங்களில் சுற்றி, மீண்டும் பாலக் காட்டுக்கே வந்துவிடுகிறான்.

தல யாத்திரை செய்வது நமது நாட்டில் தொன்று தொட்ட வழக்கம். இந்த யாத்திரை வாசிகளுக்குச் சௌகரியம் செய்வதற்காக எண்ணற்ற சத்திரங்களும் மடங்களும் நமது நாட்டில் பல இடங்களில் கட்டப் பட்டிருக்கின்றன. பண்டைநாளில், வேகமான போக்குவரத்துச் சாதனங்கள் ஒன்றும் இல்லாதிருந்த நாளில், நமது மூதாதையர் மாதக் கணக்கிலும் வருடக் கணக்கிலும் யாத்திரை செய்தார்கள். க்ஷேத் திரங்களை மட்டுமின்றி, நாட்டுப்புறங்களின் இயற்கை அழகுகளையும் சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களையும் பார்த்து மகிழ்ந்தார்கள். காடுகளையும் மலைகளையும்

கண்டு களித்தார்கள். யாத்திரையால் உண்டாகும் எல்லா நலன்களையும் அவர்கள் பெற்றார்கள்.

வேகமான போக்குவரத்துச் சாதனங்கள் அமைக்கப்பட்டிருக்கும் இந்நாளில், தலயாத்திரை செய்வோர் தொகை குறைவு. இன்று காலையில் சென்னையிலிருந்து திருப்பதிக்குப் புறப்பட்டால், மறுநாள் காலை மீண்டும் சென்னைக்குத் திரும்பிவிட வேண்டும் என்று நினைக்கின்ற காலம் இது. யாத்திரை செய்வோர் நேராக, குறிப்பிட்ட ஒரு க்ஷேத்திரத்திற்குச் செல்வார்கள். ஆனால், அதற்குப் பக்கத்திலுள்ள சரித்திரப் பிரசித்தமான இடத்திற்குச் செல்லமாட்டார்கள். உதாரணமாக, வருடந்தோறும் பதினாயிரக் கணக்கான யாத்திரிகர்கள் திருப்பதிக்குச் செல்கிறார்கள். இவர்களில் நூற்றுக்கு ஒருவர் கூட, திருப்பதிக்குப் பத்துமைல் தூரத்திலுள்ள சந்திரகிரி என்ற சரித்திரப் பிரசித்தி பெற்ற இடத்திற்குச் செல்வதில்லை.

தமிழர் தம்மைத் தாமே மறியாதிருப்பதற்குக் காரணம், தமிழ் நாட்டின் பெருமைகளை உணராதது தான்.

> நீலத் திரைக்கடல் ஓரத்திலே—நின்று
> நித்தம் தவம்செய் குமரிஎல்லை—வட
> மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
> மண்டிக் கிடக்கும் தமிழ் நாடு"

என்றார் பாரதியார். தமிழனுக்குத் தமிழைவிட இனிமை வேறொன்றுமில்லை. சொந்த நாட்டைச் சுற்றிப் பார்க்காத தமிழர்களுக்கு, தமிழ்நாட்டைப் பற்றிப் பேசத் தகுதியே இல்லை. தனது நாட்டை யறியாத ஒருவன், வெளிநாடு செல்வதில் பயனொன்றுமில்லை.

ஜப்பானில், பள்ளிக்கூட மாணவர்களுக்குச் சிறந்த வசதிகள் செய்திருக்கிறார்கள். பத்து வருடம் கல்வி பயிலும் மாணவனோ அல்லது மாணவியோ, தங்கள் பயிற்சி முடிவதற்குள், நாட்டில் பெரும்பாலான இடங்களைப் பார்க்கும் பாக்கியத்தை அடைகின்றனர். ரயில்வேக் கம்பெனியார் கட்டண விஷயத்தில் விசேஷ சலுகை காட்டுகின்றனர். மாணவர்களின் பிரயாணச் செலவில் அரசாங்கம் ஒரு பகுதியையும் பள்ளிக்கூடம் ஒரு பகுதியையும் ஏற்றுக்கொள்கின்றன. மாணவர் கையிலிருந்து செலவாவது மிகச் சொற்பமான தொகைதான்.

அமெரிக்காவில், "முதலில் அமெரிக்காவைப் பார்" என்று ஓர் இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். யாத்திரை செய்வோருக்குத் தனி ரயில்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. இந்த ரயில்களில் பிரயாணம் செய்வதால் சாதாரணக் கட்டணத்தில் மூன்றில் ஒரு பங்குதான் கட்டணம். அமெரிக்காவின் இயற்கை வனப்புக்களையும், பிரம்மாண்டமான தொழிற் சாலைகளையும் சினிமாப் படமாகத் தயாரித்து, அந்நாட்டில் உள்ள பதினாயிரக் கணக்கான சினிமாத் தியேட்டர்களில் காட்டுகின்றனர். இப்படத்தைப் பார்க்கும் மக்களுக்குப் பிரயாணம் செய்யவேண்டும் என்ற ஆர்வம் அதிகமாகிறது.

அயர்லாந்திலும், "முதலில் அயர்லாந்தைப் பார்" என்ற இயக்கம் நடைபெறுகிறது. ஹாலந்தில் பள்ளிக்கூட மாணவர்கள், பிரயாணத்துக்கு வேண்டிய சாமான்களை மூட்டை கட்டித் தங்கள் முதுகில் சுமந்துகொண்டு, நடந்தோ அல்லது சைகிளிலோ பிரயாணம் செய்கிறார்கள். இந்த யாத்திரை வாசிகளான மாணவர்கள், குறைந்த கட்டணத்தில் தங்குவதற்கும் உண்பதற்கும்

பல ஊர்களில் தனி இடங்கள் ஏற்படுத்தியிருக்கிருர்கள். ஜெர்மனியில், மாணவர்களுக்கு விசேஷ வசதிகள் அளிக்கிருர்கள். ஆகாய விமானங்களில் இடம் காலியாயிருந்தால், அதிலே மாணவர்கள் மூன்ருவது வகுப்பு ரயில் கட்டணமாகிய குறைந்த கட்டணம் கொடுத்துப் பிரயாணம் செய்யலாம்.

இந்தியா, எல்லா வகையிலும் பெரிய நாடு. கோடிக் கணக்கான மக்கள் இந்தியா முழுமையையும் சுற்றிப் பார்ப்பது தற்பொழுது அசர்த்தியமான காரியம். வட மேற்கு எல்லைப்புறத்தைப் பற்றி நமக்குத் தெரிந்தது மிகச் சொற்பம். எல்லைப்புறத்து மக்கள் எப்படிப் பட்டவர்களென்று இங்கிலீஷ்காரர்கள் நமக்குச் சொல்ல வேண்டிய நிலைமையில் நாம் இருக்கிருேம். தமிழர் எல்லோரும் இந்தியாவைச் சுற்றிப் பார்க்காவிட்டாலும், தமிழ்நாட்டையாவது சுற்றிப் பார்க்கவேண்டும்.

பிரயாணம் செய்வதில் பலருக்கு ஆசை உண்டு. பிரயாணத்தை ரஸிக்கிறவர்கள் சிலர். தலைவிதியை நொந்துகொண்டு பிரயாணம் செய்பவர் பலர். பிரயாணத்தில் விருப்பமுள்ள சிலருக்குப் பணமிராது. பணமும் நேரமும் இருப்பவர்களுக்கு விருப்பமிராது.

ரயில்வேக் கம்பெனிக்காரர்கள் "அவசியமானல் பிரயாணம் செய்யுங்கள்" என்று உபதேசம் செய்கிருர்கள். தமிழர் தமிழ் நாட்டை ஒரு முறையாவது சுற்றிப் பார்க்கவேண்டியது அவசியம் என்று நீங்கள் கருதினல், அவசியம் பிரயாணம் செய்யுங்கள்.

நேபாளம்

'நேபாளம் எங்கிருக்கிறது?' என்று யாராவது கேள்வி கேட்டால் நான் ஆச்சரியப்படப் போவதில்லை. காலேஜ் பிரின்ஸ்பால் ஒருவர் இந்தக் கேள்வியை ஏற்கனவே என்னிடம் கேட்டிருக்கிறார். நேபாளம் இந்தியாவில் தானிருக்கிறது என்ற உண்மையை அந்தப் பிரின்ஸ்பாலுக்குக் கூறினேன்.

'நேபாளம் இந்தியாவிலேயே இருக்குமானால், அதைப்பற்றிய விவரங்கள் நமது மக்களுக்கு ஏன் சரிவரத் தெரிவதில்லை?' என்று நீங்கள் கேட்கலாம். சரியான கேள்வி இது. ஏனென்றால், நமது நாட்டைப் பற்றி நமக்குள்ள அறியாமையை இது நன்கு புலப்படுத்துகிறது. அதற்குக் காரணங்களும் இல்லாமலில்லை.

சாதாரண காலத்தில், உலகத்தில் எந்த நாட்டுக்குச் செல்ல வேண்டுமானாலும், பிரயாண சம்பந்தமாக ஏற்பாடு செய்யும் கம்பெனியார் முழு விவரமும் கொடுப்பார்கள். அந்தந்த நாட்டு அரசாங்கங்கள், ரயில்வேக் கம்பெனிகள், ஹோட்டல் ஸ்தாபனங்கள் முதலியவை வெளியிட்ட புத்தகங்களும், மற்றவைகளும் இலவசமாய்க் கிடைக்கும். ஆனால் நேபாளத்தைப் பற்றி எந்தக் காலத்திலுமே இம்மாதிரியான விவரம் தெரிவதில்லை. ரயில்வே கால அட்டவணைப்படி, நேபாள அரசாங்க ரயில்வேயின் கடைசி ஸ்டேஷன் வரையில்தான் நாம் போகலாம். அதற்குமேல், நேபாள அரசாங்கத்தின் தலை நகரான காட்மாண்டுவுக்குக் கடவுள்தான் நமக்கு வழி காட்ட வேண்டும்.

நேபாளத்திற்குச் செல்வது சுலபமல்ல. நேபாளம் செல்ல அந்த நாட்டு அரசாங்கத்தாரின் அனுமதிச் சீட்டு வேண்டும். வருடம் ஒரு முறை - அதுவும் மகா சிவராத்திரியின்போது - யாத்திரையாகச் செல்லும் இந்துக்களுக்கு மட்டும் அனுமதிச் சீட்டு சுலபமாய்க் கிடைக்கும். மற்றக் காலங்களில் யாருக்குமே அனுமதிச் சீட்டுக் கிடைப்பது அரிது.

நேபாள யாத்திரையைத் தொடங்குவதற்குச் சில மாதங்கட்கு முன்பாகவே, அந்நாட்டைப் பற்றிய நூல்கள் ஏதேனும் கிடைக்குமா என்று தேட ஆரம்பித்தேன். மிகுந்த சிரமத்தின்பேரில், ஒரு புத்தகசாலையிலிருந்து மூன்று ஆங்கிலப் புத்தகங்கள் கிடைத்தன. ஒவ்வொரு புத்தகத்திலும் ஒன்று அல்லது இரண்டு அத்தியாயங்கள்தான் நேபாளத்தைப்பற்றி இருந்தன. இவைகளில் சில, முப்பது அல்லது நாற்பது வருடங்களுக்கு முன் எழுதப்பட்டவை! இந்தப் புத்தகங்களைப் படித்ததிலிருந்து, நேபாளத்திற்குச் செல்லும் வழியைப் பற்றியோ, அல்லது அந்த நாட்டைப் பற்றியோ என்னால் சரிவர ஒன்றும் தெரிந்துகொள்ள முடியவில்லை.

பின்னர், நேபாளத்திற்கு நேரில் சென்று வந்தவர்களைத் தேட முயன்றேன். இதிலும் வெற்றி கிடைக்கவில்லை. சில யாத்திரிகர்களையும் பரதேசிகளையும் சந்தித்தேன். ஆனால் இவர்களில் பலர், பத்து அல்லது பதினைந்து வருடங்களுக்கு முன் யாத்திரை செய்ததாகக் கூறினார்கள். இவர்கள் எல்லோரும் தாங்கள் அடைந்த கஷ்டங்களைப் பற்றியே என்னிடம் சொன்னார்கள். ஒவ்வொருவருடைய அனுபவமும், ஒவ்வொரு விதமாயிருந்தது. ஏற்கனவே புத்தகங்களைப் படித்துக் குழப்பம் அடைந்திருந்தேன். இவர்களின் புத்திமதி இந்தக் குழப்பத்தை இன்னும் அதிகமாக்கிவிட்டது.

பொதுவாக, ஒரு பிரயாணத்தை ஆரம்பிப்பதற்குப் பல் நாட்களுக்கு முன்பாகவே நண்பர்களிடமும் தெரிந்தவர்களிடமும் சொல்லி விடுவதுண்டு. நேபாளப் பிரயாணத்தைப் பொறுத்தவரை, நாலைந்து மாதங்கட்கு முன்பாகவே நண்பர்களிடம் கூறிவந்தேன். இதில் ஒரு சௌகரியமுண்டு. குறிப்பிட்ட காலத்தில் பிரயாணத்தைத் தொடங்காவிட்டால், நண்பர்களும், மற்றவர்களும் "என்ன சார், உங்களை நேபாளத்தில் பார்த்த மாதிரி தோன்றுகிறதே!" என்று கேலி செய்ய ஆரம்பிப்பார்கள். இந்தக் கேலியைப் பொறுக்கமாட்டாமல், கட்டாயமாகப் பிரயாணம் செய்யவேண்டிய அவசியம் ஏற்படும். ஆனால் பிரயாணம் செய்வதைப்பற்றி உறுதி இல்லாதவர்கள், இம்மாதிரி அகப்பட்டுக் கொள்வது ஆபத்தானது.

பல நண்பர்கள் என்னுடன் நேபாளத்துக்கு வருவதாய்க் கூறினார்கள். அப்படிக் கூறியவர்களெல்லாம் உண்மையில் வந்திருந்தால், நாங்கள் ஒரு சிறிய பட்டாளமாகி யிருப்போம். ஆனால் அவர்கள் எல்லோரும் சொன்னபடி செய்யவில்லை. நண்பர் டி. எஸ். சுவாமிநாதன் ஒருவர்தான் என்னுடன் வந்தார். ஆனால் உண்மை அவ்வாறில்லை. அவருடன்தான் நான் சென்றேன்! நண்பர் சுவாமிநாதனுக்குப் பல மொழிகளில் பயிற்சி உண்டு. ஹிந்தி மொழியை இன்னும் கற்றுக் கொள்ளாத எனக்கு, அவருடைய துணை மிக்க உதவியாக இருந்தது. அன்றியும், அவர் வட இந்தியாவில் பல ஆண்டுகள் வசித்தவர்.

இந்தியாவின் சாலைகளைக் காட்டும் படத்தை எடுத்துக் கொண்டு, நேபாளத்தின் தலைநகரான காட்மாண்டு எங்கிருக்கிறது என்று பார்த்தோம். படத்தில் காட்மாண்டு நகர் இருந்தது; ஆனால் அதை அடைவதற்குச்

சாலே இல்லே. பிரிட்டிஷ் இந்தியாவின் எல்லேயிலிருக்கும் ரக்ஸோலிலிருந்து சுதந்திர இந்தியாவுக்குள் முப்பது மைல் வரை ரயில்வேயும், அதற்கப்பால் இருபத்தெட்டு மைல் தூரம் சாலேயும் படத்தில் காணப்பட்டது. அந்தச் சாலேகளில் பஸ் வசதி உண்டா, இல்லேயா என்ற விவரம் கிடைக்கவில்லே. அங்கிருந்து பதினேந்து மைல் தூரத்தில் காட்மாண்டு நகர் காணப்பட்டது. ஆனல் அதை அடைவதற்கு வழி ஒன்றும் காணவில்லே.

போகும் வழியில் எந்த ஊரில் தங்குமிடமும் சாப்பாடும் கிடைக்கும், எந்த ஊரில் தங்குமிடம் மட்டும் கிடைக்கும் என்றெல்லாம் படத்தில் குறிப்பிட்டிருந்தார்கள். நேபாளத்தின் தலேநகரான காட்மாண்டு நகரில் தங்குவதற்குத் தான் இடம் கிடைக்கும், சாப்பாடு கிடைக்காதென்ற குறிப்பு படத்தில் காணப்பட்டது. இப்படிப்பட்ட குறிப்புக்கள் ஐரோப்பியப் பிரயாணிகளுக்கு மட்டுந்தான் என்று தோன்றுகிறது.

நேபாளத்தைப் பற்றிச் சொல்பவர்கள் அதன் குளிரைப் பற்றிச் சொல்லாம விருப்பதில்லே. பனிமலேயைப் பற்றியும், பனிமழையைப் பற்றியும் கூறுவார்கள். பொதுவாகத் தமிழர்கள் பனியைக் கண்ணல் பார்த்ததில்லே. இதனல்தான் நமக்குக் குளிர் விட்டுப் போய் விட்டது. பனி மழையைப் பற்றி ஒரு தமிழர் எழுதும் பொழுது, பனி வெண்மையாக இருக்கும், பனிமழை பஞ்சு போல நமதுமேலே விழுந்து படரும் என்றெல்லாம் கூறுகிருர். ஆங்கில சினிமாப் படங்களில், பனிமழையைப் பார்க்கும் பலருக்கு, அது எப்படி இருக்குமென்றே புரிவதில்லே. பனிமழையால் படம் கெட்டு விடுகிறதே என்று பரிதாபப் படுகிறவர்களும் உண்டு.

குளிர் காலத்திற்கு இன்றியமையாத கம்பளிச் சட்டைகள், கனத்த கம்பளிக் கோட்டுகள் முதலியவைகளைத் தயார் செய்துகொண்டு நண்பர் சுவாமிநாதனும் நானும் சென்னையிலிருந்து கல்கத்தாவுக்குப் புறப்பட்டோம். யுத்த காலத்தில் இதைவிட வசதியான பிரயாணம் நான் செய்ததே கிடையாது. நல்ல சாப்பாடு மட்டும் கொஞ்சமாவது கிடைத்திருந்தால், எங்கள் பிரயாணம் இன்னும் சந்தோஷமாக இருந்திருக்கும். நேபாளத்திற்குச் செல்லுகிற ஆவலிலே, சிறு கஷ்டங்களை நாங்கள் பொருட்படுத்தவில்லை.

குறித்த நேரத்தில் இல்லாவிட்டாலும், குறித்த நாளிலேயே கல்கத்தாவை அடைந்தோம். கல்கத்தாவில் அதிர்ஷ்டம் எங்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தது! கல்கத்தாவில் வசிக்கும் நண்பர். என். தண்டபாணி ஐயர் எங்களுடன் நேபாளத்துக்கு வருவதாய்க் கூறினர். அவருக்கு நேபாள அரச குடும்பத்தில் சிலரைத் தெரியும். நேபாளப் பிரதம மந்திரி குடும்பத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் மிருகேந்திர ஷம்ஷேர் ஜங் பகதூர் ராணுவுக்கு, நாங்கள் எல்லோரும் நேபாளம் வருவதாய்த் தந்திச் செய்தி அனுப்பினர். சில தினங்களில் ஜெனரல் மிருகேந்திரரிடமிருந்து எங்களுக்கு வேண்டிய எல்லாவிதமான சௌகரியங்களையும் ஏற்பாடு செய்வதாகப் பதில் கிடைத்தது. நேபாளத்திற்கு வழி விசாரித்துக் கொண்டிருந்த எனக்கு, இச் செய்தி எவ்வளவு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கும் என்பதை நண்பர்கள் ஊகித்துக் கொள்ளலாம்.

கல்கத்தாவிலிருந்து மோகாமாகாட் என்னும் ஸ்டேஷனுக்கு ரயிலில் சென்றோம். இது சுமார் முன்னூறு மைல். நள்ளிரவில் இந்த ஸ்டேஷனில் இறங்கி, நடுக்கும் குளிரில், உயர்வகுப்புப் பிரயாணிகள் தங்கும்

இடமாக ஏற்பட்ட தகரக் கொட்டகையில் இரவைப் போக்கினோம். மறுநாள் அதி காலையில், சிறிய கப்பல் ஒன்றின் மூலமாய்க் கங்கையைக் கடந்து, அக்கரை சென்றோம். அப்போது பர்மாவில் ஐராவதி நதியில் பிரயாணம் செய்தது ஞாபகம் வந்தது. கல்கத்தாவி லிருந்து வட பீகாருக்கும், அதற்கப்பால் நேபாளத்திற் கும் போகும் பிரயாணிகள் இறங்கிக் கங்கையைக் கடப்ப தற்காக ஏற்பட்ட ஸ்டேஷன் மொகாமாகாட். இதைத் தவிர இந்த ஊரில், அதாவது இந்த ஸ்டேஷனில், வேறு எந்த விதமான விசேஷமும் இல்லை. கப்பலி லிருந்த பிரயாணிகளில் பெரும்பாலோர் வங்காளத்தி லிருந்து சிவராத்திரிக்காக நேபாளம் செல்லும் யாத்தி ரிகர்கள்; கல்கத்தாவில் வேலை பார்த்து, ரஜாவில் செல்லும் பீகாரி ஆபீஸ் பியூன்களும், கூர்க்க தர்வான் களும், நேபாளி ஆயாக்களுமே அதிகம். யாத்திரிகர்கள் அடிக்கடி, "போலோ பசுபதி நாத் கீ ஜே" என்று கோஷம் செய்தார்கள். நேபாளத்தில் முக்கியமான கடவுள் பசுபதி நாதர்; அவரைத் தரிசிக்கப் பல்லாயிரக் கணக்கான பக்தர்களின் கூட்டம் வருடந்தோறும் நேபாளத்துக்குச் செல்கிறது.

கங்கையின் மறு கரையிலிருந்து ரயிலேறி முசபர் பூர், ஸமஸ்திபூர் வழியாக, மாலை ஐந்து மணிக்கெல்லாம் ரக்ஸோல் ஸ்டேஷனை அடைந்தோம். இந்த இருநூறு மைல் பிரயாணத்தில், தூரம் அதிகமாக ஆக, கஷ்டமும் அதிகரித்துக் கொண்டே வந்தது. கல்கத்தாவிலிருந்து புறப்படும்போதே மூன்று தினங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை மூட்டை கட்டிக்கொண்டு புறப்பட்டோம். முதல் நாளிரவு நன்றாய்ச் சாப்பிட்டோம். மறுநாள் காலையில், இப்பொழுது சாப்பிடலாமா அல்லது இன்னும் சிறிது நேரம் கழித்துச் சாப்பிடலாமா என்று

யோசனை செய்துகொண்டே, மூன்று அல்லது நான்கு மணி நேரத்தைப் போக்கிவிட்டோம். பிறகு எங்கள் யோசனைக்கு இடமேயில்லை. ஏனென்றால் வண்டியில் கூட்டம் தாங்கமுடியவில்லை. பாத்திரத்திலுள்ள சாப்பாட்டை எடுப்பதோ, அல்லது கூட்டத்தின் முன் சாப்பிடுவதோ எங்களால் இயலாத காரியம்.

எங்கள் கம்பார்ட்மெண்டில் பதினைந்து பிரயாணிகளும், முப்பது பிரயாணிகளுக்குரிய மூட்டைகளும் இருந்தன. கீழே உள்ள மெத்தையில், சில சமயங்களில் இரண்டு வரிசையாக உட்கார்ந்திருந்தோம். விதம் விதமான மனிதர்கள் ஏறினார்கள். தொந்தி பெருத்த மார்வாரிகள், மணக்கோலம் பூண்ட மாப்பிள்ளைகள், அதிகாரத் திமிர் படைத்த உத்தியோகஸ்தர்கள், அழுக்கு வேஷ்டியையே கட்டும் கிராமவாசிகள், பணத்திலே புரளும் டில்லி வைர வியாபாரிகள் ஆகிய பல வகையோர். எங்களுடன் பிரயாணம் செய்தவர்களில் இரண்டொருவரைத் தவிர, மற்றவர்களிடம் இரண்டாவது வகுப்பு டிக்கட்டுகள் இல்லை. இம்மாதிரியான திருவிழாக்களில் இரண்டாவது வகுப்பில் பிரயாணம் செய்ய, இரண்டாவது வகுப்பு டிக்கட் வாங்கவேண்டிய அவசியமில்லையென்று தெரிகிறது! ஏதாவது ஒரு டிக்கட்டை வாங்கிக் கொண்டு, உயர்ந்த வகுப்புக்களில் பிரயாணம் செய்வதற்குத் தடை யிருந்ததாகத் தெரியவில்லை. ரயில்வே அதிகாரிகள் டிக்கட்டுப் பரிசோதனை செய்வதே இயலாத காரியம்.

கங்கைக்கு வடக்கே யுள்ள இந்த ரயில்வேக்கு அயோத்தி - திருகட் ரயில்வே என்று பெயர். பெரும்பாலும் எல்லா ஸ்டேஷன்களையும் புதிதாய்க் கட்டியிருக்கிறார்கள். இந்த ரயில் கம்பார்ட்மெண்டுகளில், 'ஜன்னல்களுக்குக் கொக்கி இருக்கிறது; அதை

உபயோகிக்கும் விதத்தைக் கார்டு விளக்குவார்' என்று பலகைகள் காணப்பட்டன! இந்த ரயில்வே ஸ்டேஷன்களிலே நல்ல சாப்பாடும், நல்ல சமாசாரப் பத்திரிகையும் கிடைப்பது மிகவும் கஷ்டம்.

ஸ்கௌலி என்ற இடத்தில் வண்டி மாறுவதற்காக எல்லோரும் இறங்கி, மறு வண்டியில் ஏறுவதற்காகச் சென்றோம். ஆனால் அந்த வண்டியில் ஏற்கனவே ஜனங்கள் நிரம்பியிருந்தார்கள். கதவெல்லாம் ஜனங்கள்; வண்டியின் மேலே, ஜனங்கள். கைப்பிடியைப் பிடித்துக்கொண்டு கதவருகே நிற்கக்கூட இடமில்லை. பத்து நிமிஷம் இங்கும் அங்குமாக ஓடினோம். எங்களுடைய சாமான்கள் மொத்தம் பன்னிரண்டு. எங்களையும் சாமான்களாகக் கருதினால் மொத்தம் பதினைந்து; ஏனென்றால் பிரயாணிகளுக்கும், சாமான்களுக்கும் அந்த ரயிலில் வித்தியாசமேயில்லை.

சாமான்கள் பிளாட்பாரத்திலிருக்கின்றன. சுவாமிநாதன் மட்டும், இரண்டாவது வகுப்புக் கம்பார்ட்மெண்ட் கதவில், கைப் பிடியைப் பிடித்துக்கொண்டு ஊசலாடுகிறார். இந்த ரயில் தவறினால், இருபத்துநான்கு மணி நேரம் அந்த ஊரிலேயே தங்கவேண்டும். அந்த ஊரில் தங்குவதை விட ரயிலில் கஷ்டப்படுவது மேல். சாமான்கள் இல்லாவிட்டால் ஒருவாறு சமாளித்துக் கொள்ளலாம். பன்னிரண்டு சாமான்களைப் பத்திரமாக ரயிலேற்றுவது பெரும் பிரச்சினையாகிவிட்டது. பிரேக் வான் இருப்பது அப்பொழுதுதான் ஞாபகத்துக்கு வந்தது. கார்டின் தயவைச் சம்பாதித்து, பிரேக்வானைத் திறந்து, சாமான்களை உள்ளே வைத்தோம். தண்டபாணிஐயரும், நானும் அந்த வண்டியிலேயே ஏறிக் கொண்டோம். பிரேக் வானைத் திறந்த ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் பல வங்காளப் பெண்களும் மற்றவர்களும்

மூட்டை முடிச்சுக்களுடன் ஏறிக் கொண்டார்கள். நாங்கள் நிற்பதற்குக்கூட இடமில்லாமல் திண்டாடும் நிலை ஏற்பட்டது. இந்நிலையில் டபேதார் ஒருவன் பெரிய பெரிய மூட்டைகளைக் கொண்டுவந்தான். வண்டிக்குள் நின்று கொண்டிருந்த பிரயாணிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து, சாமான்களைப் புதிதாக யாரும் வண்டிக்குள் கொண்டுவரக் கூடாது என்று சண்டை போட்டோம். விட்டுப்போன எங்களுடைய சாமான்கள் ஏதாவதிருந்தால், அவைகளை எப்படியும் உள்ளே கொண்டுவந்து விடுவோம். புதிதாக யாராவது வுந்தால் சண்டைக்குக் கிளம்பி விடுவோம். எங்களுடைய சுயநலத்தைப் பார்க்கப் பார்க்க, எங்களுக்கே வெட்கமாயிருந்தது.

பிரேக் வான் என்றால் உங்களுக்குத் தெரியுமல்லவா? எல்லாப் புறத்திலும் மூடப்பட்ட காற்று வராத, இருள் நிறைந்த, துர் நாற்றமுள்ள, தூசு படிந்த கூட்ஸ் வண்டி. இந்த வண்டியில் எத்தனை ரகமான சாமான்கள் ஏற்றுமதியாகியிருக்கின்றனவோ, அத்தனை ரகச் சாமான்களின் தூசியும் இதில் படிந்திருக்கிறது. வண்டியைச் சுத்தம் செய்து, வருடக் கணக்குகள் ஆயிருக்கும் போலும். ஒருபுறம் கையை வைத்தால், கை மஞ்சள் நிறமாகி விடுகிறது. அதே கையை மறுபுறத்தில் வைத்தால் உடனே அது சிவப்பாக மாறிவிடுகிறது. மற்றோர் இடத்தில் வைத்தால் கருப்பாக மாறுகிறது. இது தூசிகளின் மகிமையே தவிர வேறொன்றுமில்லை.

உண்மையிலேயே நாங்கள் இடமில்லாமல் திண்டாடினோம். சாமான்களை ஒருபுறம் மலைபோலக் குவித்தோம். கீழேயும் சாமான்களைப் போட்டு, அவற்றின் மேல் உட்கார்ந்து கொண்டோம். நாகரிகம்

வாய்ந்த தோற் பெட்டிகள், நாற்காலிகளைப்போல உபயோகமாயின. கூட்டம் அதிகமாயிருந்ததால், புழுக்கமும் துர்நாற்றமும் உண்டாயிற்று. காற்று வர வழியில்லை. ஒருவர் விடும் மூச்சு மற்றொருவர் மேல் பட்டது. உள்ளே இருந்த சில பெண்கள், கஷ்டம் தாங்காமல் கண்ணீர் விட்டார்கள். சிலர் அழுதார்கள், அழுகையும் கூச்சலும் பலத்தது.

ஆனால், அந்த டபேதார் மட்டும் எங்களை விட வில்லை. எப்படியாவது சாமான்களை எங்களுடன் திணித்துவிடுவது என்று முடிவு செய்தான். எவ்வளவோ சொல்லிப் பார்த்தோம். அவனுக்கு அறிவில்லாவிட்டாலும் பலமிருந்தது. பெரிய மூட்டை ஒன்றைப் பலவந்தமாக என்மீது வைத்துப் பலங் கொண்ட மட்டும் தள்ளினான். மூட்டை உள்ளே வராமல் நானும் எதிர்த்துப் போராடினேன். கடைசி யில் அவன்தான் ஜெயித்தான். இந்த மூட்டை என்னைத் தாண்டி, உள்ளே யிருந்த பெண்களின் மீது விழுந்தது. அவர்கள் அழ ஆரம்பித்து விட்டார்கள். இதைப் பார்த்ததும் அந்தப் பெரிய மூட்டையை நானே சிரமத்தோடு எடுத்து, அந்த டபேதாரை நோக்கி வீசினேன். இவ்விதமாகப் பட்ட கஷ்டங்கள் எத்தனையோ!

பசி வர வர அதிகரித்தது. சிறிய தகரப் பெட்டி யில் சில முறுக்குகள் இருப்பது ஞாபகத்துக்கு வந்தது. ஒருவாறாக இச்சிறு பெட்டியைத் தேடி எடுத்தேன். தண்டபாணி ஐயர், பூஜை செய்யாமல் சாப்பிடுவதில்லை யென்று கூறிவிட்டார். சுவாமிநாதனோ வேறு வண்டியில் கூட்டத்தோடும் பசியோடும் சண்டை போடுகிறார். நான் மட்டும் முறுக்குகளைச் சாப்பிட

ஆரம்பித்தேன். முறுக்குகள் முழுவதும் தீர்ந்தன; ஆனால் பசி தீரவில்லை.

வண்டியும் ஒருவாறு நகர்ந்தது. நான்கு மணி நேரத்தில் 17 மைல் தூரமுள்ள ரக்ஸோலை அடைந்தோம். ரக்ஸோல் சம்பரான் ஜில்லாவில் உள்ள ஒரு வியாபார ஸ்தலம். காந்திஜியின் சரித்திரத்தில், சம்பரான் சத்தியாக்கிரகத்தைப் பற்றிப் படித்திருக்கிறோம் அல்லவா? அந்தச் சம்பரான் ஜில்லாதான் இது. சம்பரான் ஜில்லாவுக்கும், நேபாளத்துக்கும் உள்ள எல்லையில் ரக்ஸோல் இருக்கிறது. இவ்வூரில் சில பகுதிகள் நேபாளத்தைச் சேர்ந்தவை. சில ஆலைகளும், நேபாள அரசாங்கக் காரியாலயங்களும், நேபாள பாங்கியின் கிளையும் இங்கு இருக்கின்றன. இவ்வூரிலிருந்துதான் நேபாள ராஜதானியை நோக்கிச் செல்லும் நேபாள அரசாங்க ரயில்வே ஆரம்பமாகிறது. திராய் என்று சொல்லப்படும் இமயமலை அடிவாரத்திலுள்ள சமவெளிக் காட்டுப் பிரதேசம் ரக்ஸோலிலிருந்து பத்து மைல் தூரத்தில் ஆரம்பமாகிறது. ரக்ஸோல் ஸ்டேஷனின் ரயில்வே பாலத்திலிருந்து, வடக்கே பார்த்தால், அடர்ந்த திராய் காடுகளும், காடடர்ந்த மலைகளும், அவற்றின் பின்னால் பனி உறைந்த இமய மலைச் சிகரங்களும் தோற்றமளிக்கும். அயோத்தி திருகட் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஒரு பர்லாங் தூரத்தில் நேபாள ரயில்வே ஸ்டேஷன் காணப்பட்டது. சாமான்களை யெல்லாம் ஸ்டேஷனிலேயே வைத்து விட்டு, தண்டபாணி ஐயரும் சுவாமிநாதனும் ஊருக்குள் சென்றார்கள்.

இரண்டு மணி நேரம் கழித்து, எனக்கு முன் பின் தெரியாத ஒருவன் என்னிடம் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்தான். அதில் என் பெயர்

எழுதப் பட்டிருந்தது. இந்த ஊரில் நமக்குக் கடிதம் எழுதுபவர் யார் என்று ஆச்சரியத்தோடு கடிதத்தைப் பிரித்துப் பார்த்தேன். உள்ளூர் முசாபரி பங்களாவில் இடம் இருக்கிறது என்றும், சாமான்களை எடுத்துக் கொண்டு அங்கு வரும்படியும் நண்பர் சுவாமிநாதன் எழுதியிருந்தார்.

அன்றிரவு முசாபரி பங்களாவில் கழிந்தது. மறு நாள் காலை நான்கு மணிக்கே எழுந்து பிரயாணத்துக்கு ஏற்பாடு செய்தோம். ரக்ஸோலில் ஜட்கா வண்டி கிடையாது. அந்த ஊர் வண்டிகளுக்கு **எக்கா** என்று பெயர். பார்வைக்கு ரதத்தைப் போலிருக்கும். இந்த எக்காவில் பிரயாணம் செய்வது சுலபமான காரியம் அல்ல. சில சமயங்களில் நமது கால்களே நமது வண்டிச் சக்கரத்தில் அகப்பட்டுக்கொள்ளும். எக்கா வை இழுக்கும் மிருகமும் குதிரையைப் போலத்தான் சில சமயங்களில் தோற்றமளிக்கிறது. எக்காவில் சாமான்களை ஏற்றிவிட்டு, கையில் அரிக்கன் லாந்தரை எடுத்துக்கொண்டு, நடுக்கும் குளிரிலே நேபாள ரயில்வே ஸ்டேஷனை நோக்கிச் சென்றோம். ரயில் வரச் சிறிது நேரம் இருந்தது. ரயில்வே பாதையை அடுத்து இரண்டு பர்லாங் தூரம் வரையில் இரவு முழுதும் ஜனங்கள் படுத்திருந்தனர். ரயில், ஸ்டேஷன் பிளாட் பாரத்துக்கு வருவதற்கு முன்னமே, வழியில் நிற்கும் ஜனங்கள் ஏறிக்கொள்வார்கள் என்று நாங்கள் அறிந் தோம். பிளாட்பாரத்திலிருந்து ஒரு பர்லாங் தூரத் தில், ரயில் வரும் திக்கை நோக்கி எதிர்பார்த்து நின் றோம். இருட்டிலே ரயில் வந்தது. தண்டபாணி ஐயரும் நானும், சாமான்களை வண்டிக்குள் வைத்தோம். சுவாமி நாதன் சாமர்த்தியமாக டிக்கட் வாங்கிவிட்டார்.

2

அதுவும், சிவராத்திரிக்காக 'கன்செஷன்' டிக்கட்! ஆயிரக்கணக்கான பிரயாணிகள் ரயிலை முற்றுகை யிட்டுக்கொண்டிருக்கும் பொழுது, நாங்கள் எவ்வாறு சமாளித்தோம் என்பது எங்களுக்கே ஆச்சரியமா யிருந்தது! எல்லாம் பசுபதிநாதரின் அருளைத் தவிர வேறொன்றுமில்லை!

இந்த நேபாள அரசாங்க ரயில்வேயின் மொத்த நீளம் முப்பது மைல். ரக்ஸோலில் புறப்படும் ரயில், முதலில் ஆறுவது மைலில் உள்ள பீர்கஞ்ஜ் என்னுமிடத் தில் நிற்கிறது. பீர்கஞ்ஜ், நேபாள அரசாங்கத்தில் இரண்டாவது முக்கிய பட்டணம். இங்கு நேபாள அரசாங்கத்தாருக்குச் சொந்தமான ஆலைகள் கட்டப் பெறுகின்றன. பெரிய கட்டிடங்கள் இந்த ஊரை அழகு செய்கின்றன. ஏராளமான வியாபாரிகள் இங்கிருக்கிறார்கள். கடைசி ஸ்டேஷன் அம்லேக் கஞ்ஜ் என்பது. சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்தான் ரயில் போட்டிருக்கிறார்கள். இந்த ரயில்களும் நீலகிரி ரயிலைப்போல மிகச் சிறியவை. ரயில் போடுவதற்கு முன்னே இவ்வழியில் நடந்தோ அல்லது குதிரை வண்டியிலோ செல்லவேண்டும். மழை காலத்தில் இவ் வழியில் நடந்து சென்றால் மலேரியா சுரத்திற்கு இரையாக நேரிடும். மற்றக் காலங்களில் இந்தப் பகுதி வேட்டையாடுவதற்கு உபயோகப்படும்.

ரக்ஸோலைப் போலவே, பீர்கஞ்ஜிலும் ஆயிரக்கணக் கான யாத்திரிகர் பிளாட்பாரத்தில் காத்திருந்தனர். இவர்களில் சிலர் இரண்டு மூன்று நாட்களாய்க் காத் திருப்பதாய்த் தெரியவந்தது. ரயில்வே அதிகாரிகள் தங்களால் இயன்ற அளவு உதவி செய்தார்கள். சாதாரண காலங்களில் இந்த ரயில்வேயில் தினந் தோறும் ஒரு வண்டிதான் ஓடுவது வழக்கம். எனவே

சிவராத்திரிக் கூட்டத்தைச் சமாளிக்கப் போதுமான வண்டிகளும் என்ஜின்களும் இல்லை. மூடிய கூட்ஸ் வண்டிகளையும், மூடப்படாத கூட்ஸ் வண்டிகளையும் எங்கள் ரயிலில் இணைத்து, அதில் பிரயாணிகளை ஏற்றினர். இவ்வளவு பேரையும் இழுத்துக்கொண்டு மணிக்கு ஐந்து மைல் வேகத்தில் ரயில் நகர்ந்தது.

கடைசியாக அம்லேக் கஞ்ஜ் ஸ்டேஷனை அடைந்தோம். வழியில் சாப்பாடு என்ற பேச்சே கிடையாது! செய்திப் பத்திரிகைகளைப் பார்க்க முடியாது. அம்லேக் கஞ்ஜ் சிறிய இடம். சாதாரண காலங்களில் பஸ், லாரி சொந்தக்காரர்களின் பிரதிநிதிகளைத் தவிர வேறு ஒருவரும் அங்கிருப்பதில்லை. யாத்திரிகர்களுக்காக ஒரு தரும சாலையும், சில கீற்றுக் கொட்டகைகளும், திருவிழாக் கடைகளும் இருந்தன. ஜனங்கள் வீதியிலேயே அடுப்பு மூட்டி, உணவு தயாரிக்க ஆரம்பித்துவிட்டனர். சுகாதார வசதிகள் மிகவும் மோசம். நல்ல காலமாக ஒரு தண்ணீர்க் குழாய் மட்டும் இருந்தது. அங்கு எப்பொழுதும் கூட்டம் அதிகம். குளிப்பதற்கும் குடிப்பதற்கும் அந்தத் தண்ணீரைத்தான் உபயோகிக்கிறார்கள். உள்ளூர்க்காரர் ஒருவர் நடு வீதியிலேயே குளித்தார். நூற்றுக் கணக்கான ஜனங்களுக்கு மத்தியில் நடு வீதியில் குளிக்கிறோமே என்ற உணர்ச்சியே அவருக்கு இல்லை. வீதியின் குறுக்கே தண்ணீர் ஓடும். அதற்கு அருகே யாத்திரிகர் உட்கார்ந்திருப்பார்கள். பெரும்பாலான யாத்திரிகர்கள் பீகார் வாசிகள். இந்தக் கூட்டத்திலே ஒருவர் தமிழ் பேசினார். அவர் யாரென்று விசாரித்தோம். தமது பெயர் துரைசாமி ஆசாரி என்றும், திருவண்ணாமலையிலிருந்து வருவதாகவும், தமது மனைவியும் தாயாரும் தம்முடன் யாத்திரை செய்வ

தார்க்வும் அவர் கூறினர். தமிழைத் தவிர வேருெரு பாஷையும் அவருக்குத் தெரியாது!

அம்லேக் கஞ்ஜிலிருந்து பீம்பேடி சுமார் இருபத்தெட்டு மைல். மோட்டார் செல்லக்கூடிய சாலே ஒன்று அமைத்திருக்கிருர்கள். சுமார் நாற்பது மோட்டார்கள் பிராணிகளே ஏற்றிச் சென்று கொண்டிருந்தன. இவைகளில் பஸ் இரண்டு மூன்றுதான். மற்றவை மோட்டார் லாரிகள். இந்த லாரிகளில் பிரயாணிகளே அடைத்துக் கொண்டு சென்றது வேடிக்கையாயிருந்தது. பஸ் முதலாளிகள் சிவராத்திரியை நன்ருக்ப் பயன்படுத்திக் கொண்டு, பிரயாணிகளிடம் மூன்று ரூபாய் வரை டிக்கட்டுக்காக வாங்குகிருர்கள்.

பகல் ஒரு மணிக்கு அம்லேக் கஞ்ஜை விட்டுப் புறப்பட்டோம். வழியில், பாதை மலேகளேக் குடைந்து சென்றது. குரங்காட்டிக்ளுக்கும், கரடி வித்தைக்காரர்களுக்கும், சிவராத்திரியின்போது நல்ல அதிர்ஷ்டம். போகிற வழியில் உள்ள கிராமங்க்ளில் எல்லாம், இவர்கள் வித்தை காண்பித்துப் பணம் சேர்ப்பார்கள். வருடத்துக்கு ஒரு முறை, வெளியூர் ஜனங்களேப் பார்க்க, உள்ளூர் ஜனங்களுக்கும் உற்சாகம் உண்டாகிறது. மூன்று மணி நேரத்தில் 2000 அடி உயரத்தில் உள்ள பீம்பேடி என்ற ஊரை அடைந்தோம்.

பீம்பேடியில் இரண்டு தர்மசாலேகள் இருக்கின்றன. நாங்கள் மோட்டாரை விட்டுக் கீழே இறங்கியதும், நாகரிகமாக உடையணிந்த நேபாள இளேஞர் ஒருவர் எங்களுடன் ஆங்கிலத்தில் பேசினர். ஒரு தர்மசாலேயில் எங்களுக்கு ஏற்பாடு செய்தார். அங்கு விளக்கு எதுவுமில்லே. தண்டபாணி ஐயர், இந்த இளேஞரைத் தர்மசாலே மானேஜர் என்று கருதி உத்தரவிட ஆரம்பித்தார். அந்த இளேஞர், தாம் நேபாளக் காலேஜில்

படிக்கும் மாணவர் என்றும், தமது நண்பர்கள் சிலரை வரவேற்பதற்காக அங்கு வந்திருப்பதாகவும் கூறினர்!

இந்த இளைஞரின் பெயர் கோபால் ராஜ் பந்தாரி. இவருடைய உதவியால், அந்த ஊரிலிருந்த ஒரே ஹோட்டலுக்கு ஜாகையை மாற்றிக்கொண்டோம். பீம்பேடியிலிருந்து காட்மாண்டு இருபது மைல். இதற்கிடையில் மூன்று மலைகளைத் தாண்டவேண்டும். பிரயாணிகளின் மூட்டையைத் தூக்க ஏராளமான கூலிகள் இருக்கிருர்கள். ஒரு கூலி, எண்பது பவுண்டு நிறையுள்ள சாமான் வரைதான் தூக்குவான். ஒரு கூலிக்கு, மேலே செல்ல நான்கு ரூபாய் கொடுக்க வேண்டும்.

இந்தக் கூலிகளுக்கு ஏற்பாடு செய்யும் பொறுப்பை அரசாங்கத்தார் ஒரு கண்ட்ராக்டரிடம் விட்டிருக்கிருர்கள். அவருக்கு **பரியா நாயக்** என்று பெயர். இங்குள்ள மார்வாரி நம்மிடம் நான்கு ரூபாய் வாங்கிக்கொண்டு, கூலியின் பெயரையும், நம்பரையும் எழுதி நம்மிடம் ஒரு ரசீது கொடுக்கிருர். நாம் காட்மாண்டு நகரை அடைந்ததும், நம் சாமான்களைப் பெற்றுக் கொண்டதர்க இந்த ரசீதில் கையெழுத்திடவேண்டும். நமது கையெழுத்துடன் கூடிய ரசீதைக் கூலிக்காரன் பரியா நாயக் ஆபீசில் கொடுத்து, அவனுக்குள்ள கூலித் தொகையைப் பெற்றுக்கொள்வான். நமது சாமான்களைப் பத்திரமாக நம்மிடம் சேர்ப்பிப்பது இந்தக் கண்ட்ராக்டரின் பொறுப்பு. கூலிகளிடம் நாமே நேரில் கூலியைப் பேசிக்கொண்டு, பரியா நாயக்குக்கு கூலி ஒன்றுக்கு நாலணு வீதம் கொடுத்துவிட்டு, அமர்த்திக் கொள்ளலாம். இம்மாதிரியான கூலிகள் தூக்கிச் செல்லும் சாமான்களுக்குப் பரியா நாயக் பொறுப்பாளி அல்ல. பொதுவாக யாத்திரிகர்கள்

பரியர் நாயக் மூலம் கூலிகளை ஏற்பாடு செய்வதுதான் நல்லது.

மலைப் பிரயாணம் மிகவும் கஷ்டமானதென்று கேள்விப்பட்டோம். சுவாமிநாதன், நடந்து செல்வது என்ற உறுதியுடன் இருந்தார். நான் டோலியில் செல்வது என்ற உறுதியுடன் இருந்தேன். ஆனால் தண்டபாணி ஐயர் தான், டோலியில் செல்வதா அல்லது நடந்து செல்வதா என்று யோசித்துக்கொண்டே யிருந்தார். கடைசியாக நடந்து செல்வது என்ற முடிவுக்கு வந்தார்.

என்னைத் தூக்கிச் செல்வதற்கு டோலிக்காரர்களை ஏற்பாடு செய்யவேண்டுமல்லவா? அந்த ஊர் டோலிக்கு **வில்லன் காட்** என்று பெயர். சாதாரணமாக டோலியை நான்கு பேர் தூக்குவது வழக்கம். கனமுள்ளவர்களை ஐந்து அல்லது ஆறுபேர் தூக்குவார்கள். டோலியை வாடகைக்குப் பேசினால், அவர்கள் டோலியில் செல்லவிருக்கும் ஆளைப் பார்க்கவேண்டும் என்கிறார்கள். என்னைப் பார்த்ததும், அவர்கள் முகம் சட்டென்று மாறுகிறது. என்னைத் தூக்க ஆறு கூலிகள் வேண்டுமென்றார்கள். அன்று மாலை முழுவதும், கூலிக்காரர்கள் என்னைப் பார்ப்பதும், பார்த்தவுடன் மாட்டேன் என்று கூறுவதுமாகவே யிருந்தது. ஒரு டோலிக்காரன் என்னைத் தூக்க ஐந்து கூலிகள் வேண்டுமென்றான். நான்கு கூலிகள் தூக்குவதற்கு மேல் கனமாயிருப்பது அவமானம் என்று கருதினேன். நான்கு கூலிகள் என்னைத் தூக்குவதாயிருந்தால் அவர்களுக்கு ஐந்து கூலிகளுக்குள்ள தொகையைக் கொடுக்கவும் தயாராய் இருந்தேன். கடைசியாக ஒரு டோலிக்காரன் நான்கு கூலிகளைக் கொண்டே என்னைத் தூக்குவதாக ஏற்பாடுசெய்தான். நான்கு கூலிகளுக்கும் மொத்தக் கூலி பதினாறு ரூபாய் தான்!

பீம்பேடியில், டாக்டரிடம் நாங்கள் உடல் நலத்தோடு இருப்பதாகப் பாஸ் வாங்கிக்கொண்டோம். மறுநாள் காலை ஆறு மணிக்குப் பீம்பேடியை விட்டுப் புறப்பட ஏற்பாடு செய்தோம். ஆனால் விடாமல் மழை பெய்ய ஆரம்பித்துவிட்டது. பகல் ஒரு மணிக்குத்தான் மழை விட்டது. பீம்பேடியிலிருந்து புறப்பட்ட ஆயிரக் கணக்கான யாத்திரிகர்களுடன் பிரயாணம் செய்தோம். டோலியில் இருப்பது சிறிது சிரமமாக இருந்தது. மலை மீது ஏற ஏற அழகான காட்சிகள் தோற்றமளித்தன. சில இடங்களில் கீழே பார்த்தால் இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் அடிப் பள்ளமிருந்தது. சில சமயங்களில் இதைப் பார்க்க மிகவும் பயங்கரமாக இருக்கும். மேலே பார்த்தால், மலைக்கு மலை செல்லும் அற்புத 'ரோப்' ரயில். இவ்வளவு நீளமுள்ள கம்பி ரயில்வேயை நான் இதுவரை பார்த்தது கிடையாது. இந்த ரயிலில் ஆட்களை ஏற்றுவதில்லை. சாமான்களை மட்டுமே ஏற்றிச் செல்கிறார்கள்.

பீம்பேடியை விட்ட இரண்டு மணி நேரத்துக்கெல்லாம், மறுபடியும் மழை பெய்ய ஆரம்பித்துவிட்டது. எங்கள் வேட்டி சட்டை யெல்லாம் நனைந்துவிட்டன. கனமான கம்பளிக் கோட் இன்னும் அதிகமாய்க் கனக்க ஆரம்பித்தது. அரைமணி நேரத்துக்கெல்லாம் சிஸா பானி கடி என்னுமிடத்துக்கு வந்தோம். இதுதான் நேபாளத்தின் வாயில்.

இங்கே எங்களுடைய சாமான்களைச் சோதனை செய்தார்கள். டாக்டரிடம் வாங்கிய பாஸ்களை இங்குள்ள அதிகாரியிடம் கொடுத்து, அனுமதிச் சீட்டுப் பெற்றுக் கொண்டோம். இதற்கு ராஜ்தானி என்று பெயர்.

சிஸா பானி கடியிலிருந்து இரண்டு மணி நேரத்தில் குலிகானி வந்துசேர்ந்தோம். பீம்பேடியிலிருந்து குலிகானி

சுமார் நான்கு மைல். இந்த ஊர், பள்ளத்தாக்கில் ஆற்றங்கரையோரத்தில் அழகாக அமைந்திருக்கிறது. நூற்றுக்கணக்கான யாத்திரிகர் தங்குவதற்கு வசதியுள்ள பெரிய தர்மசாலையைக் கட்டியிருக்கிறார்கள். ஆனால் மின்சார விளக்கு வசதியில்லை.

குலிகானியைச் சேர்ந்ததும் மீண்டும் மழை பெய்ய ஆரம்பித்துவிட்டது. அன்றிரவு அங்குத் தங்குவதென்று முடிவு செய்தோம். தர்ம சாலையில் தங்க இடமில்லை. யாத்திரிகர் தொகை ஐயாயிரத்துக்கு மேலிருக்கும். இருள் நெருங்க நெருங்கக் குளிரும் நெருங்கிற்று. குளிரும் மழையும் சேர்ந்தவுடன் எங்களால் தாங்க முடியவில்லை. பீம்பேடியில் எங்களைச் சந்தித்த கோபால் வந்து சேர்ந்தார். அவருடைய உதவியால் மிக்க சிரமத்தோடு ஒரு வீட்டுத் திண்ணையை வாடகைக்கு அமர்த்தினோம். ஏற்கனவே அங்கு நான்கு யாத்திரிகர்கள் தங்கியிருந்தார்கள். அந்தத் திண்ணை சுமார் பத்தடி அகலமும் பதினைந்து அடி நீளமும்தான் இருக்கும். அதில் நாங்கள் மூவரும் நன்றாய்க் கால் நீட்டிப் படுத்துக்கொண்டோம். எங்களுடைய மெத்தை உறையும், வேட்டிகளும் மழையில் நன்றாக நனைந்திருந்ததால், மெத்தைக்குள்ளிருந்த போர்வைகளை எடுத்துப் போர்த்திக் கொண்டோம். இந்தப் போர்வைகள் அந்தக் குளிரிலிருந்து எங்களைக் காப்பாற்ற முடியவில்லை. நடுங்கிக்கொண்டே படுத்திருந்தோம். கோபால் சிறிது விறகு வாங்கி நெருப்பு மூட்டினார். திண்ணை முழுதும் புகை நிரம்பிற்று. கோபாலுக்குப் படுக்க இடமில்லை. நனைந்து போன எங்களுடைய கம்பளிக் கோட்டுகளையும், அவருடைய வஸ்திரங்களையும் நெருப்பில் உலர்த்திக்கொண்டே இரவைப் போக்கினார். குளிரும் மழையும் தாங்க

முடியாமல் அன்றிரவு ஜனங்கள் பட்ட கஷ்டம் சொல்லி முடியாது. எழுபது வயதுக்கு மேற்பட்ட கிழவி யொருத்தி, இரவு முழுதும் எங்கள் திண்ணையில் குளிர் காய்ந்துகொண்டிருந்தாள். இரவு எட்டு மணி யிருக்கும். மழை பெய்துகொண்டே யிருந்தது. நல்ல இருள். திண்ணையில் படுத்திருக்கும் எங்கள் மீது சாரல் அடிக் கிறது. ஒரு பரதேசி வந்து இடங்கேட்டான். இல்லை என்று கூறிவிட்டோம். நடுக்கும் குளிரில் அவன், " எப்படியாவது இடம் கொடுங்கள். நான் பணம் தரு கிறேன் " என்றான்! நம்மிடம் யாசகம் வாங்கும் ஒரு எளிய பரதேசி, தங்கியிருப்பதற்குப் பணம் தருவதாகக் கூறினால், மழையும் குளிரும் எவ்வளவு கடுமையாக இருந்திருக்கும் என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளலாம்.

மறுநாள் காலையில் மழை நின்றுவிட்டது. மழை நின்ற சந்தோஷத்தில், திண்ணைக்கு ஐந்து ரூபாய் அநியாய வாடகை கொடுத்ததைக் கூட மறந்துவிட் டோம். குலிக்கானியிலிருந்து சிட்லாங் வழியாகச் சந்திர கிரி மலையை நெருங்கினோம். வழியில் பதினாயிரக் கணக் கான யாத்திரிகர்கள், தொடர்போல வந்தது அற்புத மான காட்சியாக இருந்தது. வழியெல்லாம், பயிரிடப் பட்ட நிலங்களையும், யாத்திரிகர்களுக்காக உற்சவத் தின்போது மட்டும் திறந்து வைத்துள்ள தேத் தண்ணீர்க் கடைகளையும் பார்த்தோம். கூலிகளும், டோலிக்காரர்களும் அடிக்கடி தங்கித் தங்கிச் சிகரெட் குடிப்பார்கள்!

சிவராத்திரிக்கு இவ்வருடம் வந்த யாத்திரிகர் தொகை அறுபதினாயிரம். இவர்களில் பெரும்பாலோர் பீகார் வாசிகள். மார்வாரிகளும், முக்கியமாக மார்வாரிப் பெண்களும் ஏராளம். சாது வேடம் பூண்டவர்களின்

தொகை ஐயாயிரத்துக்கு மேலிருக்கும். ஏழு வயதுக் குழந்தை முதல் எழுபது வயதுக் கிழவி வரையில், பலரும் உற்சாகம் குன்றாமல், கையில் கம்பொன்றை வைத்துக் கொண்டு, மிகவும் கஷ்டமான இப்பாதையில் பிரயாணம் செய்தது பார்க்க அதிசயமானதாகும். பசுபதி நாதரைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் ஒன்று தான், இத்தகைய செயற்கரிய காரியத்தைச் செய்யும் படி தூண்டிற்று. யாத்திரிகர்கள் வழிநெடுக, ஆங்காங்குள்ள சுனைகளில் நீராடி, சமையல் செய்து, சாப்பிட்டு இளைப்பாறி, மீண்டும் பிரயாணத்தைத் தொடங்குவார்கள். வழிநெடுக ஏராளமான சிற்றாறுகள் ஓடுகின்றன. இவைகளைக் கடக்க ஆடும் பாலங்களை அமைத்திருக்கிறார்கள்.

காலையில் குலிகானியிலிருந்து புறப்பட்ட நாங்கள் பகல் பன்னிரண்டு மணிக்கெல்லாம் மார்கோ சிட்லாங் பள்ளத்தாக்கை அடைந்தோம். அங்கிருந்த நேபாள உணவுச் சாலையொன்றில் சாப்பிட்டுச் சந்திரகிரியை நோக்கிச் சென்றோம். சந்திரகிரியின் உயரம் 7,500 அடி. உச்சியில் பனி உறைந்திருந்தது. இம் மலை மிகவும் செங்குத்தானது. நேபாளப் பிரயாணத்திலேயே மிகக் கஷ்டமானது இதுதான். இம்மலை உச்சிக்குச் சென்றால் அற்புதமான பெரிய பள்ளத்தாக்குக் காணப்படுகிறது. இந்தப் பள்ளத்தாக்குத்தான் நேபாளம். சந்திரகிரிமலை உச்சியிலிருந்து தோன்றும் காட்சி, உலகத்திலுள்ள மிக்க அற்புதமான காட்சிகளில் ஒன்றாகும்.

சந்திரகிரிமலை ஏறி, பிறகு பள்ளத்தாக்குக்குச் சென்றோம். மாலை நான்கு மணிக்கு டான் கோட் என்ற ஊரை அடைந்தோம். குலிகானியிலிருந்து, டான் கோட் சுமார் ஒன்பது மைல். டான் கோட்டில் ஏராளமான பஸ்களும், அருமையான வாடகை மோட்டார்களும்

நின்றன. ஒரு வர்டகை மேர்ட்டாரில் சாமான்களை வைத்துக் கொண்டு ஏழுமைல் தூரத்தில் உள்ள காட் மாண்டுக்குச் சென்றோம். ஏற்கனவே எங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த திரிபுரேசுவரர் கட்டிடத்தில் தங்கினோம்.

இமயமலையின் தென் சாரலில் ஐக்கிய மாகாணத்தில் அல்மோரா ஜில்லாவுக்கும், வங்காளத்தில் டார்ஜிலிங் ஜில்லாவுக்கும் மத்தியில் சுமார் 500 மைல் நீளமும், 100 மைல் அகலமும் கொண்ட பிரதேசம்தான் நேபாள ராஜ்யம். வடக்கில் பனி நிறைந்த இமயமலைகள், இந்த ராஜ்யத்திற்கும், திபெத்திற்கும் எல்லையாக இருக்கின்றன. தெற்கில் அயோத்தியும், வட பீகாரும் நேபாள ராஜ்யத்திலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்லும் வாயிற்படிகளாக அமைந்திருக்கின்றன. இந்த ராஜ்யத்தின் மொத்த விஸ்தீரணம் 65,000 சதுரமைல்; ஜனத்தொகை 64 லக்ஷம். ராஜ்யத்தின் வருமானத்தைப் பற்றி யாதொரு விவரமும் கிடைப்பதில்லை. அரசியலில் இது ஒரு தனி சுதந்திர நாடாக இருந்தபோதிலும், பூகோள ரீதியாக, காஷ்மீர் ராஜ்யத்தைப் போல இதையும் இந்தியாவின் பகுதி என்றே கூறவேண்டும்.

எவரஸ்ட், கஞ்சன்ஜிங்கா, தவளகிரி முதலிய இமய மலைச் சிகரங்கள் இந்த ராஜ்யத்திற்குள் அடங்கியவை. சாலிக்கிராமங்கள் கிடைக்கும் கண்டகி நதி, கௌதம புத்தர் பிறந்த உலும்பினி, சீதை பிறந்த ஜனகபுரி இவையெல்லாம் இந்த ராஜ்யத்திற்குள் இருக்கின்றன.

ஆனால் ஜனங்கள் சாதாரணமாக 'நேபாளம்' என்று சொல்லுவது இந்த ராஜ்யத்தின் தலைநகர் இருக்கும் ஒரு சிறிய பள்ளத்தாக்கைத்தான். இந்தப் பிரதேசந்தான் முன்காலத்திலிருந்து நேபாளம் என்று வழங்கி வருவது. இதன் விஸ்தீர்ணம் சுமார் 300 சதுர

மைல்தானிருக்கும். இதில் காந்திபுரி, பக்தபுரி, லலிதபுரி என்று மூன்று ராஜ்யங்கள் வெகு நாட்களாக இருந்து வந்தன. அவைகளே இப்பொழுது காட்மாண்டு (காஷ்டமந்திரம்), பட்கா்ம், பாட்டன் என்ற நகரங்களாக வழங்கி வருகின்றன. இந்த 'நேபாள'த்தின் ஜனத்தொகை 3,07,000.

சுல்தான் அலாவுதீன் கில்ஜி, மேவார் ராஜ்யத்தின் மேல் படையெடுத்துச் சித்தூரைத் தாக்கி அழித்த பொழுது, அங்கிருந்து இமயமலையில் அடைக்கலம் புகுந்து ராஜ்யங்களை ஸ்தாபித்த, ராஜபுத்ர வீரர்களில் ஒருவரான கும்பகர்ணர் என்பவரின் வம்சத்தைச் சேர்ந்தவர், தற்காலத்து நேபாள ராஜ்யத்தின் மகா ராஜாதி ராஜா திரிபுவன வீர விக்ரம் ஷா. அவருடைய முன்னோர்களில் ஒருவரான பிருத்வி நாராயண் ஷா என்பவர் பதினெட்டாம் நூற்றாண்டில் இருந்த இருபத்து நான்கு இமயமலை ராஜபுத்திர ராஜ்யங்களின் ஒன்றான கோர்க்கா என்ற ராஜ்யத்தின் அரசராயிருந்தார். இந்த ராஜ்யத்தின் ஜனங்களுக்குத்தான் கூர்க்கர் என்று பெயர். பிரித்வி நாராயண் ஷா மிகவும் திறமை வாய்ந்த போர் வீரர். கூர்க்கர்களின் படைப் பலத்தை விருத்தி செய்து, முதலில் நேபாளப் பள்ளத்தாக்கிலிருந்த காந்திபூர், லலித்பூர், பக்தபூர் ராஜ்யங்களையும், பின்னர் மற்ற மலை நாடுகளையும் ஜெயித்து, நேபாள ராஜ்யத்தை ஸ்தாபித்தார். அவர் காலத்தில் நேபாள ராஜ்யம் மேற்கே ஸட்லஜ் நதி வரையிலும் பரவியிருந்தது. மேற்கே சிம்லா, டேராடூன் அல்மோரா ஜில்லாக்களும், கிழக்கே டார்ஜிலிங், சிக்கிம் ஜில்லாக்களும், இந்த ராஜ்யத்தில் அடங்கி யிருந்தன.

நேபாளத்தில் அரசரைவிடப் பிரதம மந்திரிக்குத் தான் அதிகாரம் அதிகம். ராஜ்ய விவகாரங்களில் மகா

ர்ஜர்திரர்ஜா அல்லது 'பாஞ்ச் (ஐந்து) சர்க்கர்' என்ற பட்டமுள்ள அரசர் தலையிடுவது கிடையாது. பிரதம மந்திரிக்கு 'மகாரர்ஜர் தீன் (மூன்று) சர்க்கார்' என்ற பட்டமும் உண்டு. இவரே ராஜ்யத்தின் சகல காரியங்களையும் நேரில் நிர்வகித்து வருகிறார்.

அரசாங்கத்தின் முக்கியமான அதிகாரிகள் எல்லோரும் பிரதம மந்திரியின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பிரதம மந்திரி பதவியானது, பரம்பரையாக இறந்துபோன பிரதம மந்திரியின் புதல்வர்க்ள், சகோதரர்கள், சகோதரர்களின் புதல்வர்கள், இவர்க்ளில் யார் வயதில் மூத்தவரோ அவருக்குத்தான் உரியது. 19-ம் நூற்றாண்டின் மத்தியில் ஜங்பக்தூர் என்பவர் பிரதம மந்திரியாக இருந்தார். அவர் இரண்டு மூன்று தடவை ஐரோப்பா சென்று வந்து நேபாள அரசாங்கத்தைச் சீர்படுத்தினார். இப்பொழுது நேபாளத்தில் அரசு செலுத்தும் குடும்பத்தார் இவருடைய வமிசத்தைச் சேர்ந்தவராவர். இவர்க்ள் எல்லோருக்கும் 'சம்சேர் ஜங்பகதூர் ராணா என்பது குடும்பத்துப் பட்டப் பெயர். சாதாரணமாக, 'சம்ஷேர்' என்ற பட்டத்தை மாத்திரம் தங்களுடைய பெயருடன் சேர்த்துக் கொள்வார்கள்.

தற்போதுள்ள பிரதம மந்திரியின் பெயர் 'யுதா சம்ஷேர்'. 1929-ஆம் வருஷத்தில் இவருடைய சகோதரர் 'சந்த்ர சம்ஷேர்' இறந்தவுடன் இவர் பதவிக்கு வந்தார். இவருடைய பெயரைப் படிப்பதென்றால் சிரமமான காரியம். என்றாலும் முயன்று பாருங்கள்:

'ஹிஸ் ஹைனெஸ் ஓஜஸ்வி ராஜான்ய புரோஜ்வல நேபாள தாரா அதுல ஜ்யோதிர்மய த்ரிசக்தி-பட்ட அதிப்பிரபல கோர்க்கா தட்சிணபாகு பிருதுலாதீச ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மகாராஜா யுதா சம்ஷேர் ஜங் பகதூர் ராணா G.C.B.; G.C.L.H.; G.C.L.G.; G.S.E.I.; G.C.N.L.; G.C.S.S.;

M.L.; G.C.I.E.; G.K.R.K.; ஈத்தெய்ங் பாவ்டிங் சூன் சியான் லுச்சுயான் சியாங் ச்யாங்; ஆனரரி கர்னல் ஆப் ஆல் தி கூர்க்கா ரைபில்ஸ் ரெஜிமெண்ட்ஸ், பிரைம் மினிஸ்டர் அண்ட் சுப்ரீம் கமாண்டர் இன் சீப், நேபால்.'

* * *

நேபாளத்தில் பல ஜாதியாரும் பல வகுப்பினரும் இருக்கிறார்கள். கூர்க்கர் என்போர் ஒரு முக்கியமான ஜாதியார். இந்திய ராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப் படும் எல்லா நேபாளப் பிரஜைகளையும் கூர்க்கர் என்று தான் சொல்கிறார்கள். ஆனால் நேபாளத்தில் கூர்க்கர் என்ற சொல் அதிகமாக உபயோகத்தில் இல்லை. நேபாள அரசாங்கத்தில், அந்நாட்டுப் பிரஜைகள் எல்லோரையுமே நேபாளிகள் என்றுதான் சொல் கிறார்கள்; நாயர் வீரர்கள் என்றும் சொல்கிறார்கள். திபேத்தியர், லெப்சாஸ், ஷெர்ப்பாஸ் போன்ற மங்கோ லியரும் நேபாளத்தில் இருக்கிறார்கள். ரெய்ஸ், லிம்புஸ் போன்ற மங்கோலிய காட்டு மிராண்டிகளும் நேபா ளத்தின் கிழக்குப் பகுதியில் வசிக்கின்றனர்.

நேபாளப் பள்ளத்தாக்கு, சமுத்திர மட்டத்திருந்து 4,500 அடி உயரத்தில் இருக்கிறது. ஒரு காலத்தில் இது ஒரு பெரிய ஏரியாக இருந்ததாம்.

நேபாளத்தின் தலை நகரம் காட்மாண்டு. இதை அடுத்துப் பட்கான், பாட்டன் என்ற இரண்டு பெரிய ஊர்கள் இருக்கின்றன. காட்மாண்டு நாகரிகமான நகரம். நகரின் மத்தியில் மிகப் பெரிய மைதானம் ஒன் றிருக்கிறது. இதில் அறுபதினாயிரம் போர்வீரர் ஒரே சமயத்தில் அணிவகுத்து நிற்கமுடியும். காட்மாண்டில் அறுபதினாயிரம் போர்வீரர்கள் இருக்கிறார்கள். தினந்தோறும் ஆயிரக்கணக்கான போர்வீரர்கள் அணி வகுத்து நிற்கும் காட்சியைப் பார்க்கலாம்.

பெரும்பாலான வீரர்கள் மலைப் பக்கங்களிலிருந்து வருகிறார்கள்.

காட்மாண்டு நகரில் முக்கியமானது பசுபதி நாதரின் திருக்கோயில். ஊரையடுத்து இரண்டு மைல் தூரத்தில், வாக்மதி நதியின் கரையிலே பொன்னிறமுள்ள இந்த ஆலயம் அமைந்திருக்கிறது. கோயிலை அடுத்த பசுபதி வனம், அழகும் அமைதியும் நிரம்பியது. சிவராத்திரியின்போது பதினாயிரக் கணக்கான யாத்திரிகர்களடங்கிய பெருங் கூட்டம், கோயிலுக்குள் நுழைவதே மிகக் கஷ்டமாகி விட்டது. வேலைக்காரர் உதவியால் ஒருவாறு கோயிலுக்குள் சென்றோம். கூட்டம் அதிகமாயிருந்ததால் லிங்கத்தைப் பார்க்க முடியவில்லை. சுவாமிநாதனும், நானும் போட்டோப் படங்கள் பிடிக்க ஆரம்பித்தோம். இதைப் பார்த்துக் கொண்டிருந்த கோயில் அதிகாரி ஒருவர் சுவாமி நாதனின் காமிராவைப் பலவந்தமாகப் பிடுங்கிக் கொண்டு போய் விட்டார். பசுபதி நாதரைப் படம் பிடிக்கக் கூடாதென்று பலமாக ஆட்சேபித்தார். கடைசியாக நாங்கள் ஜெனரல் மிருகேந்திர சம்ஷேரின் விருந்தினர்கள் என்று, கூறிக் காமிராவைத் திரும்ப வாங்கிக் கொண்டோம். யாத்ரிகர்கள் வாக்மதியில் முழுகி அதன் தண்ணீரைச் செம்பிலே கொண்டுவந்து லிங்கத்தின் மீது ஊற்ற முயன்றனர். லிங்கத்துக்கு நேரே பெரிய நந்தி ஒன்று உண்டு. அந்த நந்தி பித்தளைத் தகட்டால் மூடப்பட்டிருந்தது. நமது ஊர் நந்திக்கும் அதற்கும் உருவத்தில் வித்தியாசமிருக்கிறது.

சிவராத்திரி கழிந்த சில தினங்களுக்குப் பிறகு மீண்டும் கோயிலுக்குச் சென்று பசுபதி நாதரைத் தரிசித்தோம். அங்கு பூஜை செய்யும் குருக்கள்மாரில் ஒருவர் கன்னட பாஷைக்காரர் என்று கூறினார்கள்.

லிங்கம் சுமார் நான்கடி உயரமிருக்கும். நான்கு புரத்திலும் நான்கு முகங்கள் உண்டு. கூடியவரை கோயிலைச் சுத்தமாய் வைத்திருக்கிறார்கள். ஏராளமான மலர்கள் இருந்தும் வர்சனையே கிடையாது. யாத்ரிகர்களுக்குச் சந்தனம், குங்குமம், புஷ்பம் முதலியவைகளைப் பிரசாதமாக வழங்குகிறார்கள்.

பக்தபூரில் முக்கியமானது தத்தாத்திரேயர் கோயில். போகிற வழியில் ஐந்து மாடிக் கோபுரத்தை யுடைய கோயிலொன்று இருக்கிறது. பசுபதி கோயிலை யடுத்துக் கோரக்நாதரின் கோயிலொன்று இருக்கிறது. லலித்பூரில் கிருஷ்ணன் கோயில் முக்கியமானது. இன்னும் ஏராளமான கோயில்கள் இருக்கின்றன. நேபாளத்தில் பார்க்குமிட மெல்லாம் கோயில்கள்; மாதம் தவறாமல் உற்சவங்கள்.

புத்தர் கோயில்களும் ஏராளமாய் இருக்கின்றன. இவைகளில் முக்கியமானது சுயம்பு நாதர் கோயில். இது காட்மாண்டுக்கு அருகே ஒரு அழகிய சிறு குன்றின் மீது இருக்கின்றது. இங்கே திபெத்திலிருந்து வந்திருக்கும் பௌத்த சன்னியாசிகள் வேத பாராயணம் செய்யும் அற்புதக் காட்சியைக் கண்டோம். பொன்னிற முள்ள ஐந்து புத்த விக்கிரகங்கள் வரிசையாக வைக்கப் பட்டிருந்தன. அவைகளுக்கு முன்னே எண்ணெய் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. சுமார் பதினைந்து பௌத்த சன்னியாசிகள், பழைய சுவடிகளை வைத்துக் கொண்டு, பக்தியோடு வாசித்துக் கொண்டிருந்தது அரிய தெய்விகக் காட்சியாய் யிருந்தது. போதி நாதர் கோயிலும் 1408-ம் வருடம் கட்டப்பெற்ற மச்சேந்திரர் கோயிலும் குறிப்பிட்த் தக்கவை.

நேபாளம் இந்துக்களின் ராஜ்யம். இந்துக்கள் எங்கிருக்கிறார்களோ அங்கு ஜாதிகளும் உண்டல்லவா?

நேபாளத்திலும் பிராமணர்கள் இருக்கிறார்கள். நேபாளப் பிராமணர்கள் வெங்காயம், வெள்ளைப்பூண்டு, தக்காளி முதலியவைகள் சாப்பிடுவதில்லை. ஆனால் மாமிசம் சாப்பிடுகிறார்கள்! நேபாளப் பிராமணர்கள், அரச குடும்பத்தாரின் கல்யாணம் முதலியவைகளுக்காக இந்தியாவுக்கு வரும் பொழுது, இந்நாட்டுப் பிராமணன் வெங்காயம் சாப்பிடுவதைப் பார்த்து, "ஐயோ பாவம், இவன் பிராமணனாய்ப் பிறந்து வெங்காயம் சாப்பிடுகிறானே!" என்று பரிதாபப் படுவார்களாம். நேபாளப் பிராமணர்கள், மாமிசம் சமைப்பதிலும் கெட்டிக்காரர்கள்! அரண்மனையில் சமைப்பவர்கள் பிராமணர்கள். அடிக்கடி அரண்மனையிலிருந்து எங்களுக்குச் சாப்பாடு வந்து கொண்டிருந்தது. இம்மாதிரி அருமையான சாப்பாட்டைச் சாப்பிட்டு எத்தனையோ வருடங்களாயின.

நேபாளத்துக்குத் தனி நாணயமுண்டு. அதற்கும் ரூபாய் என்றுதான் பெயர். ஒரு காலத்தில் பிரிட்டிஷ் இந்தியாவின் நூறு ரூபாய்க்கு நேபாள ரூபாய் நூற்றுப் பதினைந்து வரையிலும் கிடைத்ததாம். தற்பொழுது நாணய மாற்றில் பிரிட்டிஷ் இந்திய ரூபாயின் மதிப்புக் குறைந்துவிட்டது. நாம் நூறு ரூபாய் கொடுத்தால், அவர்கள் 90 முதல் 93வரை, அன்றைய நிலைமைக்குத் தக்கபடி நேபாள ரூபாய் தருகிறார்கள். நூறு பைசா கொண்டது ஒரு ரூபாய். ஒரு பைசா, இரண்டு பைசா, ஐந்து பைசா, பத்து பைசா, இருபது பைசா, அரை ரூபாய், ஒரு ரூபாய் ஆகியவைகளுக்கு நாணயம் உண்டு. தங்க நாணயமும் இருக்கிறது; ஆனால் செலாவணியில் இல்லை. நேபாளத்தில் 'கரன்சி' நோட்டுக்களே கிடையா. ஆயிர ரூபாயை

எடுத்துச் செல்வதானாலும் ரொக்க நாணயமாகத்தான் எடுத்துச் செல்லவேண்டும்.

நேபாளத்தில் முக்கியமான பாஷை நேபாளி. எழுத்துக்கள் எல்லாம் தேவ நாகரி. உச்சரிப்பும் அர்த்தமும் சிறிது வித்தியாசம். மலைவாசிகள் பல விதமான பாஷைகளில் பேசுகிறார்கள். ஆனால் அனேகமாக எல்லோருக்கும் நேபாளி பாஷை புரியும். நேபாளியைத் தவிர வேறு பாஷைகளுக்கு அச்சாவது புத்தகமாவது கிடையாது. காட்மாண்டு நகரில் இந்துஸ்தானியைப் புரிந்து கொள்கிறார்கள்.

நேபாளத்தில் எல்லோருக்கும் இலவசக் கல்வி; ஆனால் கட்டாயக் கல்வி அல்ல. நேபாளப் பாடப் புத்தகங்கள் பெரும்பாலும் காசியிலும் கல்கத்தாவிலும் அச்சிடப்படுகின்றன. காட்மாண்டு நகரில் மகாராஜா காலேஜ் இருக்கிறது. இங்கு ஆங்கிலம் கற்பிக்கிறார்கள். இந்தக் காலேஜைப் பாட்னா சர்வகலாசாலை யுடன் இணைத்திருக்கிறார்கள். இங்குப் பாடஞ் சொல்லும் ஆசிரியர்களில் பெரும்பாலோர் வங்காளிகள்.

போஸ்ட் கார்டு முதல் சமாசாரப் பத்திரிகை வரை கையால் செய்த காகிதத்தைத்தான் உபயோகிக்கிறார்கள். நேபாளத்திலேயே 'கூர்க்க பத்திரா' என்ற ஒரே ஒரு செய்திப் பத்திரிகை தானிருக்கிறது. இது வாரத்திற்கு இரு முறை வெளி வரும். ஒரு பக்கம் தான் அச்சடிக்கிறார்கள்.

போஸ்டு கார்டு கரடு முரடாக இருக்கும். விதம் விதமான ஸ்டாம்புகள் வெளியிட்டிருக்கிறார்கள். நேபாளத்திலிருந்து இந்தியாவுக்குக் கார்டு அனுப்ப ஆறு பைசா, அதாவது ஒரு அணா ஸ்டாம்பு. கடிதம் அனுப்புவதற்கு எட்டுப் பைசா, அதாவது ஒரு அணா நான்கு பைசா ஸ்டாம்பு. நாகரிக நாடுகளில், ஸ்டாம்பு

களில் ராஜாவின் தலையை அச்சிடுவது வழக்கம். ராஜா இறந்து போனால் மறு ராஜா பட்டத்துக்கு வருவார்; ஸ்டாம்பிலுள்ள ராஜாவின் தலையும் மாறும். ஆனால் நேபாள ஸ்டாம்புகளில் ராஜாவின் தலையை அச்சடிப்ப தில்லை. கோரக் நாதர் பசுபதி நாதர் என்னும் கடவுளரின் திருவுருவைத்தான் அச்சடிக்கிறார்கள். ராஜாக்கள் இறப்பவர்கள்; ஆனால் கடவுள் இறக்க மாட்டார் அல்லவா?

நேபாளத்தில் இரண்டு 'ஹைட்ரோ எலக்ட்ரிக் ஸ்டேஷன்'கள் இருக்கின்றன. காட்மாண்டு நகரிலுள்ள பவர் ஹவுஸுக்கு 'சந்திர ஜோதி' என்று பெயர். இது எவ்வளவு இனிமையான பெயர் பாருங்கள்! நகரமும் இரவில் மின்சார வெளிச்சத்தில் பிரகாசிக்கிறது. விளக்கணைப்பும், அபாயச் சங்கும் இந்த ஊர் வாசிகள் அறியாத ஒன்று. உணவுக் கட்டுப்பாடும் இவர்களுக்கு இன்னதென்று தெரியாது.

1934ல் காட்மாண்டு நகரில் பெரிய பூகம்பம் ஏற்பட்டது. அப்பொழுது தான் நேபாளத்தைப் பற்றிய செய்தியொன்று படித்தோம். அதற்குப் பிறகு நேபாளத்தைப் பற்றிய முக்கியமான செய்தியை நாம படித்ததில்லை. பூகம்பத்தின் போது நகரத்தின் பெரும் பகுதி நாசமாகிவிட்டது. பழைய கட்டிடங்கள் சில மட்டுந்தான் எஞ்சி நின்றன. ஏனைய கட்டிடங்கள் எல்லாம் புதிதாகக் கட்டப் பெற்றவை. பழைய கட்டிடங்கள் சாதாரணமாக மூன்று அல்லது நான்கு மாடியுடையவை. புதிய கட்டிடங்களில் சில கல்கத்தாக் கட்டிடங்களைப் போலத் தோற்றமளிக்கின்றன. அரசாங்கக் காரியாலயமாகிய சிங்க தர்பார், அரச குடும்பத்தினரும், பிரதமமந்திரி குடும்பத்தாரும் வசிக் கும் அரண்மனைகள், வைத்திய சாலைகள், மகாராஜா

காலேஜ், சுப்ரீம் கோர்ட், இராணுவப் பாட்சாலே, டவுன் ஹால், நேபாளப் பாங்கி முதலிய பல பெரிய கட்டிடங்கள் இன்று காட்மாண்டு நகரை அலங்கரிக்கின்றன.

சாலைகள் மிக்க அழகாக அமைக்கப் பெற்றிருக்கின்றன. சதுக்கங்களிலே கம்பீரமான உருவச்சிலைகள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. இதில் ஒன்று கூட வெள்ளைக்காரன் உருவச் சிலையல்ல. எல்லா உருவச் சிலைகளும், பழைய நேபாள ராஜாக்களும், பிரதம மந்திரிகளுந் தான். சாலையின் ஓரத்தில் ஐந்தடி அகலப் பாதை அமைத்திருக்கிறார்கள். அதில் தான் ஜனங்கள் நடக்க வேண்டும். ஊருக்குள்ளேயே டோலியிலும், குதிரையின்மீதும், மோட்டாரிலும் ஜனங்கள் செல்லுவார்கள்—வண்டிகளே கிடையாது.

வீதிக்கு டோல் என்று பெயர். காட்மாண்டு நகரிலேயே முக்கியமான வீதி ஜூத்தா வீதி. முக்கியமான வியாபார ஸ்தலம் அஸன் டோல். பொதுவாக ஜவுளிக் கடைகளும் மருந்துக் கடைகளுமே அதிகம். பெரும்பாலும் எல்லாச் சாமான்களும் வெளியிலிருந்து தான் வரவேண்டும். பெரும்பாலான வீடுகளில் கைராட்டினம் இருக்கிறது. ஆனால் அந்நாட்டு மக்களுக்குப் போதுமான துணி தயாராகவில்லை. இந்தியாவிலிருந்து தான் ஜவுளிகள் இறக்குமதியாகின்றன. கையால் செய்யும் காகிதம், சோப்பு, தீப்பெட்டி முதலியவைகளே நேபாளத்தில் தயாராகின்றன.

எங்குப் பார்த்தாலும் டெலிபோன் வைத்திருக்கிறார்கள். நேபாள ராஜ்யத்தின் பல ஜில்லாக்கள் டெலிபோனால் இணைக்கப் பெற்றிருக்கின்றன. ஆனால் பொதுஜனங்கள் டெலிபோனை உபயோகிக்க அனுமதிப்பதில்லை. அரசாங்கத்தார் தான் தங்கள்

சௌகரியத்துக்காக உபயோகித்துக் கொள்வார்கள். பொது மக்களிடம் கட்டணம் வாங்கிக் கொண்டு, டெலிபோன் மூலமாக ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செய்தி யனுப்புகின்றனர்.

நேபாளத்தில் இல்லாதவை :

தந்தி நிலையம்
சினிமாக் கொட்டகை
மாதா கோயில்
அன்னியர் ஆட்சி.

தந்தி நிலையம் இருந்தால், ஆங்கிலக் கோடு வார்த்தைகள் கற்றுக்கொள்ள வேண்டியிருக்குமென்பதற்காக, தந்தியே வேண்டாமென்று கூறி விட்டார்கள். தந்தி நிலையத்தின் வேலையை டெலிபோன்கள் செய்கின்றன.

காட்மாண்டு நகரில் இரண்டு கட்டிடங்களில் தான் பெரிய சினிமா புரொஜெக்டர்கள் இருக்கின்றன. ஒன்று ராஜாதி ராஜன் அரண்மனை; மற்றொன்று பிரதம மந்திரி அரண்மனை. பொது மக்களுக்காகச் சினிமாவே கிடையாது. சினிமாப் பார்க்க விரும்பும் சில நோயாளிகள், காட்மாண்டு நகரிலிருந்து பிரிட்டிஷ் இந்தியாவுக்கு வந்து மோதிஹாரி என்னுமிடத்தில் சினிமா பார்த்து விட்டுத் திரும்பிச் செல்கின்றனர். காட்மாண்டுவிலிருந்து மோதிஹாரி சுமார் நூறு மைல் இருக்கும். பசுபதி நாதரைத் தரிசிக்க நாம் எவ்வளவு சிரமம் எடுத்துப் பிரயாணம் செய்கிறோமோ, அவ்வளவு சிரமம் எடுத்துக் கொள்கிறார்கள் அவர்கள், ஒரு சினிமா பார்ப்பதற்கு!

இந்தியாவிலேயே கிறிஸ்துவப் பாதிரிகளும் மாதா கோயிலும் இல்லாத இடம் நேபாளம் ஒன்றுதான்.

கடவுள் அந்த நாட்டிலாவது அஞ்ஞானிகளை விட்டு வைத்திருக்கிறாரே என்பதில் எனக்குத் திருப்தி தான். கிறிஸ்துவ மதம் பரவும் இடங்களிலெல்லாம் மேலை நாட்டு அன்னிய ஆட்சி பரவுவதையும் பார்க்கிறோம். அன்னியர் ஆட்சி அங்குக் கிடையாது. கூர்க்க வீரர்கள் நேபாளத்தை ஜெயித்தபோதிலும், அதையே தங்கள் தாய்நாடாகக் கொண்டு விட்டார்கள். நேபாளத்திலிருந்து பொன்னையும் பொருளையும் வெளியே அனுப்பி அந்த நாட்டை ஏழ்மை யாக்கவில்லை. திபெத்து நாட்டார் இன்னும் நேபாளத்துக்குக் கப்பம் கட்டுகிறார்கள். பிரிட்டிஷ் அரசாங்கம் தங்கள் பிரதிநிதியொருவரை இங்கனுப்பி யிருக்கிறது. அவருக்கு பிரிட்டிஷ் மந்திரி என்று பெயர். நேபாளப் பிரதிநிதியொருவர் லண்டனில் இருக்கிறார். தற்போது தனது சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காகப் போராடும் சீனா எத்தனையோ முறை நேபாளத்தின் மீது படையெடுத்திருக்கிறது. எத்தனையோ பிரிட்டிஷ் அரசியல் வாதிகள் இந்நாட்டின் மீது கண் செலுத்தி யிருக்கிறார்கள். இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான், ஸ்வீடன் போன்ற பல நாடுகள் தங்கள் பிரதிநிதிகளை நேபாளத்துக்கு அனுப்பி, பட்டங்களும் பரிசுகளும் அளித்திருக்கின்றன. 1857 ஆம் வருடத்தில் இந்தியாவில் நடந்த குழப்பத்தில் நேபாளம் பிரிட்டிஷாருக்கு அப்பொழுது உதவிக்கு வராமல் இருந்திருக்குமானால், சரித்திரமே வேறுவிதமாக இருந்திருக்கக் கூடும்.

நேபாளம் சுதந்திர நாடு; ஆனால் ஜனநாயக ஆட்சியில்லை. நேபாளத்தை ஆட்சி செய்கிறவர்கள், சுயநல மிகுந்தவர்கள்; நாட்டின் பாதிக்கு மேற்பட்ட செல்வத்தை, ஆளுகிற குடும்பத்தினரே அனுபவிக்

கிறார்கள். தங்களுடைய இந்தச் சுக வாழ்வைப் பாது காத்துக் கொள்வதற்காகப் பொது மக்களின் உரிமை கள் பலவற்றைப் பிடுங்கி விட்டனர். பொதுவாக நான்கு பேர் ஒன்று சேர்ந்து, எந்த விஷயத்தையும் யோசிக்க முடியாது. இரவில் ஒன்பதரை மணிக்குக் குண்டு போடுவார்கள். காலை மூன்றரை மணிக்குக் குண்டு போடுவார்கள். இவற்றுக் கிடைப்பட்ட காலத் தில் யாருமே வீதிகளில் நடக்கக் கூடாது. இது தினந் தோறும் நடை முறையில் உள்ள அநீதமான உத்தரவு. வெளி உலகத்தில் என்ன நடக்கின்றது என்பதைப் பற்றிய விஷயமே பொது மக்களுக்குத் தெரியாது. சிலருக்கு மட்டும் கல்கத்தாவிலிருந்து ஆங்கிலத் தினசரிகள் வருகின்றன. கஸ்தூரி மாதா இறந்த செய்தி மூன்று தினங்களுக்குப் பிறகு தான் எங்களுக்குத் தெரியும். இதற்கெல்லாம் காரணம் நேபாள அரசாங் கத்தார் தங்களைச் சுற்றி எதிரிகள் எப்பொழுதும் இருப்பதாக எண்ணிக் கொண்டிருப்பதுதான்.

நேபாளத்தில் உணவுக்குப் பஞ்சமில்லை. ஆனால் வாழ்க்கை நிலை உயரவில்லை. ஏழைகள் மிக அதிகம். பலருக்குப் போதுமான அளவு துணி கூடக் கிடையாது. பட்டாளத்திலுள்ள வீரர்களின் சம்பளமும் சொற்பம். சொந்த நாட்டிலேயே வேலை கிடைப்பதால் அவர்கள் ஒருவாறு காலந் தள்ளுகிறார்கள். நேபாளம் இயற்கை வளம் நிறைந்தது. ஏராளமான உலோகப் பொருள்கள் இருக்கின்றன. உதாரணமாக மைக்கா, ஈயம், தங்கம் முதலியவை அதிகம். இவைகளைக் கவனித்து அபி விருத்தி செய்தால் நாட்டின் செல்வம் பெருகும். காட்டு வளமும் அதிகம். பெரிய கைத்தொழிற் சாலைகள் ஆரம் பிக்கவும் சௌகரியங்கள் இருக்கின்றன. இவை யனைத் தும் நேபாளத்தை ஆளும் குடும்பத்தாருக்கு நன்கு

தெரியும். ஆனால் அவர்கள் செய்ய விரும்பவில்லை. பழைய கொள்கைகளின் மீதுள்ள பற்றுதலே இதற்கு முக்கிய காரணம். ஆனால் புதிய தலைமுறையினர் இதனை நன்கு உணர்கின்றனர். மாறி வரும் உலக நிலைமைக் கேற்ப, தங்கள் அரசியலை மாற்றி அமைத்துக்கொள்ள விரும்புகின்றனர்.

நேபாளத்தில் ஜனங்கள் எல்லோரும் பொதுவாக இந்துக்கள், சில முஸ்லிம்களும் இருக்கிறார்கள். காட்மாண்டு நகரிலேயே இரண்டு மசூதிகள் இருக் கின்றன. பௌத்தர்களின் எண்ணிக்கை தற்போது குறைவு. ஒரு காலத்தில் இந்நாட்டில் புத்த மதம் உச்ச நிலையில் இருந்தது. சங்கராச்சாரியார் தான், புத்த விக்கிரகங்களை எடுத்துவிட்டு, அவற்றுக்குப் பதிலாக இந்து விக்கிரகங்களை வைத்துப் பெரும்பாலான பௌத்தர்களை இந்துக்கள் ஆக்கினர் என்று தெரி கிறது. இதற்கு அரசாங்கமும் ஓரளவு சாதகமாய் இருந்தது. தற்போது பௌத்தர்களுக்கும் இந்துக் களுக்கும் அதிக வித்தியாசமில்லை. புத்த கோயில் களுக்கு இந்துக்கள் செல்வதும், இந்துக் கோயில் களுக்குப் பௌத்தர்கள் செல்வதும் சர்வ சாதாரணம்.

இந்துக்களிலே சைவம், வைணவம் என்ற பிரிவு கள் இருக்கிறதல்லவா? இந்தப் பிரிவுகளிலே சைவம் தான் நேபாளத்தில் ஆட்சி செலுத்துகிறது. விக்கிரகம் ஒன்றைப் பார்த்தோம். ஒரே செம்பு விக்கிரத்தில் பாம்பின் மேல் கருடன், கருடனுக்கு மேல் விஷ்ணு, விஷ்ணுவின் மேல் சிவபெருமான், இம்மாதிரியாகக் காணப்பட்டது. நேபாளத்தில் பிள்ளையார் கோயில்கள் அதிகம். வீதிக்கு வீதி, மூலைக்கு மூலை பிள்ளையார் கோயில்தான். நேபாளப் பிள்ளையாருக்குத் தும்பிக்கை

நேராயிருக்கும். நேபாள் நடராஜர் மீசை வைத்துக் கொண்டிருக்கிறார்!

மாதந்தோறும் நடைபெறும் உற்சவங்களைத் தவிர, மக்கள் சந்தோஷமாய்ப் பொழுது போக்க வேறு சந்தர்ப்பம் கிடையாது. ஐந்து வருடத்திற்கு ஒரு முறை நடைபெறும் பௌத்த மத உற்சவமொன்றிற்குத் தற்செயலாகச்சென்றிருந்தோம். பொன்னிறமான, பத்தடி உயரமுள்ள சுமார் அறுபது புத்த விக்கிரகங்களை ஒரு மைதானத்தில் வைத்து, வாத்தியங்கள் முழங்கப் பூஜை செய்கின்றனர். பௌத்த சாதுக்களுக்கு அன்னமளிக்கின்றனர். இவ்விழாக்களுக்குப் பெண்கள் ஏராளமாக வருவார்கள்.

நேபாளப் பெண்களில் சிலர் சேலையணிந்து கொள்கிறார்கள். பலர் பழைய முறைப்படி பாவாடை கட்டி, கைமுழுதும் மறைக்கச் சட்டை போட்டு, மேலே பட்டையோ அல்லது போர்வையையோ போர்த்திக் கொள்கிறார்கள். இடுப்பில் ஆறு அங்குல அகலமுள்ள துணியை இரண்டங்குல கனம் வரும்படியாக வரிந்து கட்டிக்கொள்கிறார்கள். குளிரிலிருந்து தங்களைப் பார்து காக்கும் பொருட்டு இம்மாதிரிச் செய்கிறார்கள். அவர்கள் காலுக்கு உபயோகிக்கும் செருப்பு, தோலால் ஆனதல்ல; முழுதும் துணிகளாலும் நூலாலும் செய்யப்பெற்றது. பொதுவாய்க் குழந்தைகளை முதுகில்தான் சுமக்கிறார்கள். சில இடங்களில் இன்னும் 'பர்தா' முறை வழக்கத்தில் இருக்கிறது. நெற்றியில் அழகாய்க் குங்குமம் அணிந்து கொள்கிறார்கள்.

நேபாள மக்களின் முக்கிய ஆகாரம் சோறு. பெரும்பாலோர் மாமிசம் சாப்பிடுகிறார்கள். பால், தயிர் ஏராளம். காய் கறிகள் மலிவு. காலிபிளவர், தக்காளி, காரட்டுக் கிழங்கு முதலியவை ஏராளமாய்க் கிடைக்கும்.

காட்மாண்டு நகரில் ஏராளமான தர்ம சாலைகள் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான யாத்திரிகர் இங்கே தான் தங்குகின்றனர். ஹோட்டல் என்ற பேச்சே கிடையாது. அனைவரும் தங்கள் உணவைத் தாங்களே தயாரித்துக் கொள்ள வேண்டும். ஊரிலிருந்தே சமையல் காரரை அழைத்துச் செல்வது நல்லது.

காட்மாண்டு நகரிலிருந்து ஒரு மைல் தூரத்தில் அற்புதமான பொருட் காட்சிச் சாலை யொன்றிருக்கிறது. மூன்று மாடியுள்ள பெரிய கட்டிடம். சுற்றிப் பார்ப்பதற்கே சிலமணி நேரமாகும். பழைய போர்களில் உபயோகித்த ஆயிரக் கணக்கான வாள்களை அடுக்கி வைத்திருக்கும் காட்சியே ஒரு தனி அழகு. நான்கு அடி நீளமான பள பளப்புள்ள கத்தி யொன்றைப் பார்த்தோம். இதைப் பழைய காலத்து ராஜாக்கள் இடுப்பில் "பெல்ட்"டைப் போலச் சுற்றிக் கொண்டு தான் வெளியில் புறப்படுவார்களாம்.

நேபாளத்தில் திறமை வாய்ந்த சிற்பிகளும் சித்திரக் காரர்களும் இருக்கிறார்கள். அரச குடும்பத்தினரின் பெரிய படங்கள் அற்புதமாக எழுதப்பட்டிருக்கின்றன. நேபாளத்தில் தந்தமும் ஸ்படிகமும் அதிகம்; இவைகளைக் கொண்டு செய்த வேலைப்பாடுகள் மிக அருமையானவை. இவைகளை யெல்லாம் பொருட் காட்சிச் சாலையில் பார்த்தோம். இந்தப் பொருட்காட்சிச் சாலையின் டைரக்டர் தான், எங்களை அன்புடன் விருந்தினர்களாக ஏற்றுக் கொண்ட மேஜர் ஜெனரல் மிருகேந்திர சம்ஷேர்.

ஜெனரல் மிருகேந்திரர் கம்பீரமான தோற்றமுடையவர். சுமார் நாற்பது வயதிருக்கும். கல்க்த்தா சர்வ கலா சாலையில் பட்டம் பெற்றவர். உலக விவகாரங்கள் நன்கு தெரிந்தவர். அன்புடனும் பெருந்தன்மையுடனும்

எங்களுடன் பழகினர். அவருடைய தந்தையாரான பாபர் சம்ஷேரை எங்களுக்கு அறிமுகப் படுத்தினர். பாபர் சம்ஷேருக்கு அறுபது வயதுக்கு மேலிருக்கும். எங்களுடைய பிரயாணத்தைப் பற்றியும் உணவைப் பற்றியும் விசாரித்தார். அவருடைய புத்தக சாலை பெரிது. அதில் முன்னணியில் வைக்கப் பட்டிருந்த பண்டித ஜவஹர்லால் நேருவின் சுயசரிதம் தான் என் கண்களில் பட்டது.

மிருகேந்திரருக்குப் படம் பிடிப்பதில் பிரியம் அதிகம். சிறிய அளவுள்ள சினிமாப் படங்கள் எடுத்திருக்கிறார். இதில் ஐயாயிரம் அடிப் படங்களை எங்களுக்குக் காட்டினர். பெரும்பாலும் வர்ணப் படங்கள், நேபாளத்தின் இயற்கைக் காட்சிகள், உள் நாட்டுப் பிரயாணம், புலி வேட்டை, மன்னரின் வெள்ளி விழா, அரச குடும்பத்துத் திருமணங்கள் முதலியவைகளைப் படத்தில் பார்த்து மகிழ்ந்தோம். மிருகேந்திருடைய அன்பும் உபசாரமும் தான், காட்மாண்டு நகரில் பத்துத் தினங்கள் வரை தங்க வசதி யளித்தது.

நண்பர் சுவாமிநாதனும் தண்டபாணி ஐயரும், பிரயாணத்திற்கு ஏற்ற இனிய நண்பர்கள். நேபாளப் பிரயாணம் சந்தோஷமாகவும் சௌகரியமாகவும் இருந்ததற்கு இவர்களின் கூட்டுறவே முக்கிய காரணமாகும்.

நேபாளத்தைப் பற்றி நினைக்கும் பொழுது, பசுபதி நாதரின் ஆலயமும், பனி உறைந்த சிகரங்களுமே ஞாபகத்துக்கு வருகின்றன.

இலங்கை

'சிங்களத் தீவுக்கோர் பாலம் அமைப்போம்' என்று பாடினர் பாரதியார். ஆனால் இன்னும் பாலம் அமைக்கப் பெறவில்லை. ஆகையால் சென்னையிலிருந்து கொழும்புக்கு மூன்று மணிநேரத்தில் ஆகாய விமானத்தில் செல்லலாம் என்று கருதி, ஆறு வாரத்துக்கு முன்னதாகவே டிக்கட்டுக்கு ஏற்பாடு செய்தேன். என்றாலும் குறிப்பிட்ட தினத்துக்கு டிக்கெட் கிடைக்கவில்லை. அதற்கு மறுதினம்தான் டிக்கட் கிடைத்தது. ஆனால் அன்று விமானப் போக்குவரத்தை நிறுத்தி விட்டார்கள்.

கொழும்பில் அதிக மழை என்றும், எனவே விமானம் இறங்க வசதியில்லை யென்றும் நான்கு நாள் போக்குவரத்தை நிறுத்திவிட்டார்கள். கொழும்பு விமான நிலையத்தில் இறங்க முயற்சித்த விமானம் ஒன்று ஆபத்துக் குள்ளாகி, அதனால் அதிலிருந்த எட்டு வெள்ளைக்காரப் பிரயாணிகளும் இறந்து விட்டார்கள் என்றும், இந்த எட்டுப் பேரையும் ஒன்றாகப் புதைத்தார்கள் என்றும் பத்திரிகையில் படித்தோம். சென்னை விமான நிலையத்தில், கொழும்பு செல்வதற்காக நாள் கணக்கில் காத்திருந்த பிரயாணிகளுக்கு, இச்செய்தி எத்தகைய கலக்கத்தையும் உண்டாக்க வில்லை. ஏனென்றால் ஆண்டவன் ஒவ்வொரு விமானத்தையும் ஆபத்துக்கு உள்ளாக்கமாட்டார் என்பதுதான்.

காலை ஏழரை மணி முதல் மாலை நான்கு மணி வரை தினந்தோறும் மீனம்பாக்கத்தில் காத்திருந்தோம். மூன்று மணிநேரப் பிரயாணத்துக்காக எத்தனை நாள்

க்காத்திருப்பது? எனவே வேறு வழியின்றி ரயிலில்தான் செல்ல வேண்டியதாயிற்று.

சென்னையிலிருந்து இரவு ரயிலில் புறப்பட்டால், மறு நாள் பிற்பகலில் மண்டபம் என்ற இடத்துக்குச் செல்கிறோம். இலங்கை அரசாங்கத்தைச் சேர்ந்த டாக்டர்கள் இங்கு முதலாவது இரண்டாவது வகுப்புப் பிரயாணிகளை வைத்திய சோதனை செய்கின்றனர். அம்மை குத்திக்கொள்ளாத பிரயாணிகளை இலங்கை செல்ல அனுமதிக்க மாட்டார்கள். அம்மை குத்திக் கொள்ளாதவர்களுக்கு அந்த இடத்திலேயே அம்மை குத்தி விடுவார்கள். மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள் ஒரு நாளோ அல்லது இரண்டு நாளோ அங்குத் தங்கிய பின்னர் இலங்கை செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

இலங்கை செல்லும் இந்தியர்களுக்கு, அந்நாட்டு அரசாங்க அனுமதிச் சீட்டு இல்லாவிட்டால், இருபது ரூபாய் டிப்பாசிட் கட்டி ரசீது வாங்கிச்செல்லவேண்டும். ரயில், தனுஷ்கோடித் துறைமுகம் சென்றதும், இறங்கிக் கஸ்டம்ஸ் ஆபீசர்கள் நிற்கும் தகரக்கொட்டகையின் வழியாகக் கப்பலுக்குச் செல்ல வேண்டும். முதலிலே ராணுவத்தார், அதிலும் வெள்ளையர்கள் செல்வார்கள். கஸ்டம்ஸ் அதிகாரிகள் முழுதும் இந்தியர் தான். இந்த வெள்ளைக்காரர்களைப் பெரும்பாலும் சோதிப்பதில்லை. பல சமயங்களில் இவர்கள் பெட்டியைத் திறந்து பாராமலே, பாஸ் செய்து விடுகிறார்கள். இந்திய ராணுவக் காரர்களிடம் இந்தக் கஸ்டம்ஸ் ஆபீசர்கள் தங்கள் அதிகாரத்தைச் சிறிது காண்பிப்பார்கள்.

அடுத்தபடியாக மற்றப் பிரயாணிகளை இறக்கு வார்கள். இதிலும் மேல் வகுப்பில் பிரயாணம் செய்யும் வெள்ளையர்கள்தான் முதலில். பிறகு இந்தியர்கள். இந்த இந்தியர்களிலும் கால்சட்டை அணிந்தவர்

க்ளுக்குச் சிறிது மதிப்பு. வேஷ்டி கட்டும் இந்தியர்களை எல்லாம், தனுஷ்கோடி கஸ்டம்ஸ் உத்தியோகஸ்தர்கள் மிருகங்களைப் போலத்தான் மதிக்கிறார்கள்; அப்படியே தான் நடத்துகிறார்கள்.

கஸ்டம்ஸ் ஆபீசர்கள் என்னுடைய பெட்டியைச் சோதித்தார்கள் — இல்லை, சோதிக்கவில்லை — சாமான் களைத் தூக்கி வெளியே எறிந்தார்கள். இதை நான் மரியாதையாக ஆட்சேபித்தேன். இந்த ஆட்சேபனை அவர்கள் காதில் விழவில்லை. அந்த உத்தியோகஸ்த ருக்கு மரியாதை என்ற விஷயமே தெரியவில்லை. எனது பெட்டியிலிருந்தது எட்டு ஜோடி கதர் வேஷ்டிதான். நான்கு ஜோடி வேஷ்டிக்குமேல் நான் எடுத்துச்செல்லக் கூடாதென்றார் அந்தச் சின்ன உத்தியோகஸ்தர். பிறகு பெரிய உத்தியோகஸ்தரிடம் சென்றேன். அங்குள்ள வேலைக்காரன் மறுபடியும் எனது சாமான்களைப்பிரித்து எறிந்தான். இருபது நிமிஷத்துக்குப் பிறகு அந்த உத்தியோகஸ்தர் என்னை ஒருவாறு அனுமதித்தார். அப்பொழுது அவர் 'நாங்கள் எல்லாம் மனித உருவத்தி லுள்ள மிருகங்கள்' என்று பணிவாகக் கூறினார். அங்குள்ள வேலைக்காரர்கள் நடந்து கொண்டதைப் பார்த்த பொழுது, அவர் கூறியது உண்மை தானே என்ற சந்தேகமும் உண்டாயிற்று.

இந்தச் சோதனைக்குப் பின்னர், கப்பலுக்குச் செல் கிறோம். கஸ்டம்ஸ் கொட்டகையைத் தாண்டுகிற பொழுது, ஐந்து கஸ்டம்ஸ் வேலைக்காரர்கள் யம கிங் கரர் போல நின்று கொண்டிருக்கிறார்கள். கப்பலுக்குப் போகிற ஜனங்கள் சட்டையிலோ மடியிலோ சாமான் வைத்திருக்கிறார்களா என்று தடவிப் பார்ப்பது இவர் களின் வேலை. ஆனால் இவர்கள் வெள்ளைக்காரர்க ளிடம் நெருங்குவதில்லை. வெள்ளைக்காரர்கள் சட்டைப்

யைத் தடவிப் பார்த்தால் அவர்கள் எட்டி உதைத்தாலும் உதைப்பார்கள். கருப்பு மனிதர்களிடம் தான் இந்த வேலைக்காரர்கள் தங்கள் அதிகாரத்தையும் வீரத்தையும் காட்டுவார்கள்.

இந்தியர்கள் பொதுவர்க, சாமான்களை இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டுபோய் விற்பதற்காக முயற்சிக்கிறார்கள் என்றும், இந்தியுச் சாமான்களை வெளிநாட்டுக்கு அனுப்பி விட்டால், இந்தியா கஷ்டப்பட வேண்டியிருக்குமென்றும் கஸ்டம்ஸ் அதிகாரிகள் கூறுகிறார்கள். உண்மைதான். ஆனால் இம்மாதிரி செய்வது கருப்பு மனிதர்கள் மட்டும் தானா? அப்படியானால் வெள்ளைக்காரர்கள் செய்வதில்லை போலும்! சில இந்தியர்கள் பாவம், சிறு விஷயங்களிலே கஸ்டம்ஸ் அதிகாரிகளை ஏமாற்றலாம்: ஆனால் வெள்ளைக்காரர்கள் இன்று உலகத்தில் பெரிய விஷயங்களில் எப்படி நடந்து வருகிறார்கள்!

* * * *

தனுஷ்கோடித் துறைமுகத்திலிருந்து இரண்டே கால் மணி நேரம் கப்பலிலே பிரயாணம் செய்தால் தலைமன்னார் துறைமுகத்தை அடைகிறோம். அங்கிருந்து ரயிலில் புறப்பட்டால் மறுநாள் காலை கொழும்பு நகரத்தை அடைகிறோம். இலங்கையின் தலை நகரம் கொழும்பு.

* * *

இலங்கையில் ரூபாய்க்கு 100 சதம். ஒரு சதம் இரண்டு சதம், ஐந்து, பத்து, இருபத்தைந்து, ஐம்பது சதங்களுக்கு நாணயமுண்டு. இவையெல்லாம் செம்பு நாணயங்கள். இருபத்தைந்து, ஐம்பது சதங்களுக்கு நோட்டுகளும் உண்டு. ஒரு ரூபாய்க்கு நாணயம் கிடையாது; கரன்சி நோட்டுத்தான் உண்டு. வெள்ளி

நாணயத்தைக் காண்பதே அபூர்வம். இப்பொழுது வெள்ளி நாணயமே மறைந்துவிட்டது என்றும் கூறலாம்.

இலங்கையின் சட்டசபைக்கு ஸ்டேட் கவுன்சில் என்று பெயர். இதன் அங்கத்தினர்களுக்கு மாதமொன்றுக்குச் சம்பளம் அல்லது அலவன்ஸ் ரூபாய் ஐந்நூறு. இவர்களுக்கு இலவச ரயில் பிரயாணம், இலவச டெலிபோன் வசதி முதலியன உண்டு. இவர்கள் எழுதும் தபால்களுக்கு ஸ்டாம்பு ஒட்டவேண்டியதில்லை. அப்படியிருந்தும் இவர்களில்சிலர் கடிதங்களுக்குப்பதில் எழுதுவதில்லை. இந்தக் கவுன்சிலுக்குத் தேர்தல்நடந்து பத்து வருஷத்துக்கு மேலாகிறது. சமீபத்தில் தேர்தல் நடக்கப் போவதாகவும் தெரியவில்லை. பொதுவாக இந்தக் கவுன்சில்அங்கத்தினர்கள்அதிர்ஷ்டக்காரர்கள். ஏனெனில் இவர்கள் சேவையின் பேரால் சம்பளம் பெறுகின்றனர்; அல்லது சம்பளத்தின் பெயரால் சேவை செய்கின்றனர்.

இலங்கையின் பிரதம மந்திரி சேன நாயக். இவர் தான் இன்று சிங்களவர்களின் தலைவர். இவருக்கு அடுத்தபடியாகச் சிங்கள மகாசபைத் தலைவர் பண்டார நாயக்வைக் கூறலாம். இவரும் ஒரு மந்திரி. காலஞ் சென்ற சர். பொன்னம்பல அருணசலத்தின் குமாரர் மகாதேவா உள்நாட்டு மந்திரி. சட்டசபைத் தலைவர், யாழ்ப்பாணத் தமிழர் சர். துரைசாமி.

சமீபத்தில் வெளியான ஸோல்பெரி அறிக்கையை மந்திரி சபை ஒப்புக்கொண்டது. பொதுவாக இலங்கையர்கள் பிரிட்டிஷாரின் நல்ல பிள்ளைகளாக நடந்து வந்திருக்கின்றனர். சுதந்திரத்தைப் பற்றி அவர்கள் தீவிரமாகச் சிந்திப்பதாகத் தெரியவில்லை. கிடைத்த வரையில் திருப்தியடையும் மனப்பான்மைதான்

அதிகமாகக் காணப்படுகிறது. உழைப்பாளிகளான தமிழர்கள் உத்தியோகத்தோடு திருப்தியடைந்து வருகின்றனர். சிங்களவர்களில் சிலர் பட்டங்களோடு திருப்தியடைந்து விடுகின்றனர். தலைவர்களில் சிலர் பெருமையோடும் வருமானத்தோடும் திருப்தியடைந்து விடுகின்றனர்.

சர். பொன்னம்பல இராமநாதருக்குப் பிறகு இலங்கையில் பெரிய பொறுப்புள்ள தலைவர்கள் யாரும் தோன்றவில்லை என்று கூறலாம். இராமநாதரைப் பெற்றெடுத்த அதே யாழ்ப்பாணம், வகுப்புவாதப் பூசல்களை வளரச் செய்யும் ஒரு சிலரையும் பெற்றிருக்கிறது!

இலங்கையில் தோன்றும் வேலை நிறுத்தங்களுக்குச் சமசமாஜக் கட்சியார் காரணரென்று சிலர் கருதுகின்றனர். இலங்கையில் தங்கிய ஐந்து வார காலத்தில் நான்கு வேலை நிறுத்தங்களைப் பார்த்தேன். முதலாவது பாங்க் குமாஸ்தாக்கள் வேலை நிறுத்தம். இரண்டாவது துறைமுகத் தொழிலாளர், மூன்றாவது தீப்பெட்டித் தொழிலாளர், நான்காவது பஸ் தொழிலாளர் வேலை நிறுத்தம். சமசமாஜக் கட்சியைச் சேர்ந்தவர்கள், தாங்கள் இந்தியப் பொதுவுடைமைக்காரர்களைப் போன்றவர்கள் அல்லவென்றும், இந்தியக் காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியைப் போன்றவர்கள் என்றும் சொல்லிக்கொள்கிறார்கள்.

இலங்கையில் இந்தியத் தலைவர்களும் இல்லாமலில்லை. இவர்களில் சிலர் அரசியலை வியாபாரம் போலக் கருதிச் செய்கிறார்களோ என்றும் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. பிழைப்புக்காகச் செல்லும் தொழிலாளர்கள் தோட்டங்களில் கஷ்டப்படுவதோடல்லாமல் இத்தலைவர்களிடமும் கஷ்டப்படவேண்டியிருக்கிறது.

4

இலங்கையிலுள்ள இந்தியர்களை, அங்குள்ள இந்தியத் தலைவர்களிடமிருந்து கடவுள் காப்பாற்றவேண்டுமென்பதே என்னைப் போன்றவர்களின் பிரார்த்தனை.

இலங்கை ரயில்வே, அரசாங்கத்தாரால் நடத்தப் பெறுகிறது. இதன் மொத்த நீளம் ஆயிரம் மைலுக்குள்ளாகத்தான் இருக்கிறது. மூன்றாவது வகுப்புக் கட்டணங்கள் இந்தியாவைவிடச் சிறிது அதிகம். இண்டர் கிளாஸ் என்ற வகுப்புக் கிடையாது. முதலாவது இரண்டாவது வகுப்புக் கட்டணங்கள் இந்தியாவைக் காட்டிலும் குறைவு. ஆனால் இந்திய ரயில்களைப் போன்ற சௌகரியம் இதில் கிடையாது. இரண்டாவது வகுப்பில் படுக்கைக்கு இரண்டரை ரூபாயும், முதலாவது வகுப்பில் படுக்கைக்கு ஐந்து ரூபாயும் தனிக் கட்டணம் செலுத்த வேண்டும், சில முக்கியமான ரயில்களில் ரெஸ்டாரண்டுகள் இணைத்திருக்கிறார்கள். மற்ற இடங்களில் உணவுக் கஷ்டம் அதிகம். ரயில் வண்டிகள் மிகப் பழமையானவை. ஓடும் ரயில்களின் எண்ணிக்கையும் குறைவு.

'அபாயத்தை அறிவிக்கும் வழி வகை'; ரயிலை நிறுத்தச் சங்கிலியை இழுக்கவேண்டும். இந்தியாவில் அகாரணமாய்ச் சங்கிலியை இழுத்தால் அபராதம் ரூபாய் ஐம்பது. ஆனால் இதே குற்றத்தை இலங்கையில் செய்தால் தண்டம் ரூபாய் இருபதுதான். இந்தக்குற்றத்தையும் அவர்கள் நம்மைச் செய்ய விடுவதில்லை. ஏனெனில் பல ரயில்களில் இந்தச் சங்கிலியையே அப்புறப்படுத்தி விட்டார்கள்.

இலங்கையில், முக்கியமாகக் கொழும்பு நகரத்தில் நல்ல பஸ் வசதிகள் உண்டு. புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் நெல்ஸன் பஸ்கள் பார்வைக்கு நன்றாயிருக்கின்றன. பிரயாணத்துக்கும், பழைய பஸ்களைக் காட்டிலும் மிக

வசதியானவை. எல்லாப் பஸ்களும் பெட்ரோல் பஸ்கள் தான். கரி மோட்டார்களைப் பார்ப்பது அபூர்வம். மாடி வைத்த பஸ்களும் கொழும்பு நகரத்துக்கு விரைவில் வரப்போகிறதென்ற விபரம் இலங்கைப் பத்திரிகை களில் முக்கிய செய்தியாக வெளியாயிற்று.

பஸ் நிற்குமிடங்களிலே சில சமயங்களில் நூற்றுக் கணக்கானவர்கள் காத்து நிற்பதை அடிக்கடி காண லாம். இந்தக் கூட்டத்திலே பலவித உடையணிந்தவர் களையும் பார்க்கலாம். தலைமுடியிலே வளைந்த சீப்பைச் சொருகிக் கொண்டிருக்கும் சிங்களவர்கள், சட்டை போடாமல், ஆனால் வெற்றிலை போட்டுக்கொண்டு நிற் கும் தமிழர்கள், ஆங்கில உடையணிந்திருக்கும் யாழ்ப் பாணத்தார்கள், பர்க்கர்கள் என்னும் பறங்கிக்காரர்கள், தென்னிலங்கை ரத்தின வியாபாரிகளான முஸ்லிம்கள், நேச தேசத்தைச் சேர்ந்த பல நாட்டினர், ஊர் சுற்றிப் பார்க்க வரும் வித விதமான அந்நியர்கள் முதலியவர்கள் நிற்பதைப் பார்க்கலாம். இவர்கள் எல் லாம் மணிக் கணக்காக வெயில் அல்லது மழையைப் பொருட்படுத்தாமல் வரிசையாக நிற்பார்கள். இவ் வாறு வரிசையாக நிற்கின்ற பழக்கம் இலங்கைக்குப் புதிது. இது யுத்தத்தினால் ஏற்பட்ட நன்மைகளில் ஒன்று. யுத்தம், பிரிட்டிஷ் ஆட்சியினால் ஏற்பட்ட நன்மைகளில் ஒன்றாகவே கூறலாம்.

வாடகை மோட்டார்கள் அதிகமில்லாவிட்டாலும், போதுமான அளவு இருக்கின்றன. யுத்தத்திற்கு முன்னே வாடகை மோட்டார்களுக்கு மைல் ஒன்றுக்கு நான்கணாவுக்குமேல் வாடகை கிடையாது. இப்பொழுது மைல் ஒன்றுக்கு ஒன்றரை ரூபாய் முதல் இரண்டு ரூபாய் வரை வாடகை வாங்குகிறார்கள். இதோடு

மோட்டார் டிரைவர்களுக்கு இனம் வேறு கொடுக்க வேண்டும்.

இலங்கையில் பெட்ரோலுக்கு அதிகக் கஷ்டமில்லை. ஆனால் டயர் கிடைப்பதுதான் மிக்க கஷ்டம். தோட்டக் காரத்துரைகளுக்கு, அவர்கள் வெள்ளையாய் இருந்தாலும் அல்லது கருப்பாய் இருந்தாலும் சுலபமாக டயர் அனுமதி கிடைத்து விடுகிறது. மற்றவர்கள் பாடு சிரமம். கார்களை இரவு நேரங்களிலே வீதியிலே நிறுத்திவிட்டுக் கவனியாமல் இருந்தால் டயரைக் கழற்றிக் கொண்டு போனாலும் ஆச்சரியப் படுவதிற்கில்லை. திருடப்பட்ட டயர்கள், இருட்டுச் சந்தைகளிலே அதிக விலைக்கு விற்கப்படும். ஒருநாள் பிரபலமான ஆங்கில தினசரியொன்றில் பின்வரும் விளம்பரம் வெளியாயிற்று :— 'மோட்டார் டயர்கள்—இன்ன அளவு—நல்ல நிலைமையில் உள்ளவை.—இவை திருடப்பட்டதல்ல.'

இலங்கையிலேயே கொழும்பு நகரத்தில் தான் டிராம் வண்டிகள் ஓடுகின்றன. இவைகளிலே எப்பொழுதும் கூட்டம் அதிகம். இந்த வண்டிகளில் இரண்டு வகுப்புக்கள் உண்டு. சில டிராம் வண்டிகளிலே ஜனக்கூட்டத்தைச் சமாளிப்பதற்காக, உட்காருவதற்கு அமைத்திருக்கும் பெஞ்சுகளில் பாதியை எடுத்து விட்டார்கள். இவைகளிலே பெரும்பான்மையோர் நின்று கொண்டு தான் பிரயாணம் செய்யவேண்டும்.

டிராம், பஸ், ரயில் முதலியவைகளில் மஞ்சள் உடை அணிந்திருக்கும் பௌத்த சந்நியாசிகளுக்கு அதிகமான மதிப்புக் கொடுக்கின்றனர். இவர்களைக் கண்டால் மற்றவர்கள் எழுந்து உட்கார இடம் கொடுப்பார்கள். ஆனால் பெண்களைப் பொறுத்தமட்டில் எல்லாப் பெண்

களுக்கும் இம்மாதிரி இடம் கிடைப்பதில்லை, சிலர் தான் பெண்களுக்கு இடம் கொடுக்கின்றனர்.

* * *

இலங்கையில் தினசரிப் பத்திரிகைகள் எல்லாம் கொழும்பிலிருந்து தான் வெளிவருகின்றன. சிலோன் டெய்லி நியூஸ், சிலோன் அப்சர்வர், டைம்ஸ் ஆப் சிலோன் ஆகிய மூன்றும் ஆங்கில தினசரிப் பத்திரிகைகள். இதில் முதலிரண்டும் சிங்களவர்களால் இலங்கையின் நன்மைக்காக நடத்தப்படுவது. 'டைம்ஸ் ஆப் சிலோன்' என்பது ஆங்கிலேயரால் இலங்கையின் நன்மைக்காக நடத்தப்படும் பத்திரிகை. 'தினமினு, என்பது இலங்கையின் ஒரே சிங்களப் பத்திரிகை. 'சிலோன் டெய்லி நியூஸ்' 'சிலோன் அப்சர்வர்' தினமினு' முதலியவை சிங்களவர்களால் நடத்தப்படும் ஒரே ஸ்தாபனத்திலிருந்து வெளிவருகின்றன. இந்த ஸ்தாபனத்தார் 'தினகரன்' என்ற தமிழ்ப் பத்திரிகையை வெளியிடுகிறார்கள். இதன் ஆசிரியர் திருநெல்வேலித் தமிழரான ஸ்ரீ தங்கையா.

இந்தியத் தமிழரால் வெளியிடப்பெறும் தமிழ்த் தினசரி 'வீரகேசரி'. இதுதான் தற்பொழுது பழமையான தினசரி. இவர்கள் விஷயத்தைவிட விளம்பரத்துக்குத் தான் அதிகமான முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். இதன் ஆசிரியர் தமிழ் நாட்டுப் பத்திரிகைகளிலே தொண்டு செய்த ஸ்ரீ ஹரன்.

ஐம்பதுக்கு - ஐம்பது, சிறுபான்மையோருக்குப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்பது ஸ்ரீ பொன்னம்பலத்தின் கட்சி. ஆனால் ஸ்ரீ பொன்னம்பலம் யாருடைய நன்மைக்காகப் போராடுவதாகக் கூறுகிறாரோ, அவர்கள் ஸ்ரீ பொன்னம்பலத்தை ஆதரிக்காதது தான் விந்தையாக இருக்கிறது. சிறுபான்மைக் கட்சியின்

பெரும்பான்மையோரான இளைஞர்களிடத்தில் தேசிய உணர்ச்சியும் காணப்படுகிறது. ஆனால் ஸ்ரீ பொன்னம்பலத்தையும் அவர் கட்சியையும் பெரிதாக்குவதிலே 'டைம்ஸ் ஆப் சிலோன்' பெருந் தொண்டு புரிகிறது. பிரித்தாளுவதையே நோக்கமாகக் கொண்டு செய்யப் படும் பிரசாரத்தில், பலர் ஈடுபட்டு அப்பத்திரிகையை ஆதரிக்கின்றனர்.

பிரிட்டிஷார், தங்களின் நியாயமற்ற உரிமைகளுக்குப் போராடுவதற்கு அந்தந்த நாட்டு அரசியல் நிலைமையைத் தங்களுக்குச் சாதகமாக உபயோகித்துக் கொள்கிறார்கள். அதைப் பிரசாரம் செய்வதற்குப் பெரும் பத்திரிகைகளும் நடத்தி வருகிறார்கள். இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கு, அவர்களுக்கென தமிழ்த் தினசரிப் பத்திரிகை ஒன்று இல்லாதது பெருங் குறை.

* * *

இலங்கையில் யுத்தப் பிரசாரங்களுக்குக் கூட நல்ல தமிழைக் கையாளுகிறார்கள்.

'புல்லை அழித்து நெல்லை விதை'

'பெண்பாலாரும் பெரும் பயிர் செய்யலாம்'

'கமத்தொழிலாற்றிக் காப்போம் நாட்டை'

என்று அழகான தமிழ் எழுத்தில் எழுதப்பட்டிருக்கும் விளம்பரங்களைக் கொழும்பு நகரம் முழுதும் பார்க்கலாம். ஆனால் தமிழ் வளர்க்கும் இதே நாட்டில்,

'கோச்சி வரும் கவநம்'

'நிலம் அலப்பவர்'

போன்ற தமிழ்ப் பலகைகளையும் நாம் பார்க்கிறோம்.

நமது ஊரிலே ரேஷனிங் ஆபீஸ் என்றெல்லாம் ஆங்கிலத்தையே தமிழாக்குகிறோம். இலங்கையில்

டெக்ஸ்டைல் கண்ட்ரோல் ஆபீஸுக்குப் 'புடவைக் கட்டுப்பாட்டு அலுவலகம்' என்று பெயர்.

* * *

இலங்கையில் சுமார் முப்பது சினிமாத் தியேட்டர்கள் இருக்கலாம். இவைகளில் ஒன்றிரண்டைத்தான் தியேட்டர் என்று கூறலாம். மற்றவை எல்லாம் சாதாரணத் தகரக் கொட்டகைகள்தான். சினிமா பார்க்கும் ஜனங்களின் விருப்பத்தைப் பற்றியோ அல்லது உணர்ச்சியைப் பற்றியோ தியேட்டர்க்காரர்கள் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. வெளியூர்த்தியேட்டர்களிலே, பத்து வருஷங்களுக்கு முன் வெளியான மட்டமான தமிழ்ப் படங்களின் மங்கலான காப்பிகளை, இருபதாம் முறை அல்லது முப்பதாம் முறையாகக் காண்பிக்கிறார்கள். வெளியூர்களில் மூன்று நான்கு ஊர்களைத் தவிர, மற்ற இடங்களில் பெரும்பாலும் ஒரே தகரக் கொட்டகைதான் இருக்கிறது. இதில் மாலையில் ஆங்கிலப் படமும், இரவில் தமிழ்ப் படமும் காட்டுகிறார்கள்.

சிங்களவர்களுக்குப் பொதுவாகத் தமிழ்ப் பாஷை தெரியாது; என்றாலும் தமிழ்ப் படங்களுக்குத் தவறாமல் செல்வார்கள். தமிழ்ச் சினிமாப் படங்களைப் பார்த்து அதையே சிங்களத்தில் நாடகமாக நடிப்பதும் உண்டு.

கொழும்பு நகரத்தில் அடிக்கடி சிங்கள நாடகங்கள் நடைபெறுகின்றன. அவைகளில் ஒன்றின் பெயர் ஹரிதாஸ். சிங்கள நாடகத்தில் பிரசித்திபெற்ற கதாநாயகி ஒரு தமிழ்ப் பெண் என்று தெரிகிறது.

* * *

இலங்கையில் அரசாங்கத்தாருக்குச் சொந்தமான ஒரே ரேடியோ நிலையம் இருக்கிறது. இது அரசாங்கத்தின் தபால் இலாகாவினால் நடத்தப்படுகிறது.

ரேடியோவில் பெரும்பாலான செய்தியும், பேச்சும், சங்கீதமும் ஆங்கிலத்தில்தான். இந்த ரேடியாவில் சிங்களத்துக்கும் தமிழுக்கும் கூட இடங்கொடுக்கிருர்கள்.

இலங்கைத் தமிழர்கள், இலங்கை அரசாங்கத்துக்குத்தான் ரேடியோ லைசென்ஸ் கட்டணம் செலுத்துகிருர்கள். ஆனல் இவர்கள் கேட்பதெல்லாம் திருச்சி ரேடியோ. சிலர் கொழும்பு ரேடியோவில் தமிழ்ச் செய்திகளை மட்டும் கேட்பார்கள். கொழும்பு ரேடியோவையே கேட்காமலிருப்பவர்களும் உண்டு.

* * *

கொழும்பு நகரத்தில் தமிழ் யூனியன் என்பது ஒரு சங்கம். இவர்கள் தமிழுக்குப் பல விதமான தொண்டு செய்து வருவதாகத் தெரிகிறது. ஒரு நாள் நாய்ப் பந்தயம் நடத்தினர்கள். கொழும்புத் தமிழர்களுக்கு நாய்ப்பந்தயத்தில் அதிகப் பிரியம். கிரிக்கெட் கிளப்பில் இந்தப் பந்தயம் நடைபெற்றது. நூற்றுக்கணக்கான மோட்டார்களில் ஆயிரக்கணக்கான மக்கள் விதவிதமான உடையணிந்து, இந்தப் பந்தயத்தைப் பார்க்க வந்தனர்.

* * *

கொழும்பு பெரிய துறைமுகம். தினந்தோறும் ஏராளமான கப்பல் வந்துகொண்டிருக்கும். கொழும்பில் பெரிய ரயில்வே ஸ்டேஷன் இரண்டு. கோட்டை ஒன்று; மற்றென்று மரதான. கொழும்பு நகரத்தில் ஆயிரக்கணக்கான ரிக்ஷாக்கள் இருக்கின்றன. ரிக்ஷா இழுப்பவர்கள் பெரும்பாலும் தமிழர் அல்லது சிங்களவர். இத் தலைநகரில் ஆங்கிலத்துக்கடுத்த முக்கியமான பாஷை தமிழ்தான்.

* * *

கொழும்பு நகரத்தைத் அடுத்து, கடற்கரை ஓரமாக கொல்பிட்டி, பெம்பல பிட்டியா, வெள்ளவத்தை என்ற இடங்கள் இருக்கின்றன. இவை நகர சபை எல்லையைச் சேர்ந்தது தான். கொழும்பு நகரத்தில் வேலை செய்வோரில் பெரும் பகுதி இங்குதான் வசிக்கின்றனர். வெள்ளவத்தையில் யாழ்ப்பாணத்தார்கள் மிக அதிகம். எனவே வெள்ளவத்தையைச் சின்ன யாழ்ப்பாணம் என்றும் கூறுவார்கள்.

*　　　*　　　*

இந்தியாவைக் காட்டிலும் இலங்கையில் சுகாதார வசதிகள் நல்ல முறையிலிருக்கின்றன. அம்மை நோய் என்ற பேரைக் கேட்டாலே இலங்கைக்காரர்கள் பயந்து விடுவார்கள். இலங்கைக்குச் செல்பவர்கள் முதல் பதினைந்து நாள் வரை தினந்தோறும் டாக்டரிடம் சென்று, குவாரண்டைன் பாரத்தில் கையெழுத்து வாங்க வேண்டும். இதில் அலட்சியமாக இருந்தால், அது ஆபத்தாக முடியும்.

*　　　*　　　*

இலங்கையில் சாமான்களின் விலை மிகக் கிராக்கி. சில சாமான்கள் சில பகுதிகளிலே என்ன விலை கொடுத்தாலும் கிடைக்காது. கண்டிப் பகுதிகளில் சிலர் ஒரு வேளை தான் சோறு சாப்பிடுகின்றனர். மற்றொரு வேளை ரொட்டி பழம் முதலியவைதான். வெண்மையான சோறு பார்ப்பது அபூர்வம். பொதுவாகச் சோறு, நவரத்தினங்களைப்போல பல நிறங்கள் உள்ளதாக இருக்கும். இந்தச் சோற்றைப் பார்த்த பின்னர் தான், இலங்கையிலிருந்து இந்தியாவுக்குப் பலர் ஏன் அடிக்கடி வருகின்றனர் என்ற விஷயம் விளங்கிற்று.

ஒரு வாழைப் பழத்தின் விலை கால் ரூபாய் முதல் அரை ரூபாய் வரை, காலத்துக்கும் இடத்துக்கும் தக்கபடி இருக்கும். சில சமயங்களில் முட்டை ஒன்று

அரை ரூபாய் வரை விற்பனையாகும். உளுந்து கிடைப்பது கஷ்டம். கஷ்டப்பட்டுக் கிடைத்தாலும் கொத்து ஒன்று நான்கு அல்லது ஐந்து ரூபாய் இருக்கும். கொத்து என்பது அரைப்படிக்குச் சிறிது அதிகமானது. வெங்காயம், மிளகாய், கடுகு, சீனி முதலியவைகள் சில சமயங்களில் இருட்டுச் சந்தை யிலும் கிடைக்காமல் போய்விடும்.

எதுவுமே பொதுவாகக் குறித்த விலைக்குக் கிடைப்பதில்லை, ஐந்து சதம் விலையுள்ள பத்திரிகை எட்டுச் சதம். இந்தியாவில் ஐந்து ரூபாய் விலையுள்ள புத்தகம் இலங்கையில் சில சமயங்களில் பதின்மூன்று ரூபாய்க்கு விற்கும். சில சமயங்களில் தினசரிப் பத்திரிகைகளை வாங்கிப் படிப்பதைவிட, அவைகளைப் படிக்காமலே எடைபோட்டு விற்று விடுவதிலே அதிகமான லாபமுண்டு.

துணி விலை, யானை விலை குதிரை விலையாக இருக்கும். அப்படியானால் யானை விலை, குதிரை விலை இப்பொழுது எப்படி என்று கேட்காதீர்கள். துணி வாங்குவதற்குக் கூப்பன் உண்டு. ஆனால் இந்தக் கூப்பனுக்கு வாங்கு கிற துணி யாருக்குமே போதாது. சாதாரணமாக நான்குமுழ வேஷ்டி இருபது அல்லது இருபத்தைந்து ரூபாய்க்கும், லுங்கி முப்பது அல்லது நாற்பது ரூபாய்க்கும் விற்பனையாகும். சில சமயங்களில் குடை களின் விலை நாற்பது முதல் அறுபது வரை உயரும்.

காபிக் கிளப்புகளிலே பலகாரங்கள் இல்லாவிட்டா லும், ரேடியோ மட்டும் கண்டிப்பாக இருக்கும். உளுந்து இல்லாத தோசை, காபி என்று பேர் படைத்த வெந் நீர் முதலியவைகள்தான் கிடைக்கும். எவ்வளவுதான் பணம் செலவு செய்தாலும் வயிறார உண்ண முடியாது. கிடைக்கும் உணவு வகைகளும் மிக மட்டமாயிருக்கும்.

பொதுவாக இலங்கையில் எல்லாச் சாமான்களும் கிராக்கி. மலிவானது பணம் ஒன்று தான்!

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தை எனக்கு முதன் முதலாக அறிமுகப்படுத்தியது எழுத்தாணி. யாழ்ப்பாணத்திலிருந்து வரும்பொழுது அன்பளிப்பாகக் கிடைத்த பொருள்களிலே எழுத்தாணியும் ஒன்று. இந்த எழுத்தாணி எனக்கு உபயோகப்படாமல் போகலாம்; ஆனால் எழுத்தாணியையே பார்த்தறியாத தற்காலத்து இளைஞர் பலருக்கு, காட்சிப் பொருளாகக் காண்பிக்கவாவது இது உபயோகப்படும்.

வேதாரண்யத்துக் கடுத்த கோடிக்கரையிலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் கடல் வழியாகச் சுமார் இருபது மைல் பாய்மரக் கப்பலிலும்கூட, காற்றுச் சௌகரியமாயிருந்தால் இரண்டு மூன்று மணி நேரத்தில் பிரயாணம் செய்யலாம். முன் காலத்தில் வேதாரண்யத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருந்ததாகத் தெரிகிறது. வேதாரண்யத்தில் யாழ்ப்பாணத்தார் வீதி என்றே ஒரு வீதி இருக்கிறது. வேதாரண்யத்துக் கோயிலின் தர்மகர்த்தர் இன்றும் ஒரு யாழ்ப்பாணத்துக்காரர்.

கோடிக்கரையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஜனங்கள் கப்பலோட்டிக் கஷ்டப்படுவதைப் பார்க்க நமது அரசாங்கத்தாருக்குச் சகிக்கவில்லை. அதனால் ரயிலிலே சௌகரியமாகப் பிரயாணம் செய்யும் வசதியைச் செய்திருக்கிறார்கள். வேதாரண்யத்திலிருந்து சுமார் முந்நூறு மைல் ரயிலில் பிரயாணம் செய்தால், சுகமாக மூன்றாவது நாள் காலையில் யாழ்ப்பாணத்தை

அடையலாம்! இந்தியாவில் ரயில் போட்டதினால் ஏற்பட்ட நன்மைகளில் இதுவும் ஒன்று!

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ரயிலில் பிரயாணம் செய்தேன். அப்பொழுது, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு கல்லூரித் தலைவரும் அதே ரயிலில் பிரயாணம் செய்தார். அவருடன் பேசிக்கொண்டிருந்த பொழுது, 'இலங்கையிலேயே யாழ்ப்பாணம்தான் மிக அழகான பிரதேசம்' என்று கூறினார். யாழ்ப்பாணத்தைச் சுற்றிப் பார்த்த பின்னர், அந்தக் கல்லூரித் தலைவரின் தாய் நாட்டுப் பற்று எனக்கு நன்கு விளங்கிற்று.

யாழ்ப்பாணம், இலங்கையிலுள்ள பெரிய நகரங்களிலே ஒன்று, ஆனால் இன்னும் முனிசிபாலிடி ஆகவில்லை. விரைவில் ஆகக்கூடுமென்று தெரிகிறது. யாழ்ப்பாணம் போன்ற பெரிய ஊருக்கு, அங்குள்ள ரயில்வே ஸ்டேஷன் சிறிது.

இலங்கையின் வடக்குப் பகுதி யாழ்ப்பாணம். யாழ்ப்பாணம் என்பது சிறப்பாக அந்த ஊரையும், பொதுவாக அந்தப் பகுதியையும் குறிக்கும். யாழ்ப்பாணத்துக்கு ஈழநாடு என்றும் பெயருண்டு.

யாழ்ப்பாணப் பகுதியிலே, வீதியின் இருபுறங்களிலும் சுவரையே பார்க்க முடியாது. பெரும்பாலான வீடுகளின் முன் புறத்தில் தோட்டமுண்டு. வீடுகளுக்குக் காம்பவுண்டு அமைத்திருக்கிறார்கள். சுவர் கிடையாது. அதற்கும் வேலி. தென்னங் கீற்றுக்களால் அழகிய முறையில் அமைக்கப்பெற்றிருக்கும் அவ்வேலிகளுக்குக் 'கிடுகு வேலி' என்று பெயர். இது யாழ்ப்பாணத்துக்கே உரியதான தனிச் சிறப்பு.

'வீதி தோறும் இரண்டொரு பள்ளி' இருக்க வேண்டுமென்று பாரதியார் கூறினார். இதனை

நடை முறையில் கடைப்பிடிப்பது யாழ்ப்பாணம் ஒன்று தான். மூலை முடுக்குகளிலும்கூட ஒரு பள்ளிக் கூடத்தையோ அல்லது வாசக சாலையையோ காண லாம். தவறி விழுந்தால் தமிழ்ப் பண்டிதர் மேல் தான் விழவேண்டும். யாழ்ப்பாணப் பகுதிகளில் ஊர்களுக்கு நல்ல தமிழ்ப் பெயர்கள் வைத்திருக்கிறார்கள். உதாரண மாக காங்கேயன் துறை, பருத்தித்துறை, கீரிமலை, திருவடி நிலை போன்ற பெயர்களைக் கேட்க மகிழ்ச்சி யடைகிறோம். ஆனால் இதே நாட்டில் மணிப்பாய், கோப்பாய், சாண்டிலிப்பாய், உடுவில், கொக்குவில் போன்ற பெயர்களும் இல்லாமலில்லை.

யாழ்ப்பாணத்தில் இப்பொழுதுள்ள தமிழ்ப் பத் திரிகை இரண்டு. ஒன்று பழைய காலத்து 'இந்து சாதனம்.' இதன் ஆசிரியர், ஹாஸ்யமாகப் பிரசங்கம் செய்யவல்ல ஸ்ரீ திருஞான சம்பந்தனார். சமயத்தை வளர்க்கும் துறையில் இப் பத்திரிகை நெடுங்காலமாகத் தொண்டு செய்கிறது. மற்றொரு பத்திரிகை சுன்னாகத்தி லிருந்து வெளிவரும் 'ஈழ கேசரி.' இதன் அதிபர் ஸ்ரீ நா. பொன்னையா பர்மா, மலேயா, முதலியநாடுகளில் அனுபவம் பெற்றவர். ஈழகேசரி, தேசியத் துறையில் உழைக்கும் வாரப்பத்திரிகை. ஈழ நாட்டில் பல இளம் எழுத்தாளர்களுக்குச் சந்தர்ப்பம் அளிப்பது இப்பத்திரிகை.

யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் வரும் தமிழ் நடைக் கும், யாழ்ப்பாணத்தார் பேசும் தமிழ் நடைக்கும் வித்தி யாசம் உண்டு. யாழ்ப்பாணத்தில் ஒரு அன்பர் என்னைப் பார்த்து 'தாங்கள், இங்கு வந்து கன நாளாச்சோ?' என்றார். இது எனக்குப் புரியவில்லை. 'புரியவில்லை' என்று நான் அவரிடம் கூறினேன். அது அவருக்கு

விளங்க இல்லை. அவருக்கு 'விளங்க இல்லை' என்பதும் நமக்குப் 'புரியவில்லை' என்பதும் ஒன்றுதான்.

சாதாரணமாக 'பேசிக் கொண்டிருங்கள்' என்பதற்கு 'கதைத்துக் கொண்டிருங்கள்' என்பார்கள்.

'அதிகக் குறைவான விலை' என்பதற்கு 'மிச்சம் குறைவான விலை' என்பார்கள்.

'வண்டி' என்பதற்குக் 'கரத்தை' என்பார்கள். பள்ளிக்கூடமொன்றில், ஆசிரியர் ஒருவர் மாணவனுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கையில் வ—ண்—டி—வண்டி—அர்த்தம் கரத்தை என்று விளக்கிக் கூறுவார்.

கொழும்பு நகரத்தையடுத்த சிறிய ஊர் ஒன்றில், யாழ்ப்பாணத்து நண்பர் ஒருவரின் வீட்டிற்கு விருந்துக்குச் சென்றேன். சாப்பிடும்பொழுது அவ்வீட்டு அம்மையாரைப் பார்த்து 'அம்மா! இவ்வூரில் ஏதேனும் கோயில் உண்டா?' என்று கேட்டேன். அம்மையார் உடனே 'சே' என்றார்கள். எனக்கு ஒன்றும் விளங்க இல்லை. 'நாம் ஒன்றும் தவருக்க் கேட்கவில்லையே? ஏன் இந்த அம்மையார் நம்மை இப்படிச் சொல்ல வேண்டும்?' என்று யோசித்துக் கொண்டே அருகிலிருந்த நண்பரை ஒரு கேள்வி கேட்டேன். அவர் 'சே சே' என்றார். அதுவும் எனக்கு விளங்க இல்லை. பிறகு சம்பாஷணையின்போது 'சே சே' என்றெல்லாம் வந்தது. யாழ்ப்பாணத்தார் 'இல்லை' என்று சொல்வதற்குப் பதிலாக 'சே சே' என்பார்கள். 'இல்லை' என்பதை அழுத்திச் சொல்லவேண்டிய சமயத்தில் 'சே' என்பதை அழுத்திச் சொல்வார்கள். யாராவது யாழ்ப்பாணத்தார் 'சே' என்று கூறினால் யாரும் தவருக நினைக்கவேண்டாம். நமது சகோதரர்களான யாழ்ப்பாணத்தார் நம்மை அவமதிப்பார்களா? சே! ஒருபோதும் இல்லை!

யாழ்ப்பாணத்தார், தாங்கள் பேசும் தமிழ்தான் சரியான தமிழ் என்று நினைக்கின்றனர்; அவ்வாறே கூறுகின்றனர். அவர்கள் நினைப்பதும், கூறுவதும், பெருமைப்படுவதும் முற்றிலும் சரி என்றே எனக்குத் தோன்றுகிறது. நாம் தமிழ் மொழியை வளர்ப்பதாகச் சொல்லிக்கொண்டு, பிற மொழிச் சொற்களைத் தினந் தோறும் தமிழில் புகுத்தி வருகிறோம். ஆனால் யாழ்ப் பாணத்தார் தான், கன்னித் தமிழை அவளது இளமை குன்றாது பாதுகாத்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் ஏராளமான காலேஜ்களும் பள்ளிக்கூடங்களும் உண்டு. மிகப் பழமையானதும், கூடிய வரை முற்பேர்க்குள்ளதுமான கல்வி ஸ்தாபனம், அமெரிக்க மிஷனரிகளால் நடத்தப்பெறும் ஜாஃப்னா காலேஜ். யாழ்ப்பாணம் இந்து காலேஜ், சர் பொன்னம் பல ராமநாதன் ஏற்படுத்திய பரமேஸ்வரா காலேஜ், யாழ்ப்பாணத்தில் கிறிஸ்துவர்களால் நடத்தப்பெறும் சென்ட்ரல் காலேஜ் போன்ற பல கல்வி ஸ்தாபனங்களும் இருக்கின்றன.

பெண்களுக்கான கல்வி ஸ்தாபனங்களில் முதன்மையானது ராமநாதன் கல்லூரி. திருவிதாங்கூரைச்சேர்ந்த ஸ்ரீமதி பிள்ளையின் நிர்வாகத் தலைமையில் இக்கல்லூரி நன்கு நடைபெறுகிறது. யாழ்ப்பாணம் இந்துப் பெண்கள் கல்லூரி, இப்பொழுதுதான் ஆரம்பிக்கப் பெற்று வளர்ந்து வரும் ஸ்தாபனம்.

தெல்லிப் பிழையில் உள்ள யூனியன் காலேஜில் மாணவர்களுக்குச் சிறந்த முறையில் கைத்தொழில் கல்வி கற்பிக்கின்றனர்.

இந்து போர்டார் என்ற ஸ்தாபனத்தார் யாழ்ப் பாணப் பகுதியில் நூறுக்கு மேற்பட்ட பள்ளிக்கூடங் களை நடத்தி வருகின்றனர்.

வித்யாலயம் என்பது ராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த கல்வி ஸ்தாபனம். இதன் தலைமை ஆசிரியர், ஸ்ரீ அம்பிகை பாகன் அவர்கள். யாழ்ப்பாணப் பகுதியில் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு நல்ல மதிப்புண்டு. கந்தையா என்பது, ஆசிரியர் பெயரானால் அவரை மாஸ்டர் கந்தையா என்று அழைப்பார்கள். தமிழ் நாட்டுப் பள்ளிக்கூட ஆசிரியர்களின் சம்பளத்தையும் அந்தஸ்தையும்விட, யாழ்ப்பாணத்து ஆசிரியர்களின் சம்பளமும் அந்தஸ்தும் உயர்வு. இலங்கையில் பொது வாக, பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்குகிறவர் கள் பள்ளிக்கூடத்து ஆசிரியர்கள் என்று கூறிவிடலாம். வழக்கறிஞர்களை விட ஆசிரியர்கள்தான் பொதுவாழ்க் கையில் ஈடுபடுகின்றனர். ஸ்டேட் கவுன்சிலில் அங்கம் வகிக்கும் ஸ்ரீ நடேச பிள்ளை, ஸ்ரீ நல்லையா முதலியவர்கள் பள்ளிக்கூடத்து ஆசிரியர்கள்தான். நூல் இயற்றுபவர் களும், பிரசங்கம் செய்பவர்களும் பள்ளிக்கூடத்து ஆசிரியர்கள். தமிழ் நாட்டில் வெளியாகும் முக்கியமான பத்திரிகைகளைத் தவருது படிப்பதும் இந்த ஆசிரியர் களே. வரதட்சணைக் கொடுமை நிறைந்த யாழ்ப்பாணத் தில், வீடு, விளை நிலம், ஆபரணம் முதலியவற்ருேடு, டிரெயினிங் பாஸ் செய்த அழகிய கன்னிப் பெண்ணும் கிடைத்துவிட்டால் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு என்ன குறை?

யாழ்ப்பாணம், செட்டிமார் நாட்டைப் போன்ற செழிப்பான பூமி! சில இடங்களில் ஐம்பது அடி ஆழத் தில் தான் தண்ணீர் கிடைக்கும். சில இடங்களில் பூமியை வெட்டினுல் பாருங்கல்லைத்தான் பார்க்கலாம். இந் நிலையிலும் பலர் உழுதுண்டு வாழ்கின்றனர். யாழ்ப் பாணத்தில் அதிகமாகப் பயிரிடப்படுவது புகையிலை. மலையாளத்துக்கும் தென்னிலங்கைக்கும் புகையிலை

ஏற்றுமதி செய்கின்றனர். யாழ்ப்பாணச் சுருட்டுகள் பேர் பெற்றவை. யாழ்ப்பாணத்தாருக்குச் சுருட்டு என்றால், அதிலும் கோடா என்றால் உயிர். கோடா என்பது ஒரு வகைத் திராவகத்தில் ஊறவைத்த சுருட்டு.

நல்லூர்க் கந்தசாமி கோயில்தான், யாழ்ப்பாணத்திலேயே பெரிய கோயில். மாவிட்டபுரத்தில் இப்பொழுது ஒரு கோயில் கட்டுகிறார்கள். காளியம்மன் கோயில் போன்றவைகளும் உண்டு. பொதுவாக யாழ்ப்பாணத்துக் கோயில்கள் சிறியவை. தமிழ் நாட்டில் சாதாரணமான ஒரு கோயிலைப் போன்று, யாழ்ப்பாணத்தில் ஒரு கோயிலும் இல்லை என்று கூறிவிடலாம். வெள்ளிக்கிழமைதோறும் ஆயிரக்கணக்கான மக்கள், நீராடி, திருநீறணிந்து, அர்ச்சனைக்கு வேண்டிய பொருள்களைக் கையிலேந்தி அதிகாலையில் ஆலயத்துக்குச் செல்வது அற்புதக் காட்சியாக இருக்கும்.

யாழ்ப்பாணத்தார், தீர்த்த யாத்திரையின் பொருட்டு இந்தியாவுக்கு வருவதுண்டு. சிதம்பரம், வைத்தீசுவரன் கோயில் இரண்டுதான் அவர்களுக்கு மிக முக்கியமான ஸ்தலங்கள். நேரமும் பண வசதியும் உள்ளவர்கள் காசிக்கும் செல்வார்கள்.

யாழ்ப்பாணத்தில் பெரும்பாலும் சிவாலயங்கள். வைஷ்ணவ ஆலயங்கள் ஒன்றிரண்டு இருக்கலாம். வைஷ்ணவர்கள் இருக்கிறார்களா என்று தெரியவில்லை. யாழ்ப்பாணத்தார் பெரும்பாலும் சைவர்கள். சைவமும் தமிழும் தழைத்தோங்குமிடத்தில் வைஷ்ணவத்துக்கு இடமேது?

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் உற்சவங்களுக்கு இந்தியாவிலிருந்துதான் மேளக்காரர்கள் செல்கின்றனர்.

சதிர், சின்ன மேளம், பெரிய மேளம், வர்ண வேடிக்கை எல்லாம் யாழ்ப்பாணத்திலும் உண்டு.

யாழ்ப்பாணத்தாரின் சமயப் பற்றை வளர்த்தவர் ஸ்ரீ ஆறுமுக நாவலர். இன்று தினமும் கூட்டங்களில், கடவுள் வணக்கமாகத் தேவாரம் பாடுகின்றனர்.

யாழ்ப்பாணத்தாரின் பெயர்களும் பெரும்பாலும் கடவுள் பெயர்தான். நடராசர், தில்லையம்பலம், அம்பல வாணர், தியாகராசா, சுப்பிரமணியம் முதலியவை. தமிழ் நாட்டில் இல்லாத கந்தையா, தம்பையா, முத்துத் தம்பி, ஜயக்கொடி, தர்மகுலசிங்கம், பரிராசா, தங்கராசா போன்ற பெயர்களும் உண்டு.

'ஊரார் பிள்ளை சேர்ட்டை, பாயைத் தூக்கினல் மூட்டை' என்பது யாழ்ப்பாணத்துப் பழமொழிகளுள் ஒன்று. இந்தப் பழமொழி யாழ்ப்பாணத்தாருக்குச் சுவீகாரத்தின் மீதுள்ள வெறுப்பைக் காட்டுகிறது. ஒரு சிலர் தங்களுக்கு விருப்பமான சிறு குழந்தைகளை எடுத்து வளர்ப்பதுண்டு. பொதுவாகச் சுவீகாரம் என்ற வழக்கமே இல்லை.

'யாழ்ப்பாணத்தில் மாமிசம் சாப்பிடும் பழக்கம் அதிகமா?' என்று ஒரு நண்பரைக் கேட்டேன். அதற்கவர் 'ஆங்கிலம் படித்தவர்களும், உத்தியோகத்திலுள்ளவர்களும் தான் பொதுவாக மாமிசம் சாப்பிடுகிறார்கள்' என்று கூறினர். யாழ்ப்பாணத்தில் பால் அதிகமாக் கிடைப்பதில்லை. அப்படிக் கிடைத்தாலும் படிக்கணக்கில் விற்கமாட்டார்கள்; போத்தல் கணக்கில் தான் விற்பார்கள். சில வீடுகளில் மாடு வைத்திருக்கிறார்கள். பாலுக்குப் பதிலாகத் தேங்காய்ப் பாலைச் சில சமயங்களில் உபயோகிக்கிறார்கள். தேங்காய்ப் பாலைக் கொண்டு செய்வதுதான் சொதி என்பது. இடியப்பனும்

சொதியும் யாழ்ப்பாணத்தில் முக்கியமான பலகாரம். காய்கறிகள் நிறையக் கிடைக்கும். ஈழ நாட்டார் தமிழ் நாட்டைப்போல உணவு தயாரித்தாலும், ஆந்திர நாட்டை விட அதிகமான காரம் நிறைந்திருக்கும்.

'உத்தியோகமே புருஷ லட்சணம்' என்று நம்புகிறவர்கள் யாழ்ப்பாணத்தார். கஷ்டப்பட்டுப் படிப்பார்கள். எல்லாம் உத்தியோகம் பெறுவதற்காக! யாழ்ப்பாணத்தாரில் வியாபாரிகளைக் காண்பது அரிது. எல்லோருக்கும் அரசாங்க உத்தியோகம்தான். இலங்கையின் எந்த மூலை முடுக்கிலாவது ஒரு சானிட்டரி இன்ஸ்பெக்டரையோ அல்லது ஓவர்சியரையோ கண்டால், அவர் ஒரு யாழ்ப்பாணத்தாராகத் தான் இருப்பார். உத்தியோகத்துக்கேற்ற வரதட்சணை கிடைக்கும். யாழ்ப்பாணத்தில் பெண்ணைப் பெற்றவரின் நிலை பரிதாபம். நல்ல உத்தியோகத்திலுள்ள மாப்பிள்ளை வேண்டுமானால், சில சமயங்களில் லட்சக் கணக்கில் செலவு செய்யவேண்டும். மாப்பிள்ளைக்குக் கொழும்பில் ஒரு வீடு வாங்கிக் கொடுக்கவேண்டும்.

இலங்கைக்கு அடுத்தபடியாக, யாழ்ப்பாணத்தார் அதிகமாக வசிக்கும் இடம் மலேயா நாடு. மலேயாவில் உள்ள இலங்கையர் சுமார் முப்பதாயிரம். இதில் இருபத்தெட்டாயிரம் பேர் யாழ்ப்பாணத்தார். அங்கும் உத்தியோகம்தான். ரயில்வேக்களிலும், பாங்குகளிலும் யாழ்ப்பாணத்தாரைப் பார்க்கலாம்.

யாழ்ப்பாணத்திற்கென்றே தனிப்பட்ட பட்டங்களை அரசாங்கத்தார் வழங்குகின்றனர். இந்தப் பட்டங்களைப் பெறுவதற்கும் அநேகருக்கு ஆசை இருக்கிறது. முகாந்திரம், முதலியார், கேட் முதலியார், அதிகார் இந்தப் பட்டங்களின் வரிசை. 'என்ன முகாந்திரமாய் வந்தீர்?' என்று கேட்பது வழக்கமல்லவா? இம்மாதிரி அரச

சபைகளிலே இருந்துகொண்டு கேட்கிறவர்களுக்கு முகாந்திரம் என்று பட்டம் வந்ததாம். இப்பொழுது இது அரசாங்கத்தார் கொடுக்கும் பட்டமாகிவிட்டது. முதலியார் என்பது ஜாதிப்பேரல்ல; அதுவும் ஒரு அரசாங்கப் பட்டம். நமது நாட்டில் பெயருக்குப் பின்னால் முதலியார் என்று, போடுவார்கள். அங்கு பெயருக்கு முன்னால் முதலியார் என்று போடுவார்கள். நியாயஸ்தலங்களில் மொழிபெயர்ப்பவர்களுக்கும் முதலியார் என்று பெயர். சென்னையில் 'துபாஷ்' என்று கூறப்படும்—அதாவது இரண்டு பாஷைகளில் பேசும் திறமையுள்ளவர் (துவிபாஷி). பெரும்பாலோர் முதலியார்கள். இதனால்தான் போலும் இலங்கையில் 'துபாஷ்' உத்தியோகத்திலிருப்பவர்களை எல்லாம் 'முதலியார்' என்று அழைக்கின்றனர்.

யாழ்ப்பாணம் பல தீவுகள் கொண்டது. மண்டத் தீவு, நெடுந் தீவு, பூங்குடித் தீவு முதலிய பல உண்டு.

கீரிமலையையும் சுன்னாகம் சந்தையையும் பார்த்து விட்டால், யாழ்ப்பாணத்தைப் பார்த்ததாக ஆகாது. கீரிமலையில் கடலுக்கடுத்த சில அடி தூரத்தில் அற்புதமான ஊற்று ஒன்று இருக்கிறது. காலை ஏழு அல்லது எட்டு மணிக்கோ அல்லது மாலையிலோ அங்குப் போய் ஸ்நானம் செய்தால் ஆனந்தமாக இருக்கும். விடுமுறை நாளிலே இங்குக் கூட்டம் ஏராளமாக வரும்.

சுன்னாகம், யாழ்ப்பாணத்தை அடுத்த ஊர். வாரம் இரு முறை இங்கு சந்தை நடக்கும். சந்தையைச் சுற்றிப் பார்க்கவே ஒரு மணி நேரம் செல்லும். ஏராளமான காய் கறிகளை, முக்கியமாக முருங்கைக் காயைப் பார்க்கலாம்.

யாழ்ப்பாணத்தில் பவுன் பத்து ரூபாய் தான்; ஆனால் பத்து ரூபாய்க்குப் பவுன் கிடைக்காது. ஒரு சாமான் விலையைச் சொல்லும்போது, உதாரணமாக

ஒரு சைசிகல் விலையைக் கூறும்பொழுது முப்பது பவுன் அல்லது நாற்பது பவுன் என்று கூறுவார்கள்.

செவ்வாய்க்கிழமையிலும், வெள்ளிக்கிழமையிலும் யாழ்ப்பாணத்தார் புதிதாக வரும் விருந்தினர்களை உபசரிக்கும் வழக்கமில்லை. வெள்ளிக்கிழமை தோறும் பெரும்பாலோர் விரதமிருப்பார்கள்.

யாழ்ப்பாணத்தில் தங்கி யிருந்த ஒரு வாரத்தில், அந்தநாட்டில் உணவுக் கட்டுப்பாடோ அல்லது பெட்ரோல் கட்டுப்பாடோ இருந்ததாக் எனக்குத் தெரியவில்லை. யாழ்ப்பாணத்தில் பல தமிழ் அறிஞர்களையும், தேசீய உணர்ச்சியும் முற்போக்கான எண்ணமுமுள்ள பல வாலிபர்களையும், ஆயிரக்கணக்கான மாணவர்களையும் சந்திக்கும் பாக்கியம் கிடைத்தது. அவர்கள் காட்டிய அன்பும் உபசாரமும் பெரிது. ஆனல் அதைக் கண்டு நான் ஆச்சரியப் படவில்லை. தமிழரிடத்தில் அன்பையும் உபசாரத்தையும் கண்டு யாரேனும் ஆச்சரியப்படுவார்களா?

கப்பல் ஞாபகங்கள்

சுமார் பதினைந்து வருடங்களுக்குமுன், கப்பல் பார்ப்பதற்காகச் சென்னைக்கு வந்திருந்தேன். நண்பர்களுடன் துறைமுகத்துக்குச் சென்றேன். கப்பல் கரையோரத்தில் நிற்கவில்லை. சிறிது தூரத்தில் நங்கூரம் போட்டு நின்றது. கப்பலுக்குப் போவதென்றால் படகில்தான் போகவேண்டும். படகில் செல்ல எனக்குப் பயம்; ஆனால் கப்பலைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை. ஆசையை விடப் பயம் அதிகமாய் இருந்ததால், கப்பலைப் பார்க்க முடியாமல் போய்விட்டது. என்னுடன் வந்த நண்பர்களெல்லாம் படகில் ஏறிவிட்டனர். நான் மட்டும் படியில் நின்றுகொண்டிருந்தேன். நண்பர்கள், எனது கையைப் பிடித்து இழுத்துப் படகிற்கு வரும்படி கட்டாயப்படுத்தினர். நான் பிடிவாதமாக மறுக்கவே, அவர்களெல்லோரும் எனது பயங்கொள்ளித்தனத்தைக் கண்டு, ஏளனம் செய்து சிரித்தனர். எனக்கோ அவமானம் தாங்க முடியவில்லை; அதனால் கோபமும் வந்தது. எனது வாழ்க்கை முழுதும் கப்பலிலேயே ஏறுவதில்லை யென்று எனக்குள்ளேயே பிரதிக்ஞை செய்துகொண்டேன். ஆனால், அதற்குத் தண்டனையாகத்தான் சுமார் முந்நூறு நாட்களுக்கு மேல் கப்பலில் பிரயாணம் செய்ய நேர்ந்தது போலும்!

* * * *

சில வருடங்களுக்கு முன்னே, யாராவது ஒருவர் என்னைப் பார்த்து, கடவுள்மீது உனக்கு நம்பிக்கை யுண்டா?'' என்று கேட்டிருந்தால், பெரும்பாலும் 'இல்லை' என்றுதான் கூறியிருப்பேன். அதற்கு

முக்கிய காரணம், தமிழ் நாட்டில் சிலர் கடவுளை எப்படி யாவது கண்டுபிடித்து, அவரைத் தண்டிக்க முயற்சி செய்தது தான். ஆனால் எனது கப்பல் பிரயாணத் துக்குப் பின்னர், கடவுள்மீது நம்பிக்கை உண்டா யிற்று. நாளடைவில் அந்த நம்பிக்கை உறுதிப் பட்டது. சிங்கப்பூரிலிருந்து ஒரு கப்பலில் ஹாங்காங் குக்குப் பிரயாணமானேன். ஆறுவது நாள் காலையில் கப்பல் துறைமுகத்தை யடைய வேண்டும். ஆனால், ஐந்தாவது நாள் இரவில் பெரும் புயற் காற்று அடிக்கத் தொடங்கிற்று. கப்பல் தொட்டிலைப்போல ஆடிற்று. எங்கும் ஒரே கூச்சல்; அழுகை. கப்பலின் தலைமை அதிகாரி பிரயாணிகளைப் பார்த்து, " இனி நீங்கள் உங்கள் இஷ்ட தேவதைகளைப் பிரார்த்தனை செய்து கொள்ளலாம்" என்று கூறினார். கப்பலில் பல மதத் தினர் பிரயாணம் செய்ததால், ஒரு மதத்துத் தேவதை இல்லாவிட்டாலும், மற்றொரு மதத்துத் தேவதை யாவது கப்பலைக் காப்பாற்றலாம், என்று கப்பல் அதிகாரி எண்ணியிருக்கக்கூடும். கப்பலில் உள்ள அத்தனை பேரும், ஒரே முகமாக, கரை சேரவேண்டு மென்று பிரார்த்தித்தனர். ஆண்டவன் வேறு விதமாக எங்களைக் கரை சேர்த்து விடாமல், மறுநாள் காலையில் ஹாங்காங் துறைமுகத்திலேயே கரை சேர்த்துவிட்டார்.

* * * * *

கப்பல்கள் துறைமுகத்துக்கு வந்தால், ஒவ்வொரு துறை முகத்திலும் குறைந்தது சில மணி நேரமாவது தங்கும். இந்த இடைக்காலத்தில் ஏராள்மான வியா பாரிகள், கப்பலுக்குள் வந்து கடையை விரித்து விடுவார்கள். இந்தக் கடைகளிலே கண்ணைப் பறிக்கும் வர்ணச் சாமான்கள் ஏராளமாயிருக்கும். இந்த வியா பாரிகளுக்குப் பல பாஷைகள் தெரியும். ஒரே சாமா னைப் பல தேசத்தவர்களிடம் அவரவர் பாஷையில்

பேசி, வெவ்வேறு விலைக்கு விற்றுவிடுவார்கள். இவர்கள் பெரிய வியாபாரிகள். இரண்டே நிமிஷத்தில் கடையை விரிப்பார்கள்; கப்பல் புறப்படுவதற்குமுன் கப்பல் வேலைக்காரர்கள், இவர்கள் சாமான்களை அள்ளிக் கரையில் எறிய முயலும்போதுதான் கடையைக் கட்டுவார்கள்.

இந்தவியாபாரிகளுக்கு நாணயமாகச்செய்வதில் நம்பிக்கையில்லை. வியாபாரம் செய்வதைவிட, பேரம் செய்வதில்தான் இவர்களுக்கு அதிகமான லாபமுண்டு. ஹாங்காங் துறைமுகத்தில் ஒருமுறை ஒரு சீனன் கப்பலில் கடை விரித்திருந்தான். ஒரு அமெரிக்கப் பெண், அந்தக் கடையிலுள்ள ஓர் அழகிய பொம்மையைப் பார்த்து, 'இதன் விலை என்ன?' என்றாள். 'எட்டு டாலர்' என்று சீனன் பதில் கூறினான். அமெரிக்கப் பெண், சாமான் வேண்டாம் என்று கூறிவிட்டாள். ஆனால், சீனன் விடவில்லை. 'உங்களுக்கு இஷ்டமான விலைக்குக் கேளுங்கள்' என்று கூறினான். ஒரு தடவை சாமானை விலைக்குக் கேட்டுவிட்டால், பிறகு லேசில் விடமாட்டார்கள். இந்த அமெரிக்கப் பெண், சீனனின் தொந்தரவு பொறுக்க முடியாமல், சாமான் வேண்டாம் என்ற கருத்துடன், ஒரு டாலருக்குக் கேட்டாள். சீனன், சிறிதும் யோசியாமல் "சரி, எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டான்.

சில மணி நேரத்துக்குப் பிறகு, கப்பல் துறைமுகத்தை விட்டு நகர்ந்தது. அமெரிக்கப் பெண், தான் வாங்கிய சாமானை மற்றப் பிரயாணிகளிடம் காண்பித்து, தான் அதை ஒரு டாலருக்கு, அதாவது மிகவும் குறைந்த விலைக்கு, வாங்கிவிட்டதாகப் பெருமையடித்துக் கொண்டாள். வயதும் அநுபவமும் நிறைந்த

பிரயாணி ஒருவர், அமெரிக்கப் பெண்ணைப் பார்த்து, 'அம்மா, இந்தச் சாமான் விலை அரை டாலர் தானே?' உங்களைக் கடைக்காரன் அநியாயமாய் ஏமாற்றி விட்டானே!'' என்றார்.

*   *   *   *

யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னே, பம்பாயி லிருந்து இத்தாலியக் கப்பலொன்றில் பிரயாணம் செய்தேன். அந்தக் கப்பலில் இத்தாலியர்களும், ஜெர்மனியர்களுமே அதிகம். ஒரு சில ஆங்கிலேயர் களும் பிரயாணம் செய்தனர். பொதுவாக ஐரோப்பியர் யாவரும், தங்கள் தங்கள் நாட்டுக் கப்பல்களில் தான் பிரயாணம் செய்வார்கள். தங்கள் தேசக் கப்பல்கள், சௌகரியமாய் வாய்க்கவில்லையானால், அவசரத்தைக் கருதி மற்ற நாட்டுக் கப்பல்களில் பிரயாணம் செய்வார் கள். கப்பல் பம்பாய்த் துறைமுகத்தை விட்ட இரண்டாவது நாளிரவு, ஹிட்லருடைய ரேடியோப் பிரசங்கத்தைக் கேட்கத் தங்களுக்கு வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டனர். ஹிட்லருடைய பிரசங்கம் சாப்பாட்டு நேரத்தில் இருந்ததால், அன்றிரவு கப்பலி லிருந்த ஜெர்மன் பிரஜைகளுக்கெல்லாம், சாப்பாட்டு நேரத்துக்கு ஒரு மணிக்கு முன்னதாகவே உணவளிக் கப்பட்டது. கப்பலில் உள்ள ஹாலில், ஜெர்மன் பிரஜைகள் தங்கள் தலைவர் பிரசங்கத்தைக் கேட்க வெகு ஆவலுடன் உட்கார்ந்திருந்தனர். கப்பல் காப்டன் இத்தாலியனாக இருந்தபோதிலும், கப்பலில் ஒரு தேசத்தார் இம்மாதிரி ஆதிக்கம் செலுத்துவது அவனுக்குப் பிடிக்கவில்லை. எனவே, சில ஏற்பாடு களைச் செய்துவிட்டு, அந்த ஜெர்மன் மக்களின் முன்னே சென்று, ரேடியோ யந்திரம் கெட்டுவிட்டதென்றும், அதற்காக மன்னிக்க வேண்டுமென்றும் காப்டன் கேட்டுக்கொண்டான். அந்த ஜெர்மன் பிரஜைகள்

சிவந்த முகத்தோடு கப்பலின் மேல் தட்டுக்கு வந்த காட்சி மிகவும் இரங்கத் தக்கதாக இருந்தது.

* * *

ஹாவர்யிலிருந்து அமெரிக்காவுக்கு ஜப்பானியக் கப்பலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். அமெரிக்க அம்மையார் ஒருவர் தமது குழந்தையோடு அதே கப்பலில் பிரயாணம் செய்தார். ஆனால் அந்தக் கப்பலில் பிரயாணம் செய்வதற்காக அவர் இரண்டு மடங்கு கப்பற் கட்டணம் செலுத்தினர். அமெரிக்கர்கள் அமெரிக்கத் துறைமுகங்களுக்கிடையே அமெரிக்கக் கப்பலில் தான் பிரயாணம் செய்ய வேண்டும்; அவ்வாறில்லாமல் வேறு நாட்டுக் கப்பல்களில் பிரயாணம் செய்தால், இரட்டிப்புக் கட்டணம் செலுத்தவேண்டும். இதில் ஒரு கட்டணம் அமெரிக்க அரசாங்கத்துக்கும், மற்றொரு கட்டணம் அந்த அன்னிய நாட்டுக் கப்பலுக்கும் சேரும். அமெரிக்கர் மட்டும் செழித்து வளர்வதற்கும், சுதந்திரமாய் இருப்பதற்கும், இந்த ஏற்பாடும் ஒரு முக்கிய காரணமாகும். ஆனால், நமது நாட்டில் நாம் என்ன செய்கிறோம்? 'கதர் விலை அதிகம்' என்றுதான் இன்னும் சொல்லிக் கொண்டிருக்கிறோம்!

* * * * *

கப்பல்களிலே பிரயாணம் செய்யும்போது ஒரு சிலர் நமக்கு அறிமுகமாவது உண்டு. இந்த அறிமுகங்கள், பின்னல் நட்பாகவும் மாறும். அறிமுகமானவர்களுக்கு ஞாபகார்த்தமாகச் சில பொருள்கள் கொடுப்பது வழக்கம். பொருள் விலையுயர்ந்ததாய் இருக்க வேண்டிய அவசியமில்லை. படமுள்ள போஸ்ட்கார்டு ஆக இருந்தாலும் போதும். சிலர் இந்த ஞாபகார்த்தப் பொருள்களோடு திருப்தியடைவதில்லை. தாங்கள்

குறிப்பிட்ட கப்பலில் பிரயாணம் செய்ததற்கு ஞாபகார்த்தமாகச் சில பொருள்களையும் அதிலிருந்து எடுத்துச் சென்றுவிடுவார்கள். இந்த ரகப் பிரயாணிகளில் போலந்துக்காரர்களைக் குறிப்பிடலாம். டென்மார்க்கிலிருந்து, நியூயார்க்குக்குப் போலந்துக் கப்பலொன்றிலே பிரயாணம் செய்தேன். நியூயார்க் துறைமுகத்தை யடைவதற்கு முதல் நாள் இரவு, சாப்பிட்டு முடிந்ததும் காபி கொடுத்தார்கள். கப் தான் இருந்ததேதவிரக் கரண்டியைக் காணவில்லை. வேலைக்காரனைக் கூப்பிட்டுக் கரண்டி கொண்டு வரும்படி கூறினேன். அதற்கு வேலைக்காரன், 'கரண்டிகள் எல்லாம் காணமற் போய்விட்டன' என்றான். மேலும் அவன், கரண்டிகளில் அந்தக் கப்பலின் பெயர் பொறிக்கப்பட்டிருப்பதாகவும், பிரயாணிகள் அந்தக் கப்பலில் பிரயாணம் செய்ததற்கு ஞாபகார்த்தமாய்க் கரண்டிகளை எடுத்துச் செல்லுகிறார்களென்றும், பிரயாணிகளுடைய பெட்டிகளையும் சட்டைப்பைகளையும் பரிசோதித்தால், காணமல் போன கரண்டிகள் எல்லாம் கிடைத்துவிடும் என்றும் கூறினான்!

* * * *

நியூயார்க்கிலிருந்து ஐரோப்பாவுக்குப் பிரயாணமானேன். நியூயார்க் துறைமுகத்தில், வழியனுப்புவதற்காக நண்பர்கள் சிலர் வந்திருந்தனர். அவர்களில், கிறிஸ்துவ மதப் பிரசாரத்தில் நம்பிக்கை கொண்ட அமெரிக்க அம்மையார் ஒருவர். எல்லோரிடமும் விடைபெற்றுக் கப்பலில் ஏறினேன். கப்பல் துறைமுகத்தை விட்ட இரண்டுமணி நேரத்துக்கெல்லாம், மிகவும் களைப்போடு என் அறைக்குச் சென்று படுக்கையில் சாய்ந்தேன். மிருதுவான இரண்டு தலையணைக்குக் கீழே கனமான பொருள் ஒன்று இருப்பதாக உணர்ந்தேன். தலையணைகளை எடுத்துவிட்டுப் பார்த்

தால், விலையுயர்ந்த அழகான பெரிய பைபிள் புத்தகம் ஒன்றிருந்தது. அந்தக் கிறிஸ்துவ அம்மையார் எனக்குத்தெரியாமல், எனக்காக வைத்துவிட்டுச் சென்ற புத்தகம் அது. இவ்வளவு அருமையான பைபிள் புத்தகத்தை என்னிடம் நேரில் கொடுப்பதற்கு அந்த அம்மையார் ஏன் வெட்கப்பட்டார் என்பதுதான் எனக்கு இன்னும் விளங்கவில்லை!

பூரி - ஜகந்நாதம்

வட நாட்டில், ஒரிஸா மாகாணத்திலுள்ள புனித மான க்ஷேத்திரம் பூரி. இதனை ஜகந்நாதம் என்றும் பூரி - ஜகந்நாதம் என்றும் அழைப்பார்கள்.

சென்னையிலிருந்து கல்கத்தா செல்லும் பாதையி லுள்ள ஸ்டேசன் குர்தா ரோடு ஜங்ஷன். குர்தா ரோடு சென்னையிலிருந்து 749 மைல்; கல்கத்தாவிலிருந்து 283 மைல். இந்தக் குர்தா ரோடு ஸ்டேஷனிலிருந்து பூரி 27 மைல்தான்.

சென்னையிலிருந்து கல்கத்தா செல்லும் பெரும் பாலான தமிழர்கள் வழியில் எங்கும் இறங்குவதில்லை. சென்னையை விட்டுப் புறப்பட்டால் நேரே கல்கத்தா; அங்கிருந்து புறப்பட்டால் நேரே சென்னை. இந்த முறையைத்தான் நானும் பல வருடங்களாகப் பின்பற்றி வந்தேன்.

சென்ற வருடம் கல்கத்தா சென்றிருந்தபோது, சென்னைக்குத் திரும்பி வர டிக்கட் கிடைக்காமல் தவித் துக் கொண்டிருந்தேன். ஒரு வாரம் வரை மெயிலுக்கு டிக்கட் கிடைக்காதென்று கண்டிப்பாகக் கூறிவிட்டார் கள். கல்கத்தாவிலிருந்து சென்னைக்குப் பாசஞ்சர் ரயி லில் வருவதானால் பாதிப் பிராணன் போய்விடும். 'கடவுளே! இந்தக் கஷ்டத்திலிருந்து தப்புவதற்கு வழி இல்லையா?' என்று நினைத்தேன். அப்பொழுது பூரி ஜகந்நாதரின் ஞாபகம் வந்தது.

கல்கத்தாவில் ஒரு வாரம் வேலையில்லாமல் காத் திருப்பதும், பூரி ரயிலில் அவஸ்தைப்பட்டுப் பிரயாணம்

செய்வதும் இரண்டும் ஒன்றுதான் என்ற முடிவுக்கு வந்தேன். மறுநாள் இரவு புறப்பட்ட பூரி ரயிலில் இடம் கிடைத்தது.

இரவு 9 மணிக்குப் புறப்படவேண்டிய ரயில், இரவு 12-30 மணிக்குத்தான் கிளம்பிற்று. ரயில் புறப்பட்டதே என்ற சந்தோஷத்தில் நேரமானதைக்கூடப் பிரயாணிகள் மறந்து விட்டனர். மறுநாள் மாலை ஏழு மணிக்குப் பூரியை அடைந்தோம்.

பூரியை அடைவதற்கு 27 மைல் முன்னதாகவே பண்டாக்களின் ஏஜண்டுகள் நம்மை வரவேற்கிருர்கள் அவர்களுக்குத் தெரிந்த பல பாஷைகளில் நம்மிடம் பேசுகிருர்கள். நாம் எந்தப் பாஷையில் பதில் சொல்லுகிருேமோ, அந்தப் பாஷையில் மட்டும் பிறகு நம்மைத் தொந்தரவு செய்கிருர்கள். தங்கள் பெயர், தொழில், விலாசம் எல்லாவற்றையும் பலபாஷைகளில் அச்சடித்த கார்டு ஒன்றையும் நம்மிடம் வற்புறுத்திக் கொடுக்கிருர்கள். என்னைத் தொந்தரவு செய்த பண்டாவின் ஏஜண்டிடம், நான் பணச் செலவு செய்ய வந்த யாத்ரிகன் அல்லவென்றும், நான் தங்குமிடத்தை அவருக்குக் கூற முடியாதென்றும், எனக்காக அவர் தனது நேரத்தை வீணுக்குவதில் பயனில்லை என்றும் கூறினேன். அவர் பேசாமல் போய்விட்டார்.

பூரி ஸ்டேஷனில் இறங்கியதும் ஒரு வண்டியை ஏற்பாடு செய்து சாமான்களை எடுத்துக்கொண்டு, இரண்டு மைல் தூரத்தில் சமுத்திரக் கரை யோரத்திலுள்ள ஒரு ஹோட்டலுக்குச் சென்றேன். அந்த ஹோட்டலின் சொந்தக்காரர் ஒரு வங்காளி.

ஹோட்டலில் தங்குபவர்கள், அங்குள்ள புத்தகத்தில் தங்கள் பெயர், விலாசம், வந்த காரியம் முதலியவை

களைப் பதிவு செய்யவேண்டும். இவைகளைப் பூர்த்தி செய்தபொழுது நான் வந்த காரியம் 'சுவாமி தரிசனத்துக்காக' என்று எழுதினேன். ஹோட்டல்காரருக்குக் கோபம் வந்துவிட்டது. 'இப்படி எல்லாம் எழுதி என் தொழிலை ஏன் கெடுக்கிறீர்கள்?' என்றார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

கோபம் தணிந்ததும் அவர் பின் வருமாறு கூறினார்: 'பூரி புனிதமான க்ஷேத்திரமட்டுமல்ல; இந்தியாவிலுள்ள சிறந்த சுகவாச ஸ்தலங்களில் ஒன்று. சுகவாசத்துக்காக வருகிறவர்களுக்குத்தான் சமுத்திரக் கரையிலுள்ள ஹோட்டலில் இடங்கொடுக்கலாம். யாத்திரிகர்களுக்கு இங்கு இடம் கிடையாது. இது உள்ளூர் அதிகாரிகளின் உத்திரவு' என்றார்.

பசி அதிகமாய் இருந்ததால் அவர் பிரசங்கம் என் காதில் ஏறவில்லை. 'சுகவாசம்' செய்வதில் எனக்கு ஆட்சேபம் இல்லை என்று கூறினேன்.

ஸ்நானம் செய்த பின்னர் சாப்பாட்டுக்குச் சென்றேன். ஹோட்டல் முதலாளி என்னைப்பார்த்து 'நல்ல சாப்பாடு தருகிறேன்; நாங்கள் இங்கு உபயோகிப்பது கடுகு எண்ணை' என்றார்.

'பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்' என்று சொல்வார்கள். ஆனால் ஹோட்டல் முதலாளி 'கடுகு எண்ணை' என்று சொன்னதும், எனது பசியே பறந்து போய்விட்டது.

பிறகு கோயிலுக்குச் செல்லுவதற்காக வெளியே வந்தேன். அப்போது "சாப்பாடு ஆயிற்றா? கோயிலுக்குச் செல்லலாமா?" என்று ஒருவர் என்னை மிக அன்புடன் கேட்டார். அவர்தான் நான் ஏற்கனவே சந்தித்த பண்டாவின் ஏஜண்டு. எனது சாப்பாட்டைப்

பற்றியும், நான் மோட்சத்திற்குப் போவதைப்பற்றியும், அவர் கொண்டிருந்த அக்கரையைப் பார்த்தபொழுது எனக்கே ஆச்சரியமாய் இருந்தது.

வடநாட்டில் பொதுவாகக் கோயில்களுக்கும், வீடுகளுக்கும் வெளியிற் பார்த்தால் அதிகமான வித்தியாசம் தெரியாது. சில கோயில்களில் கொடி பறக்கவிட்டிருப்பார்கள். ஆனால் பூரியிலுள்ள ஜகந்நாதர் ஆலயம் அப்படியல்ல. 665 அடி நீளமும், 644 அடி அகலமும், 22 அடி உயரமுமுள்ள கம்பீரமான கோபுரத்தோடு காட்சியளிக்கிறது அக்கோயில். பூரிக் கோயிலின் சிற்ப வேலைப்பாட்டுக்கும் தென்னிந்தியக் கோயில்களின் சிற்ப வேலைப்பாட்டுக்கும் வித்தியாசம் உண்டு.

பூரி கோயில், 12-வது நூற்றுண்டில் கண்டுபிடித்ததாகவோ அல்லது கட்டப்பட்டதாகவோ சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். கோயிலுக்கருகே பல தீர்த்தங்கள் உண்டு. அதிக மிகப் பெரிய குளம், சுமார் ஒன்பது ஏக்கர் அளவுள்ளது. இந்தக் குளத்தில் முதலைகளும், மீன்களும் ஏராளம்.

பூரி கோயிலில் அநேகமாக வாரத்துக்கொரு உற்சவம் நடக்கும், வருடத்தில் அறுபதுக்குக் குறையாத உற்சவம். இதில் வருடந்தோறும் ஆனி மாதம் நடக்கும் ரதோற்சவம்தான் மிகப் பெரிது. பூரி ரதங்கள் மிகப் பெரியவை. இவைகளை ஒன்றரை மைல் இழுப்பதற்குப் பல நாளாகும். ஆயிரக்கணக்கான யாத்திரிகர் தேரை இழுப்பார்கள். இந்த உற்சவத்துக்கு லட்சக்கணக்காக மக்கள் கூடுவர். பூரி ரத உற்சவத்திற்கு வரும் ஜனத்திரளின் எண்ணிக்கை உலகப் பிரசித்தி பெற்றது. அமெரிக்காவில் செய்திப்படத் தொழில் போதகர் ஒருவர் மாணவர்களுக்கு 'எத்தகைய நிகழ்ச்சிகள் செய்திப்படம் பிடிக்கத் தகுதியானவை?'' என்று

விளக்கியபொழுது 'இந்தியாவில் பூரிஜகந்நாதத்தில் கூடும் லட்சக்கணக்கான மக்களை'ப் படம் பிடிக்க வேண்டும் என்று கூறினர். இந்த உற்சவத்தைப் பல முறை படம் பிடித்திருக்கிறார்கள்.

பூரியில் ஒரு ராஜா இருக்கிறார். அவருக்குப் பூரி ராஜா என்று பெயர். பூரி பலருடைய ஆட்சியின் கீழிருந்து கடைசியாக முகுந்ததேவராஜா என்னும் சுதந்திர மன்னரின் ஆட்சியிலிருந்தது. முகுந்ததேவ ராஜாவுக்கும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது. தனது சொந்த நாட்டில் 'அன்னியர்களை எதிர்த்த' குற்றத்திற்காக 1807ம் வருஷம் லார்டு வெல்லெஸ்லி முகுந்ததேவ ராஜாவைத் தோற்கடித்து, மாதம் இரண்டாயிரத்துச் சொச்ச ரூபாய் அலவன்ஸ் கொடுத்துப் பூரிக் கோயிலின் மேற்பார்வையையும் அவர் கையில் ஒப்புவித்தார். அந்த முகுந்ததேவ ராஜாவின் பரம்பரையைச் சேர்ந்தவர்தான் இப்பொழுது பூரி ராஜாவாக இருக்கிறார்.

பூரியில் ஏராளமான தர்மச் சத்திரங்கள் உண்டு. பண்டாக்களும் அவர்களின் ஏஜண்டுகளும் ஆயிரக் கணக்கில் இருக்கின்றனர். ஆண்டவனுக்கு நிவேதனத்திற்காகச் சமையலறையில் வேலை செய்யும் சமையற்காரர் தொகை நூற்றுக் கணக்கிலிருக்கும்.

ஜகந்நாதனைத் தரிசித்த பின்னர் ஊருக்குச் செல்வதற்காக ரயிலுக்கு வந்தேன். ஸ்டேஷனிலுள்ள தங்கும் அறையில் காத்திருந்தேன். மூட்டைப் பூச்சியின் உபத்திரவத்தை விட, அருகிலிருந்த சகோதரப் பிரயாணிகளின் உபத்திரவம் அதிகமாயிருந்தது. மறுநாள் காலை புறப்படவேண்டிய ரயில், முதல் நாள் இரவு பிளாட்பாரத்துக்கு வந்ததால் ரயிலில் ஏறிக்கொண்டேன்.

பொறுமையைக் கற்றுக்கொள்ளும் பல வழிகளில் ஒன்று, பூரிப் பாசஞ்சர் ரயில் பிரயாணம்.

எலிபெண்டா

யுத்தத்துக்கு முன்னே, சென்னையிலிருந்து ரங்கூனுக்கு வாரந்தோறும் கப்பல் போக்குவரத்து ஏற்பட்டிருந்தது. அவைகளில் சிலவற்றிற்கு "எதியோப்பியா", "எரின்புரா", "எலிபெண்டா" முதலிய பெயர்கள் உண்டு. அந்தக் காலத்தில் இக் கப்பல்களின் பெயர் தான் தெரியுமே தவிர, இவற்றின் அர்த்தம் பெரும்பாலும் தெரியாது. அபிசீனியா யுத்தம் ஆரம்பமான பிறகுதான், எதியோப்பியா ஒரு தேசம் என்று தெரியும். பம்பாய்க்குச் சென்ற பின்னரே "எலிபெண்டா" என்பது என்னவென்று தெரிந்தது.

"எலிபெண்டா" என்பது ஒரு தேசமல்ல. பம்பாயிலிருந்து கடல் வழியாகச் சுமார் ஏழுமைல் தூரத்திலுள்ள சிறிய தீவு எலிபெண்டா. இந்த மிகச் சிறிய தீவுக்கு மிக அதிகமான பெருமையை யளிப்பது, இத்தீவிலுள்ள அற்புதமான குகைகளும், அதிலுள்ள சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுந் தான்.

எலிபெண்டாவிலுள்ள உன்னதமான சிற்ப வேலைகள் சைவ சமயத்தின் தத்துவங்களை எடுத்துக் காட்டுகின்றன. இவை எட்டாவது நூற்றாண்டில் செதுக்கப்பட்டவை என்று சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

பதினாறாவது நூற்றாண்டில் நமது பாரத நாட்டிற்கு வந்த போர்த்துக்கீசியர் இத் தீவைத் தம் வசப்படுத்திக் கொண்டனர். அக்காலத்தில் இத்தீவில் யானையின் சிலை இருந்ததாம். இந்தக் காரணம் கொண்டே இத்தீவுக்கு எலிபெண்டா என்று பெயர்

இட்டனர். அந்த யானையின் சிலை நாளாவட்டத்தில் நாசம் செய்யப்பட்டு, எஞ்சியுள்ள உருவத்துடன் இப்பொழுது, பம்பாய் விக்டோரியா நந்த வனத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. போர்த்துக்கீசியர் 'எலிபெண்டா' என்று பெயரிடுவதற்கு முன், இத்தீவுக்கு 'கரபுரி' என்ற பெயர் இருந்தது.

1534-ம் வருஷத்தில் தான் போர்த்துக்கீசியர் இத்தீவை ஆக்கிரமித்து, ஜாவோ பியர்ஸ் என்பவருக்கு வருடமொன்றுக்குச் சுமார் 315 ரூபாய் குத்தகைக்கு விட்டனர். பிறகு இத்தீவு மானுவல் ரேபல்லொடி சில்வா என்பவர் கைக்கு மாறியது. அவர் இச் சொத்தைத் தனது மகள் டோஞ ரோஸா மரியா மானுவல் டி அல்மீடா பெயருக்கு மாற்றினர். ஒரு அன்னியர் இந்தியாவின் சொத்தைத் தனது மகளுக்கு ஸ்ரீதனமாகக் கொடுத்த அதிசயம் 1548-ம் வருஷத்தில் நடந்தது!

எலி பெண்டாவுக்கு அடிக்கடி போர்த்துக்கீசியப் போர் வீரர்கள் வந்து சென்றனர். அவர்களுக்குச் சைவ சமயச் சிற்பங்களைப் பார்க்க ஆச்சரியமாக இருந்திருக்க் வேண்டும். 'ஒரு உருவத்துக்கு மூன்று முகம் எதற்கு? எட்டுக்கைகள் எதற்கு?' என்று அவர்கள் யோசித்திருக்க வேண்டும். அதனால் தான் எலி பெண்டாவின் ஒப்பற்ற சிற்பங்களையெல்லாம் சிதைத்திருக்கின்றனர். சில சிற்பங்கள் இந்தப் போர் வீரர்களின் துப்பாக்கிகளுக்குக் குறியாயின. துப்பாக்கிக் குண்டுகளால் சரியானபடி சிதைக்க முடியாமல் போன சிற்பங்களை யெல்லாம் இந்த வீரர்கள், ஆயுதம் கொண்டு செம்மையாக்ச் சிதைத்திருக்கின்றனர்.

இதிலும் அவர்களுக்குப் போதுமான திருப்தி ஏற்படவில்லை. இந்த அற்புதமான குகைகளை மாட்டுத்

தொழுவமாகவும் உபயோகித்துள்ளனர். இதிலிருந்து போர்த்துக்கீசியரின் பண்பாட்டை நாம் ஒருவாறு அறிகிறோம்.

1774-ம் வருடத்தில் சர்வ வல்லமையுள்ளவர்களாயிருந்த பிரிட்டிஷார் இத்தீவைக் கைப்பற்றினர். தற்பொழுது இந்திய அரசாங்கம் இந்தக் குகைகளைப் பாதுகாத்துவர ஏற்பாடு செய்திருக்கிறது.

பம்பாய் வாசிகள் சௌகரியமாக உல்லாசப் பிரயாணம் செய்யும் முக்கியமான இடங்களில் ஒன்றாகி விட்டது எலிபெண்டா. காலை ஒன்பது மணிக்குக் கப்பலில் புறப்பட்டால், காலை பதினொரு மணிக்கெல்லாம் எலிபெண்டாத் தீவை அடையலாம். திரும்புவதற்கு மாலை 4 மணி சுமாருக்குத் தான் கப்பல். அது வரை அத் தீவிலேயே காத்திருக்க வேண்டும்.

சென்ற முறை பம்பாய் சென்றிருந்த போது ஒரு நண்பர், 'எலிபெண்டா' விற்கு வருகிறீர்களா? என்று கேட்டார். துணை கிடைக்கிறதே என்ற சந்தோஷத்தில் ஒப்புக்கொண்டேன். எலிபெண்டாவில் உணவு என்ற பேச்சே கிடையாது. நாம்தான் உணவு தயாரித்துக் கொண்டு போகவேண்டும். ரேஷன் காலமானதால் சாப்பாடும் தயாரிக்க முடியவில்லை; பன் ரொட்டியும், கிடைக்கவில்லை; பழம், பிஸ்கோத்து முதலியன தான் கிடைத்தன. வீட்டில் உணவு கிடைக்காத அதிர்ஷ்ட சாலிகளுக் கெல்லாம் இதுதான் உணவு.

கப்பலில் இரு வகுப்புகளுண்டு. இரண்டாவது வகுப்பு டிக்கட் கிடைக்கவில்லை; எனவே மூன்றாவது வகுப்பு டிக்கெட்தான் வாங்கினோம். கப்பலில் மூன்றாவது வகுப்புக்குச் சென்றால் எல்லோரும் முதல் வகுப்புப் பிரயாணிகளைப் போலக் காணப்பட்டனர். ஏனெனில் எல்லோரும் உல்லாசப் பிரயாணம் செல்வோர்

மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளுக்கு இயற்கையாக வுள்ள அழுக்குத் தோற்றமோ அல்லது கப்பல் நாற்றமோ அங்கில்லை. கப்பலில் ஏராளமான மாணவர் மாணவிகளும், பல திறப்பட்ட மக்களும் பிரயாணம் செய்தனர். ஐந்து வருஷங்களுக்கு முன் ரங்கூனில் சந்தித்த பர்மிய நண்பர் சிலரையும் அக் கப்பலில் தற்செயலாகக் கண்டேன். அவர்களுடன் நான்கு ஆங்கிலேயரும் வந்திருந்தனர். இவர்களில் ஒருவர் நாற்பது வருஷமாக ஷாங்காயில் வியர்பாரம் செய்து, சிங்கப்பூரில் யுத்தக் கைதியாக இருந்தவர். மற்றொருவர் யுத்தத்துக்குப் பின் இந்தோனேஷியாவை இந்தோ னேஷியர்களிடமிருந்து காப்பாற்றுவதற்காக, முதன் முதலாகச் சென்ற பிரிட்டிஷ் படையைச் சேர்ந்தவர். பிறிதொருவர் சயாமிலும் ஆஸ்திரேலியாவிலும் வசித்தவர்.

எலிபெண்டாவில் கப்பல் நின்ற இடத்திலிருந்து குகைக்கு நடந்து செல்லக் கால்மணி நேரம். குகை வாயிலை அடைந்ததும் அங்கிருந்த முக்கிய அதிகாரி யான சென் என்பவரை ஒருவாறு அறிமுகப் படுத்திக் கொண்டோம். இந்த அறிமுகம் நல்ல பயனையும் மாலையில் தேத்தண்ணீரையும் அளித்தது.

குகை என்றால் இருட்டும் டார்ச்சு விளக்கும் தான் ஞாபகத்துக்கு வரும். எலிபெண்டாக் குகையில் இருட்டு என்பதே கிடையாது. நல்ல வெளிச்சம் வரும்படி செய்திருக்கிறார்கள். வெளியிலிருந்து பார்த் தால் தான் குகை என்று தெரியுமே தவிர, உள்ளே சென்றால் ஏதோ ஒரு மண்டபத்துக்குள் இருப்பது போன்ற உணர்ச்சியே உண்டாகும்.

ஸ்ரீ சென் எங்கள் அனைவரையும் அழைத்துச் சென்று ஒவ்வொரு சிற்பத்தைப் பற்றியும் மிகவும்

விவரமாகக் கூறினர். எங்களில் சிலருக்கு விளங்கவே யில்லை; ஆனால் அவர் மட்டும் சொல்லுவதை நிறுத்தவே யில்லை.

அங்குள்ள சிற்பங்கள் 15 முதல் 20 அடி உயர முள்ளவை. மத்தியிலிருக்கும் மகேசுவர மூர்த்தியின் உருவச் சிலைதான் எல்லாவற்றிலும் முக்கியமானது. சிவபெருமான் ஆக்கல், அழித்தல், காத்தல் ஆகிய மூன்று வேலைகளைச் செய்யும் மூன்று முகங்களும் அற்புதமானவை. நடராஜாவின் நடனத்தையும், துவார பாலகர்களின் கம்பீரத்தையும் நாள் முழுதும் பார்த்துக் கொண்டே யிருக்கலாம். அடுத்த குகையில் ஆண்டவன் லிங்க வடிவத்தில் காணப்படுகிறார்.

எங்களுடன் எலிபெண்டாவுக்கு வந்தவர் தொகை சுமார் ஆயிரம். இதில் நூற்றுக் கணக்கானவர் மண்டபத்திலேயே உட்கார்ந்து விட்டனர். "ஆகா! இந்த மக்கள் இந்தச் சிற்பங்களை எவ்வளவு அனுபவிக்கின்றனர்" என்று எண்ணினேன். அதற்குள்ளாக அங்கிருந்த வேலைக்காரர்கள் உட்கார்ந்திருந்தவர்களை யெல்லாம் எழுந்து போகும்படி விரட்டினர். பிறகு விசாரித்ததில் அவர்கள் நிழலுக்காக அங்கு தங்கி யிருப்பதாகவும், தாங்கள் கொண்டு வந்த உணவைச் சாப்பிட்டு, எச்சல் இலையை அங்கேயே எறிந்துவிட்டுச் செல்வார்கள் என்றும் தெரிய வந்தது.

எலிபெண்டாவுக்கு வருபவர்களில் அனேகர், உல்லாசப் பிரயாணத்துக்காகவும், மாற்றத்துக் காகவுமே வருகின்றனர்.

சென்னை நகரம்-1942

சென்னை நகரம் யாருக்குச் சொந்தமென்று தமிழரும் தெலுங்கரும் சண்டை போடுகிறார்கள். கூவம் நதிக்கு ஒரு புறம் தமிழர்களுக்காம்; மற்றொரு புறம் தெலுங்கர்களுக்காம். இச்சண்டையின் நாற்றம் கூவம் நதியின் நாற்றத்தை விட அதிகமாகி விட்டது.

1942-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் அபாயச் சங்கு ஊதிய பொழுது, தமிழர்களும் தெலுங்கர்களும் ஓட்டமெடுப்பதில் போட்டி போட்டார்கள். ஆபத்துக் காலத்திலே ஓடுகிறவர்களுக்குச் சொந்தம் கொண்டாட உரிமையில்லை. அபாயச் சங்கு ஊதிய பொழுது, யார் சென்னையை விட்டுப் போகாதிருந்தார்களோ, அவர்களுக்குத்தான் சென்னை நகரம் சொந்தம்.

சென்னை நகரம் யாருக்குச் சொந்தமாயிருந்தாலும், அதை இன்று அரசாள்வது வெள்ளைக்காரர்கள். 1639-ம் வருஷம் பிரான்ஸிஸ் டே என்ற வெள்ளைக்காரருக்குச் சந்திரகிரி ராஜா சென்னை நகரத்தைச் சாசனம் செய்து கொடுத்தார். அன்று வந்த வெள்ளைக்காரர்கள் கோட்டையைக் கட்டிக் கொண்டு, கொடியைப் பறக்க விட்டார்கள்.

ஒரு காலத்தில், சென்னை நகரம் மீன் பிடிக்கும் கிராமமாக இருந்ததாம். 1942-ம் வருஷத்தில் சென்னை நகரம் 27 சதுர மைல் வரை பரவி, ஏழு லட்சம் ஜனங்களுக்குமேல் வசிக்கும் பெரிய பட்டணமாகிவிட்டது.

"கெட்டும் பட்டணம் சேர்" என்பார்கள். இந்தக் கூட்டம் சென்னைக்கு நிறைய வந்தது. பிழைப்புக்காகப் பட்டணத்துக்கு வந்து நாளடைவில் கெட்டுப் போன

மக்களும் உண்டு. சென்னையில் வசிப்பவர்களில், வட நாட்டாரை விடத் தென்னாட்டார்தான் இன்னும் அதிக மாய் இருக்கிறார்கள் என்பது சந்தோஷப் படத்தக்க விஷயம். திருநெல்வேலித் தமிழ் முதல் பெஜவாடாத் தெலுங்கு வரை, தென்னாட்டில் வழங்கும் பாஷைகளைப் பேசுகிற அத்தனை மக்களும் சென்னையில் வசிக் கிறார்கள்.

பல தலைமுறைகளாகச் சென்னையில் வசிக்கும் குடும்பங்கள் பல உண்டு. இவர்கள் தமிழ், தெலுங்கு இரு பாஷைகளையும் பேசுவார்கள். தாங்கள் தமிழரா, அல்லது தெலுங்கரா என்பது இவர்களுக்கே சந்தேக மாகிவிடும். எந்தக் கட்சி வலுக்கிறதோ, அதில் இவர்கள் சுலபமாகச் சேர்ந்து கொள்வார்கள். இவர்கள் போராடுவதெல்லாம் பாஷைக்காக அல்ல; தேர்தலுக் கும் பட்டம் பதவிகளுக்குந்தான்.

பட்டதாரிகள் மலிந்த நகரம் சென்னை. சர்வ கலா சாலைப் பட்டங்கள், அரசாங்கத்தாரின் பட்டங்கள், மதஸ்தாபனங்கள் அளிக்கும் பட்டங்கள் எல்லா வற்றையும் வித்தியாசமில்லாமல் ஏற்றுக் கொள்ளும் பெருங்குணம் சென்னை வாசிகளுக்குண்டு.

பட்டணத்தில் மற்றொரு கூட்டம் வக்கீல்கள். இவர்கள் இல்லா விட்டால் வம்புகளும் வழக்குகளும் வந்து சேரா. இந்த வக்கீல்களின் கூட்டம் நூற்றுக் கணக்கில் இருக்கிறது. சில வக்கீல்கள் ஆயிரக் கணக் கில் சம்பாதிக்கின்றனர். சிலர், வீட்டுக்கு முன்னால் கௌரவத்திற்காகப் பலகையை மாட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கின்றனர். வக்கீல்கள் சம்பந்தப் படாத அரசியல் கட்சிகளோ, யுத்த முன்னணியோ, ஏ. ஆர். பி. விஷயங்களோ, சங்கீத சபைகளோ, இலக்கியச் சண்டை களோ, வம்பு வழக்குகளோ எதுவுமே சென்னையில்

கிடையாது. சினிமா, பத்திரிகை, பலசரக்கு வியாபாரம், தமிழ் ஆராய்ச்சி, மோட்டார் பஸ் ஆகிய பல தொழில் களிலும் இந்த வக்கீல்களுக்குச் சம்பந்தம் இருக்கும். இந்தத் திருக்கூட்டத்தைப் பார்க்க வேண்டுமானால் ஹைக்கோர்ட்டுக்குச் செல்லவேண்டும். ஹைக்கோர்ட், சென்னையிலுள்ள பெரிய கட்டிடங்களில் ஒன்று. 1942-ம் வருஷமானது, சென்னை ஹைக்கோர்ட் சரித்திரத் திலேயே முக்கியமானது. அந்த வருஷத்தில் சென்னை ஹைக் கோர்ட் கோயமுத்தூருக்கு மாற்றப்பட்டது. பிறகு, சென்னைக்கு வந்தும் சொந்தக் கட்டிடத்தில் நடைபெருமல், சில காலம் தியாகராய நகரில் வாடகைக் கட்டிடத்தில் நடைபெற்றது.

சென்னையில் மற்றொரு முக்கியமான கூட்டம் பிச்சைக்காரர்கள். உண்மையான அபாயச் சங்கு ஊதிய பொழுது, பிச்சைக்காரர் கூட ஊரை விட்டு ஓடினர். ஊரில் ஜனங்கள் இருந்தால் தானே பிச்சைக்காரர்கள் பிழைக்கலாம். இந்தப் பிச்சைக்காரர்களில் பலர் எத்தனையோ வருடங்களாகச் சென்னையில் இருப்ப தாகத் தெரிகிறது. பஸ் நிற்கும் இடங்களிலெல்லாம் இத் திருக் கூட்டத்தைப் பார்க்கலாம். மவுண்ட் ரோட் பஸ் நிற்குமிடத்தில் ஒரு பிச்சைக்காரன், தான் மூன்று நாள் பட்டினி கிடப்பதாக நான்கு வருஷமாய்ச் சொல்லி வருகிருன். ஒரு நாள், இவன் ஒரு பஸ் டிரை வரிடம் நாலணு கடன் வாங்கினுன். 'பிச்சைக்காரனை நம்பிக் கடன் கொடுக்கலாமா?' என்று நான் டிரை வரைக் கேட்டபொழுது, அந்த டிரைவர் "இவனை எனக்குப் பல வருஷங்களாகத் தெரியும். சாயந்திரத் திற்குள் சம்பாதித்துக் கொடுத்து விடுவான்" என்று கூறினுன்.

சென்னை மோட்டார் பஸ் சரித்திரத்திலும் 1942-ம் வருஷம் முக்கியமானது. பெட்ரோல் கட்டுப்பாடு வந்ததும் பெரும்பாலான பஸ்கள் கரிவண்டிகளாக மாறின. பெட்ரோல் கிடைக்காததால், பெரிய மனிதர்கள் சொந்த மோட்டார்களை விற்று விட்டு, கரி பஸ்களில் பிரயாணம் செய்தனர். இந்தப் பெரிய மனிதர்களைத் தாங்க முடியாமல் கரி பஸ்களும் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் நிற்க ஆரம்பித்தன. பிரயாணிகள் பணத்தையும் கொடுத்து வண்டியையும் தள்ள வேண்டியிருந்தது. 1942 கடைசியில் காலணுப் பஞ்சம் வந்தபொழுது பிரயாணிகள் பட்ட கஷ்டம் மிக அதிகம். சில்லரை இல்லாவிட்டால் பஸ்ஸில் ஏற்ற மாட்டார்கள். பிரயாணிகளிடமோ சில்லரை கிடையாது. இதனால் ஏராளமான பிரயாணிகள் பஸ்ஸில் செல்லக் காத்திருந்த போது, ஏராளமான பஸ்கள் பிரயாணிகளில்லாமலே ஓடிக் கொண்டிருந்தன.

ஆனால், டிராம் வண்டி கண்டக்டர் சிவசங்கரன் மட்டும் இல்லையென்று வெகுநாள் கூறவில்லை. போக வேண்டிய இடத்துக்கு டிக்கட் கொடுத்து விட்டு, மீதிச் சில்லரைக்குக் கூப்பன் கொடுக்க ஆரம்பித்தான். இதுவரை அரசாங்கத்தார்தான் நோட்டு வெளியிட்டார்கள். 1942-ல் டிராம்வே கம்பெனியும் சொந்த நோட்டுக்களைக் (கூப்பன் உருவத்தில்) வெளியிட ஆரம்பித்தன.

எங்குப் பார்த்தாலும் வெள்ளைக்கார சோல்ஜர்கள் காணப்பட்டார்கள். இவர்கள் ஜனங்களோடு நெருங்கிப் பழக விரும்பினார்கள். ஆனால், ஜனங்கள் இவர்களை நெருங்கவில்லை. ஏன் ஜனங்கள் தங்களிடம் நெருங்கவில்லை என்ற விஷயம் வெள்ளைக்கார சோல்ஜர்களுக்குப் புரியவில்லை.

சினிமாக் கொட்டகைக்குப் போனால் ஒன்பதணா டிக்கட்டில் நம்மோடு சோல்ஜர் உட்கார்ந்திருக்கிறான். பிராமணன் காபி கிளப்புக்குப் போனால் நம்முடன் உட்கார்ந்து மசாலா தோசை சாப்பிடுகிறான். காரா பூந்தி உருண்டை உருண்டையாக இருப்பது அவனுக்கு ஆச்சரியமாக இருக்கிறது. டம்ளரிலுள்ள தண்ணீரை நாம் உயரத் தூக்கிச் சாப்பிட்டால், நம்மை ஆச்சரியத்தோடு உற்றுப் பார்த்துக் கொண்டேயிருக்கிறான். வீதியில் ஆங்கிலோ—இந்திய மாதர்களோ அல்லது கருப்பு நிறக் கிறிஸ்துவப் பெண்ணோ போனால், சோல்ஜருடைய பார்வை மாறிவிடுகிறது. டிராமிலும் சரி, பஸ்ஸிலும் சரி, ரிக்ஷாவிலும் சரி, பார்க்குமிடங்களிலெல்லாம் இந்தச் சோல்ஜர்கள்தான். வெள்ளைக்காரர்களைக் கண்டால், வெடு வெடுத்து வியர்வை வழியும் பணக்காரர்களும், பெரிய மனிதர்களும் பட்டணத்திலே உண்டு. ஆனால், டிராம்வே கண்டக்டர் சிவ சங்கரன் மட்டும் நிறத்துக்காக மதிப்புக் கொடுப்பதேயில்லை. சோல்ஜர் சரியாகப் பணங் கொடுக்காவிட்டால் வண்டியை நிறுத்தி ஆளைக் கீழே இறக்கி விடுகிறான்.

ரிக்ஷாக்காரர்களுடைய சரித்திரத்திலும் 1942-ம் வருஷம் முக்கியமானது. இரண்டு பேர் உட்கார வசதியுள்ள ரிக்ஷாவை ஒருவர் உட்காரும் அளவுக்கு அதிகாரிகள் மாற்றி அமைத்தார்கள். பெட்ரோல் கட்டுப்பாடு வந்த பிறகு, ரிக்ஷாக்காரர்கள் பாடு யோகம். அபாயச் சங்கு ஊதுகிற பொழுது ரிக்ஷாக்காரர்கள், காஞ்சிபுரம், திண்டிவனம், வேலூர் முதலிய இடங்களுக்கு ஓடினார்கள். அங்குப் பிழைக்க வழியில்லாமல் மீண்டும் சென்னைக்கு வந்தார்கள். வெள்ளைக்கார சோல்ஜர்களோடு நயமாகப் பேசிப் பணம் சம்பாதித்தார்கள். சோல்ஜர்கள் பேசும் ஹிந்துஸ்தானியை விட ரிக்ஷாக்காரர்கள் பேசும் ஆங்கிலம் சுத்தமாக இருக்கும்.

சேர்ஜெண்ட்டுகள் மனம் வந்தால் கையில் வந்த நோட்டுக்களைத் தூக்கி ரிக்ஷாக்காரர்களுக்குக் கொடுப்பார்கள். இல்லாவிட்டால், பணமே கொடுக்காமல் இரண்டு உதை கொடுத்து அனுப்புவார்கள். சோல்ஜர்கள் ரிக்ஷாக்காரர்களுக்குக் கொடுப்பதைப் பொறுத்தேதான் கள்ளுக் கடைக் கிராமணியின் வருமானம் இருந்தது.

கிராமணியின் வருமானம் அதிகமாகவே, பணத்தை என்ன செய்வதென்று தெரியவில்லை. கடைத் தெருவுக்கு வந்து, சாமான்களை எல்லாம் வாங்கி ஒன்றுக்குப் பத்தாக விற்க முடியுமா என்று கோட்டை கட்ட ஆரம்பித்தார். ஆனால், மார்வாடிகள் எல்லோரையும் மிஞ்சி விட்டார்கள். அது மட்டுமல்ல, ஜனங்களுக்கு ஒரு சாமான் உபயோகப்பட்டு விடப்போகிறதே என்று தெரிந்தால், உடனே இந்த மார்வாரிகள் அந்தச் சாமான் முழுவதையும் வாங்கி விடுவார்கள். பிறகு ஜனங்களின் தேவைக்குத் தக்கபடி ஒன்றுக்குப் பத்து விலையில் விற்பார்கள். விலையைப் பற்றிக் கவலையில்லை. சாமான் கிடைத்தால் போதும் என்று 1942ல் சென்னை வாசிகள் கருத ஆரம்பித்தார்கள். கடைத் தெரு விலையை விசாரித்த பின்னர், உள்ளூரிலுள்ள ஐரோப்பியக் கம்பெனிகளில் சாமான்கள் மலிவாகக் கிடைக்கிறது என்று கூடப் பேச ஆரம்பித்தார்கள். அன்னிய நாட்டுத் துணியின் விலை ஏறவே, நூற்றுக் கணக்கான மக்கள் கதர் வஸ்திராலயங்களில் ஒரு வேட்டி வாங்குவதற்கு மணிக்கணக்கில் காத்திருந்தனர்.

உள்ள கஷ்டங்கள் போதாவென்று பர்மாவிலிருந்து வந்த "அனாதைக் கூட்டம்" (பர்மா இந்தியர்கள் மன்னிக்க) பெருக ஆரம்பித்தது. வெள்ளைக்கார அனாதைகள் விஷயத்தில் அரசாங்கத்தார் சிரத்தை

எடுத்துக் கொண்டார்கள், கருப்பு "அனுதை" க்ளைக் கடவுள் கூடக் கவனிக்கவில்லை. ஒரு சர்க்கரைச் செட்டியாரும் வேறு சிலரும் சிறிது கவனித்தார்கள். ரங்கூன் குண்டு வீச்சைப் பற்றிக் கேட்ட பொழுதெல்லாம் சென்னை வாசிகள் நடுங்கிக் கொண்டே இருந்தார்கள்.

1942-ம் வருஷத்தில் இந்திய அரசாங்கம் இருவிதங்களில் முன்னேற்றம் அடைந்தது. வைசிராய் நிர்வாக சபையை விஸ்தரித்தல், கடிகாரத்தை ஒரு மணி தள்ளி வைத்தல், இந்த விஷயங்களில் சென்னைக்குப் பங்குண்டு.

கடிகார விஷயத்தில் நாம் முன்னேறினோம். மணியைப் பார்த்துத்தான் சாப்பிட்டோம். சூரியன் உச்சிக்கு வருவதற்கு முன்னமேயே மணி பன்னிரண்டாயிற்று. சூரியன் உச்சிக்கு வருவதற்காக மணி காத்திருக்க முடியுமா?

ஆனல், காத்திருந்தவர்கள் பலர். உணவுக்காக ஹோட்டல்களிலே காத்திருந்தார்கள். ரயிலுக்காகப் பிளாட்பாரத்திலே காத்திருந்தார்கள். மோட்டாருக்காகப் பஸ் ஸ்டாண்டிலே காத்திருந்தார்கள். மண்ணெண்ணெய்க்காக டெப்போக்களிலே காத்திருந்தார்கள். அபாயச்சங்கு ஊதிய பொழுது கட்டிடங்களிலே காத்திருந்தார்கள். சட்டைக்கும் சாப்பாட்டுக்கும் ஏ. ஆர். பி. யிலே காத்திருந்தார்கள்.

1942-ல் பல விஷயங்கள் நிகழ்ந்தன. காங்கிரஸ் சட்ட விரோதமானது என்று அரசாங்கத்தார் போஸ்டர்கள் ஒட்டினர்கள். தலைவர்கள் சிறைப்பட்டார்கள். மாணவர்கள் ஹர்த்தால் செய்தனர். சில பத்திரிகைகள் சிறிதுகாலம் நின்றன. ராஜாஜி பாகிஸ்தானை ஆதரித்தார். ஜெனரல் வேவல் சென்னைக்கு வந்தார். நூற்றுக் கணக்கான டாங்கிகள் ஊர்வலம் வந்தன. ஆயிரக் கணக்கான வேட்டுக்கள்

வெடித்தன. குண்டு வீச்சின் போது தங்குவதற்குக் குழிகள் வெட்டப்பட்டன. வீதிகளிலே விளக்குகள் அணைக்கப்பட்டன. மாலை ஆறுமணிக்கு மேல் கடற் கரைக்குச் செல்லக் கூடாதென்று மக்கள் தடுக்கப் பட்டனர். மிருகக் காட்சிச் சாலையிலிருந்த கொடிய மிருகங்கள் சுடப்பட்டன. சீனுக்காரன் ஹோட்டல்கள் தோன்றின. டான்ஸ் ஹால்கள் மலிந்தன. பவுடர் விலை உயர்ந்தது. தாடிகள் வளர்ந்தன. மின்சார உபயோகம் குறைக்கப்பட்டது. காபியின் விலை உயர்ந்தது. ரயில், டிராம், பஸ் டிக்கெட்டுகளின் கட்டணம் உயர்ந்தன. தபால் விகிதம் அதிகமாயிற்று. பத்திரிகை விலைகளும் ஏறின. 'தமிழர் தமிழிலே பாடலாமா'? என்பதைக் குறித்துக் கூடச் சண்டைகள் தோன்றின.

இவை எல்லாவற்றையும் விட முக்கியமான விஷயம் சென்னைக் கவர்னரின் பிரகடனம். சென்னைக் கெஜட்டில் பின் வருமாறு வெளியாகியிருக்கிறது:

"........சென்னை நகரத்தையும், அதன் சுற்றுப் புறங்களையும் காலரா நிறைந்த பிரதேசம் என்று மேன்மை தங்கிய சென்னைக் கவர்னரவர்கள் இதனுல் களிகூர்ந்து பிரசித்தம் செய்கிருர்கள்."

அதிசயமான ஊற்று

அதிசயமான நீர் ஊற்று ஒன்றைப் பார்க்க விரும்புகிறீர்களா? அந்த இடத்திற்குச் செல்லப் பாஸ்போர்ட் தேவையில்லை; பாஷை தெரிய வேண்டிய அவசியமுமில்லை. ஏனென்றால் சென்னையிலிருந்து சுமார் அறுபது மைல் தூரத்தில் தான் இந்த ஊற்று இருக்கிறது.

சென்னையிலிருந்து பம்பாய் செல்லும் மார்க்கத்தில் நகரி என்னும் ஊரில் இறங்கினேன். சாத்துக்குடிக்குப் பேர்போன நகரி இதுதான். ஸ்டேஷனிலிருந்து ஊருக்குச் சுமார் இரண்டு மைல் இருக்கும். சாதாரணமாக, மாதம் காதவழி போகும் ஒற்றை மாட்டு வண்டிகள் இங்கு ஏராளமாக இருக்கும். நான் சென்ற தினம் கார்த்திகை நாளானதால் எல்லா வண்டிகளும் அருகிலுள்ள திருத்தணிக்கு உற்சவத்திற்காகச் சென்றிருந்தன. எனவே வண்டிகள் ஒன்றுமில்லை; கூலியாட்களும் கிடைக்கவில்லை. ரயிலில் வந்த கிராமத்தார் இருவருடன் ஒற்றையடிப் பாதை வழியாக ஊருக்குள் சென்றேன். என்னுடைய சாமான்களை நானே தூக்கிச் செல்ல வேண்டி நேர்ந்தது. குறைவான சாமான்களோடு பிரயாணம் செய்ய வேண்டியதன் அவசியத்தை அப்பொழுதுதான் உணர்ந்தேன். நல்ல வெயிலிலே, கனமான சாமான்களைச் சுமந்துகொண்டு, ஒற்றையடிப் பாதையில் நடப்பது பட்டண வாசிகளுக்குச் சிறிது சிரமமான காரியந்தான். எனது நிலையைக் கண்டு பரிதாபமடைந்த கிராமத்தார் ஒருவர், நான் சுமந்து சென்ற சாமான்கள் சில வற்றை வாங்கிக் கொண்டு

என்னுடன் நடந்தார். சாமான் பளு குறைந்ததும் பேச வேண்டுமென்ற உற்சாகம் உண்டாயிற்று.

'இந்த ஊரில் என்ன விசேஷம்'? என்று கூட வந்தவரைக் கேட்டேன். 'ஒன்னும் விஷேச மில்லீங்க' என்று தாமதியாமல் பதில் கூறினர். 'ஏதாவது கோயில் இருக்குங்களா?' என்றேன். 'ஆமாம் ஐயா, தேசம்மன் கோயில் இங்கேதான் இருக்கிறது; ஆனால், பாவம் உங்களைப் பார்த்தால் நன்னு இருக்கிங்களே; எதற்காக தேசம்மன் கோயிலுக்குப் போகிறீர்கள்?' என்ருர். எனக்கு விஷயம் புரிய வில்லை. பிறகு விசாரித்ததில் தேசம்மன் கோயில் என்பது மிகவும் பிரபலமான மாரியம்மன் கோயில் என்றும், பார்வை இழந்தவர்கள் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் பிரார்த்தனைக்காக இங்கு வருகிருர்கள் என்றும் தெரிந்து கொண்டேன்.

நல்ல காலமாகப் பாதி வழியில் ஒற்றை மாட்டு வண்டி ஒன்று கிடைத்தது. எங்கு செல்வது என்று தெரியாமலே வண்டியில் ஏறினேன். பத்து நிமிஷம் வண்டிக்காரனிடம் பேசி, புக்க ஸ்தலமும் நீர் ஊற்றும் இருக்குமிடம் அறிந்து நேராக அங்குச் செல்லும்படி கூறினேன். நகரிக்கும் புக்க ஸ்தலத்துக்கும் சுமார் மூன்று மைல் எனது வண்டிபோய்ச் சேர இரண்டே கால் மணி நேரமாய் விட்டது. ஆற்றங்கரை ஓரத்தில் சிறிய கோயில் ஒன்றுக்கு வந்து சேர்ந்தோம். அதுதான் புக்க ஸ்தலம்.

பஞ்ச பாண்டவர்கள் அஞ்ஞாத வாசம் செய்த கதை உங்களுக்குத் தெரியுமல்லவா? அந்தக் காலத்தில் பஞ்ச பாண்டவர்கள் இந்தப் பிரதேசத்தில் வசித்ததாகவும், அவர்களுக்கு நல்ல தண்ணீர் வசதி கிடைக்காததால் வழக்கம்போலக் கிருஷ்ணனைப்

பிரார்த்தித்ததாகவும், உடனே கிருஷ்ண பகவான், வற்றாத கங்கையை இங்கு ஊற்று உருவமாக உண்டாக்கியதாகவும் புராணக் கதைகள் சொல்கின்றன. அப்படியானால் நாம் பஞ்ச பாண்டவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கோயில் சாதாரணமாகத்தான் இருக்கிறது. ஒரே ஆலயத்தில் விசுவநாதர் சந்நிதானமும், பெருமாள் சந்நிதானமும் இருக்கின்றன. ஒரு காலத்தில் திருப்பதி தேவஸ்தானத்தின் ஆதிக்கத்தின் கீழ் இக்கோயில் இருந்ததாகவும், இப்பொழுது அவர்கள் இதைக் கைவிட்டுவிட்டதாகவும் தெரிகிறது. கோவிலுக்குச் சொந்தமான சொத்து மிகச் சொற்பம்; அதுவும் அர்ச்சகருக்கு மான்யமாக விடப் பட்டிருக்கிறது. சிவன் கோயில் அர்ச்சகரான தெலுங்குப் பிராமணர், இந்த மான்யத்தை அநுபவிக்கிறார். பெருமாள் கோயில் அர்ச்சகர்களுக்கு அதுவுமில்லை. கோயிலில் உற்சவ காலங்களில் சேரும் உண்டித் தொகைகளையும், கோயிலுக்கு வரும் பக்தர்களின் உதவியையும் கொண்டுதான் சுவாமிகளின் வாழ்க்கையும் குருக்கள்களின் வாழ்க்கையும் நடைபெறுகின்றன. யுத்தத்தின் காரணமாகச் சில சமயங்களில் கற்பூரம் இல்லாமலே தீபாராதனை நடைபெறுவதும் உண்டு.

சிவன் கோயிலில் மூல விக்கிரகத்துக்குப் பின்னால், பிராகாரத்தில் ஒரு மண்டபம் இருக்கிறது. அங்கே சற்று நின்று கவனித்தால் தண்ணீர் ஓடும் சப்தத்தைக் கேட்கலாம். இது தான் நீர் ஊற்று. இதனைத் தடுத்து, ஐந்து வாயில்களின் வழியாக ஆற்றில் கொண்டு சேர்க்கிறார்கள். இந்த ஐந்து நீர் வீழ்ச்சி வாயில்களும் ஆறடி உயரத்தில் இருக்கின்றன. இந்த

ஐந்தில் இரண்டில்தான் அதிகத் தண்ணீர் வருகிறது. அதில் ஒன்றில் ஒரு சதுர அடி அளவு தண்ணீர் எப்பொழுதும் வந்துகொண்டேயிருக்கிறது. பளிங்கு போன்ற சுத்தமான தண்ணீர். ஆற்றில் நின்று கொண்டு சுகமாகக் குளிக்கலாம்; நல்ல முறையில் குளிக்கும் இடத்தை அமைத்திருக்கிறார்கள். சென்னையிலும் பிற நகரங்களிலும் குழாய்த் தண்ணீரில் குளிக்கும் மக்களுக்கு, இந்த இடம் உண்மையிலேயே ஒரு வரப் பிரசாதம்.

புக்கஸ்தலம் ஒரு குக்கிராமம். உணவுப் பொருள்கள் கிடைப்பது கஷ்டம். அர்ச்சகர் மனது வைத்தால் சாப்பாடு கிடைக்கும். அந்த வழியே செல்லும் களைப் படைந்த வழிப்போக்கர்களும், பக்கத்துக் கிராம வாசிகளும்தான் இந்த ஊற்று நீரை நன்கு உபயோகித்து இன்புறுகின்றனர். சிவராத்திரி, வைகுண்ட ஏகாதசி, ஆடி அமாவாசை போன்ற நாட்களில்தான் இங்கு யாத்ரீகர்கள் அதிகமாக வருவார்கள். இவர்களில் பெரும்பாலோர் இவ்வூருக்குச் சமீபத்திலிருந்து வரும் மக்களேயாவர். கோயிலையடுத்து ஒன்றிரண்டு தர்ம சத்திரங்கள் இருக்கின்றன. குழந்தைப் பிரார்த்தனைக்காகச் சில குடும்பங்கள் இங்கே வந்து நாள் கணக்கில் தங்குவதுண்டு. இந்தப் பக்தர்கள் தாங்கள் ஊருக்குத் திரும்பும்போது கல்லினால் செய்த சிறு குழவியையோ அல்லது கல்லினால் செய்த சிறு உருவச் சிலைகளையோ கோயிலுள் வைத்துச் செல்வார்கள். இம்மாதிரிச் சின்னங்கள் நூற்றுக் கணக்கில் இருக்கின்றன.

வருடமுழுதும், எந்நேரமும் அளவு குறையாமல் வந்து விழுந்துகொண்டேயிருக்கும் இந்த அற்புதமான தண்ணீர் எங்கிருந்து வருகிறது? கங்கையே இங்கு வருகிறது என்பார்கள் சிலர். ஆனால் சில வருஷங்களுக்கு

முன்னே, கோயிலில் பெரும்பகுதி நாள் பட்டு இடிந்து கொண்டு வந்தபொழுது அதனைப் பழுது பார்த்தார்கள். அப்பொழுதுதான் இந்த ஊற்றுத் தென்பட்டதாம். இது உயரக் கிளம்பி வந்ததாம். அதைக் கல்லினால் மண்டபம் செய்து அடைத்து, அதனை ஐந்து பிரிவுகளாக ஆற்றில் கொண்டு சேர்க்கின்றனர்.

இந்த ஊற்று எங்கிருந்து வருகிறது என்பதை இன்னும் கண்டு பிடிக்க முடியவில்லை. சாதாரணமாக மலையிலிருந்துதான் ஊற்று உண்டாகும் என்றும், இந்த இடத்திற்கும் சமீபத்திலுள்ள மலைக்கும் ஐந்து மைலுக்கு மேலிருக்கும் என்றும் கூறுகின்றனர். இந்த ஊற்று, பூமி சாஸ்திர நிபுணர்களின் ஆராய்ச்சிக்கும் எட்டாத அதிசயமாகவே இருக்கிறது.

ஆனால் இதுகூட அதிசயமாகத் தோன்றவில்லை. இந்த அதியமான ஊற்றைப் பிரபலப்படுத்தாமல் மூடிவைத்திருக்கிறோமே, அதுதான் அதிசயமாகத் தோன்றுகிறது.

திருவண்ணாமலை

"அண்ணாமலைக் கரோகரா" என்ற சத்தத்தைக் கேட்டாலும், "அன்னக் காவடி தர்மம் தாயி" என்ற சத்தத்தைக் கேட்டாலும், நீங்கள் திருவண்ணாமலையில் இருப்பதாக எண்ணிக் கொள்ளலாம்.

விழுப்புரம் - காட்பாடி ரயில்வே லயனில், திருவண்ணாமலை பெரிய ஸ்டேஷன். ஸ்டேஷன் மட்டும் பெரிதல்ல: ஊரும் பெரிது; ஊருக்குள்ளிருக்கும் கோயிலும் பெரிது. பல வருஷங்களாக இவ்வூர் ஒரு முனிசிபாலிடியாக இருந்து வருகிறது. நகரசபைத் தேர்தல்கள் வரும் பொழுது, ஓட்டர்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கும். இவ்வூரில் தனிப்பட்ட மனிதர்கள் தர்மத்துக்காகச் செலவுசெய்த தொகையை விட, நகர சபைத் தேர்தல்களுக்காகச் செலவு செய்த தொகைதான் பலமடங்கு அதிகமாயிருக்கும்.

சென்ற வருஷம் இவ்வூருக்குச் சென்ற பொழுது, எனக்கு ஒரு தேநீர் விருந்து அழைப்புக் கிடைத்தது. நகரசபையார், நகரிலுள்ள ஒரு வீதியில் தங்கள் செலவில் ஒரு தண்ணீர்க் குழாய் அமைத்தார்கள். இந்தத் தண்ணீர்க் குழாய்க்குத் திறப்புவிழா நடத்துவதற்காக, அந்த வார்டைச் சேர்ந்த நகரசபை அங்கத்தினர், தமது சொந்தச் செலவில் ஒரு தேநீர் விருந்து அளிக்க ஏற்பாடு செய்தார்.

கூட்டம் சுமார் 50 பேர்கள் இருக்கலாம். நகர சபைத் தலைவருக்கும், கமிஷனருக்கும், இந்த அங்கத்தினர் மலர் மாலைகள் அணிவித்தார். நகர சபைத் தலைவர், குழாயைத் திருகி, தண்ணீரை மூன்று முறை

பருகி, பிறகு தலையிலும் தெளித்துக் கொண்டார். இந்த வைபவத்துக்கு மேள தாளம் கூட இருந்ததாக எனக்கு ஞாபகம். பிறகு தேநீர் விருந்து; சந்தன தாம்பூலம், வந்தனோபசாரம் முதலியன. திருவண்ணாமலை நகரத்தின் வேகமான முன்னேற்றத்தை, இந்தத் தண்ணீர்க் குழாய்த் திறப்பு வைபவத்திலிருந்தே அறியலாம்.

திருவண்ணாமலைக்குப் பெருமை அளிப்பது தண்ணீர்க் குழாய் அல்ல; அவ்வூரிலுள்ள பெரிய கோயில் தான். திருவண்ணாமலைத் திருக்கோயில், தமிழ் நாட்டில் உள்ள மிகப் பெரிய கோயில்களில் ஒன்று. இந்தக் கோயிலைக் கட்டிய பெருமை, வரலாறுகளின் படி, வல்லாள மகா ராஜனைச் சேர்ந்தது. லட்சக்கணக் காகப் பொருள் செலவிட்டு, கோயிலை நல்ல நிலையில் வைத்திருக்கும் பெருமையில் பெரும் பகுதி, நாட்டுக் கோட்டை நகரத்தார்களைச் சேர்ந்தது.

அழகான மலை, உயரம் 2000 அடிக்கு மேல் இருக்கலாம். சுற்றி வந்தால் சுமார் எட்டு மைல்களாகும். இந்த எட்டு மைல் தூரத்தில் 365 குளங்கள் இருக்கின்றனவாம். ஒவ்வொரு குளமும் ஒவ்வொரு தீர்த்தம். மலைக்குப் பின் புறத்தில் அடியண்ணாமலை என்னும் ஊரில் அழகான கோயில் ஒன்று இருக்கிறது. மலையைப் பிரதட்சணமாக வரும் பொழுது, பின்புறத்திலிருந்தும், மற்றப் புறங்களிலிருந்தும் மலையைப் பார்க்கிறோம். ஒவ்வொரு புறத்திலிருந்து பார்க்கும் பொழுதும், மலையின் உருவம் ஒவ்வொரு விதமாகத் தோன்றும்.

இந்த மலையைச் சுற்றிவரும்போது, முக்கியமான விசேஷங்கள் இரண்டு. முதலாவது யம பாதைக் கதவு. பருமனில்லாத சாதாரண மனிதர்கள் நுழையும்படியாக

ஒரு சிறு மண்டபம் இருக்கிறது. மண்டபத்தின் ஒரு புறத்தில் நுழைந்து மறுபுறத்தில் வந்துவிட்டால், நரக லோகத்துக்குப் போகாமல் தப்பித்துக் கொள்ளலாம் என்பது, பாமர மக்களின் நம்பிக்கை. பருமனுள்ள மனிதர்கள், இந்த மண்டபத்துக்குள் நுழைந்து, வெளியே வருவதற்கு வேதனைப் படுவதைப் பார்க்கும்பொழுது, நரக வேதனை என்று சொல்வது கூடத் தேவலை என்று நமக்குத் தோன்றுகிறது.

இரண்டாவது விசேஷம் மிக முக்கியமானது. குறிப்பிட்ட ஓர் இடத்தில் நின்றுகொண்டு, 'உண்ணுமுலைத் தாயே!' என்று கூப்பிட்டால் 'ஏன்' என்ற குரல் கேட்குமாம். 'பாலும் சோறும் தருகிருயா?' என்ருல் 'தருகிறேன்' என்ற பதில் கிடைக்குமாம். இந்த அதிர்ஷ்டம் எல்லோருக்கும் கிட்டாதாம். பக்தர்களுக்கு மட்டுந்தானும்.

மலையைச் சுற்றி வந்தால், கடைசியில் கால்வலியோடு புறப்பட்ட இடத்திற்கே வந்து சேருகிருேம். கோயிலுக்கு முன்னே, நாற்றம் நிறைந்த சர்க்கரைத் தீர்த்தம் இருக்கிறது. பிறகு, பதினுறு கால் மண்டபந்தான்.

கோயில் மிகப் பெரியது. நான்கு வாயில்களிலும் நான்கு கோபுரங்கள். ராஜகோபுரம் மிகப் பெரியது; மதுரைக் கோபுரத்தை விடப் பெரியதென்றும் கூறுகிருர்கள். பின்புறம் இருப்பது பேய்க் கோபுரம். மற்ற இருபுறங்களிலும் இருப்பவை திருமஞ்சனக் கோபுரம் அம்மணி அம்மாள் கோபுரம். இவைகளைத் தவிர வல்லாள மகாராஜன் கோபுரம், கிளிக்கோபுரம் முதலிய பல கோபுரங்கள் இருக்கின்றன. கிளிக் கோபுரத்திலிருந்துதான், அருணகிரிநாதர் திருப்புகழைப் பாடியதாகச் சொல்லுகிருர்கள்.

கோயிலுக்கு மூன்று பெரிய பிராகாரங்கள் உண்டு. கோயிலை ஒரு முறை சுற்றிவந்தால், சுமார் ஒரு மைலாகும். கோவிலுக்குள்ளே சிவகங்கை, பரம தீர்த்தம் என்ற இரண்டு அழகிய குளங்கள் இருக்கின்றன. ஆயிரக்கால் மண்டபம், சித்திர வேலைப்பாடு நிறைந்த கல்யாண மண்டபம் முதலியவைகளும், தங்க, வெள்ளி வாகனுதிகளும், அவசியம் பார்க்கத்தக்கவை. கோயிலுக்குள்ளே ஒரு புத்தகசாலையும் பல நந்தவனங்களும் இருக்கின்றன. விக்கிரகங்கள் மட்டும் ஆயிரத்துக்கு மேலிருக்கும். ஸ்ரீ அபீதகுசாம்பாள் சமேதரான அருணுசலேசுவரருக்கு வருஷத்தில் எல்லா மாதங்களிலும் உற்சவங்கள் நடைபெறும். கார்த்திகை மாதத்தில், நடக்கும் தீபோற்சவந்தான் எல்லாவற்றிலும் சிறந்தது. கார்த்திகை உற்சவத்தில், மலையின் உச்சியில் தீபம் ஏற்றுவார்கள். பலநாள் வரையில் இந்தத் தீபம் எரிந்துகொண்டே யிருக்கும். கார்த்திகை உற்சவத்துக்குப் பதினுயிரக் கணக்கான யாத்திரிகர்கள் வருவார்கள். இந்த மனிதச் சந்தையைத் தவிர, பெரிய மாட்டுச் சந்தையொன்றும் நடைபெறும். உற்சவ காலத்தில் நடக்கும் பெரிய வியாபாரங்கள் இரண்டு: ஒன்று காப்பி ஹோட்டல்; மற்ருென்று, கத்தரிக்கோல் வேலை.

திருவண்ணுமலையின் ஜனத்தொகை சுமார் 35000. இவ்வூரில் நூற்றுக்கணக்கான மடங்களும், ஏராளமான சத்திரங்களும் இருக்கின்றன. பூணூல் அணிந்திருப்பவர்கள் முதல், கழுத்தில் லிங்கம் கட்டியிருப்பவர்கள் வரை, எல்லா ஜாதியாருக்கும், வகுப்பாருக்கும் இங்கே மடங்கள் உண்டு. சத்திரங்களிலே பெரும்பாலும் சோம்பேறிப் பிராமணர்களுக்குத்தான் அன்னமளிக்கிருர்கள். திருவண்ணுமலையிலேயே மிகப் பெரிய

கட்டிடங்கள், ஒயாமாரி மடமும், அன்ன சத்திரமும் தான். திருவண்ணுமலையில் காபி கிளப்புக்களும் பிச்சைக்காரர்களும் மிக அதிகம். இவ்வூரில் ஒரு சினிமாக் கொட்டகையும், இரண்டு போலீஸ் ஸ்டேஷன்களும், மூன்று கோர்ட்டுகளும், நான்கு அரசியல் கட்சிகளும் இருக்கின்றன.

இரவிலும் பகலிலும் போட்டோ பிடிக்கும் கடைகளும் இங்கே உள்ளன. சில வருஷங்களுக்கு முன் இவ்வூரில் ஒரு குரூப் போட்டோ எடுத்தோம். ஒரு வரிசையில் சிலர் நாற்காலிகளில் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுக்குப் பின்புறத்தில் சிலர் ஒரு வரிசையில் நின்ருர்கள். நாற்காலியில் உட்கார்ந்தவர்களுக்கு முன்புறத்தில் சிலர் ஒரு வரிசையில் உட்கார்ந்திருந்தார்கள். போட்டோ கிராபர் மூன்று படங்கள் பிடித்தார். முதலாவது படத்தில், கீழே உட்கார்ந்திருந்தவர்களுக்குக் காலில்லை. இரண்டாவது படத்தில் மேல் வரிசையில் நின்றவர்களுக்குத் தலையில்லை. மூன்ருவது படத்தில் வலது புறத்திலும் இடது புறத்திலும் நின்றுகொண்டிருந்தவர்களின் உடம்பில் பாதியைக் காணவில்லை. ஆனல், போட்டோகிராபர் மட்டும், இந்தப் படங்களை எங்களிடம் கொடுத்து, பணத்தை வாங்கிக்கொண்டுவிட்டார்.

திருவண்ணுமலைக்கு முதன் முதலாகச் சினிமா வந்த கதையும் வேடிக்கையானது. ஒரு சிறிய தகரக் கொட்டகையில் முதன் முதல் சினிமா காண்பித்தார்களாம். அந்தக் காலத்தில் பேசாத படங்கள் தான் வந்தன. எனவே, பேச்சினுல் உண்டாகும் ஆபாசங்கள் அக் காலத்திலில்லை. ஏராளமான ஜனங்கள் தரையில் உட்கார்ந்திருந்தார்கள். படம் ஆரம்பித்ததும் முதலில் ஒரு குதிரைப் பட்டாளம் வந்ததாம். அந்தச் சினிமாக்

குதிரைகள் கிட்ட வந்ததும், பெரும் பாலான ஜனங்கள் பயந்து ஓடினார்களாம். அம்மாதிரி யிருந்த இவ்வூரில், இப்பொழுது சினிமா நட்சத்திரங்களே வந்து குடியேற ஆரம்பித்து விட்டார்கள்.

ரமணுசிரமத்தைப் பற்றிச் சொல்லா விட்டால், திருவண்ணுமலைப் பிரயாணம் முற்றுப் பெருது. ரமண மகரிஷி சிறு பிராயத்திலேயே திருவண்ணுமலைக்கு வந்தார். சில வருஷங்கள் மலையில் ஓர் ஆசிரமத்தில் வசித்தார். இப்பொழுது, திருவண்ணுமலைக்கு ஒன்றரை மைல் தூரத்தில், தனி ஆசிரமத்தில் வசிக்கிருர். அவருடைய ஆசிரமத்தைச் சுற்றிக் கட்டிடங்கள் அமைத்துக் கொண்டு ஏராளமான பக்தர்கள் வசிக்கிருர்கள். இந்தப் பக்தர்களிலே, இந்தியர்களும், ஐரோப்பியர்களும், அமெரிக்கர்களும் இருக்கிருர்கள். ஸ்ரீரமண மகரிஷியின் பெயர் அமெரிக்கா வரையும் எட்டியிருக்கிறது. இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும், ரமண மகரிஷியைத் தரிசிக்க ஏராளமான ஜனங்கள் வருகிருர்கள். ரமணுசிரமத்தில் ஸ்ரீ ரமணரின் தரிசனம் எல்லோருக்கும் சுலபமாகக் கிடைக்கும். ஆனல், ரமணுசிரமத்தில் சாப்பிடுவதற்குச் சர்வாதிகாரியின் உத்திரவு வேண்டும்.

திருவண்ணுமலையைப் பற்றி இதை விட அதிகமான விஷயங்கள் எனக்குத் தெரியாது. எட்டு வருஷங்கள் பள்ளிக் கூடத்திலும், இருபத்து நான்கு நாட்கள் சிறையிலும் தான், நான் இவ்வூரில் இருந்திருக்கிறேன்.

புதுச்சேரி

சொந்த நாட்டில் சுதந்திரத்தை இழந்த பிரெஞ்சுக்காரர்கள், உலகத்திலே பல நாடுகளை இன்னும் அடக்கியாள்கிறார்கள். இத்தகைய நாடுகளில் பிரெஞ்ச் இந்தியாவும் ஒன்று; இந்த பிரெஞ்ச் இந்தியாவின் தலைநகரம் புதுச்சேரி.

சென்னையிலிருந்து புதுச்சேரி சுமார் 120 மைல். விழுப்புரம் வழியாக ரயிலில் செல்ல வேண்டும். இவ்வூரைப் புதுவை என்றும், பாண்டிச்சேரி என்றும், பாண்டி என்றும் பலவிதமான பெயர்களால் அழைப்பார்கள். புதுச்சேரியின் ஜனத்தொகை சுமார் அறுபது ஆயிரம். பெட்ரோல் கட்டுப்பாடு வருவதற்கு முன் இங்கு அறுநூறு மோட்டார்களுக்கு மேல் இருந்தனவாம். ஆனால் இப்பொழுது வீதியில் ஓடும் மோட்டார்களின் தொகையை விரல் விட்டு எண்ணி விடலாம்.

புஷ் புஷ் என்பது ஒருவிதமான வண்டி. இவைகளில் சில டேக்காட்டுகள் மாதிரியும், சில பெட்டி வண்டிகள் மாதிரியும் இருக்கும். மூன்று அல்லது நான்கு சக்கரமுள்ள இவ்வண்டிகளை மிருகங்கள் இழுப்பதில்லை. மனிதர்கள் தான் பின்னாலிருந்து தள்ளுவார்கள்.

இந்த வண்டிகளுக்குத் தக்கபடி இரண்டு பேர் முதல் நான்கு பேர் வரை இதில் பிரயாணம் செய்யலாம். வண்டியில் உட்கார்ந்திருப்பவரில் ஒருவர் தான் ஸ்டியரிங்கைப் பிடிக்கவேண்டும். இந்த ஸ்டியரிங் என்பது ஒரு நீளமான இரும்புக் கம்பி. எந்தப் பக்கம் போக வேண்டுமோ, அந்தப் பக்கமாக இந்தச் சுக்கானைத் திருப்ப வேண்டும்.

வண்டியின் பின்னாலிருந்து வண்டியைத் தள்ளுகிற மனிதனுக்கு வீதியில் வருபவர்களைத் தெரியாது. வண்டியில் உட்கார்ந்திருப்பவர்தான், மணியடித்தோ, சப்தம் போட்டோ, வீதியில் போகிற ஜனங்களை விலக்க வேண்டும். இந்த வண்டிகளுக்கு பிரேக் என்பதே கிடையாது. வண்டியை நிறுத்த வேண்டுமானால், வண்டியைத் தள்ளுகிறவனிடம் தான் கூறவேண்டும். பல சமயங்களில் வண்டியில் இருப்பவர்கள் சொல்வது, வண்டியைத் தள்ளுகிறவர்களுக்குக் கேட்காமல் போய் விடும்; வண்டியிலிருப்பவர் நிறுத்தும்படி கூறினால், வண்டியைத் தள்ளுகிறவன் விஷயம் தெரியாமல் வண்டியை வெகு வேகமாகத் தள்ளுவான். இதனால் பல விபத்துக்கள் ஏற்படுவதுண்டு. பொதுவாக வண்டியைத் தள்ளுகிறவனை விட, வண்டியில் உட்கார்ந்து சுக்கானைப் பிடிப்பவர்களுக்குத்தான் கஷ்டம் அதிகம். நல்ல காலமாக, இந்தப் புஷ் புஷ் வண்டிகள், பிரெஞ்ச் ஏகாதிபத்தியத்தைப் போல மறைந்து கொண்டே வருகின்றன.

புதுச்சேரியில் நூற்றுக் கணக்கான ரிக்ஷாக்கள் இருக்கின்றன. சென்னை ரிக்ஷாக்களை விட இவை மிகவும் சௌகரியமானவை. இரண்டு பேர் தாராளமாக உட்காரலாம். சில சமயங்களில் அரையணவுக்கு ரிக்ஷா சவாரி செய்யலாம். பிரிட்டிஷ் இந்தியாவின் நாணயம் புதுச்சேரியில் செலாவணியாகும். ஆனால் புதுச்சேரியில் வழங்கப்படும் பிரெஞ்ச் இந்திய நோட்டுக்களுக்குப் பிரிட்டிஷ் இந்தியாவில் மதிப்பில்லை. பிரெஞ்ச் இந்தியாவுக்காக சைகோனிலுள்ள இந்தோ சீனா பாங்க் நோட்டுக்கள் வெளியிட்டிருக்கின்றது. தற்பொழுது பிரெஞ்ச் இந்தியாவுக்கும், இந்தோ சீனாவுக்கும் எவ்விதத் தொடர்பும் போக்குவரத்தும் கிடையாது,

என்றாலும் இந்தோ-சீனா பாங்க் வெளியிட்ட நோட்டுக்கள், பிரெஞ்ச் இந்தியாவில் இன்னும் செலாவணியாகிக் கொண்டிருக்கின்றன.

புதுச்சேரி நகரத்தை இரண்டாகப் பிரிக்கலாம். முதலாவது சமுத்திரக் கரையை யடுத்து ஐரோப்பியர்கள் வசிக்கும் பகுதி. இரண்டாவது இந்தியர்கள் வசிக்கும் பகுதி. ஐரோப்பியர்கள் வசிக்கும் பகுதி மிகச் சுத்தமாக இருக்கும். இப்பகுதியில் இப்பொழுது பல இந்தியர்கள் வசிக்கிறார்கள். இந்தியர்களே வசிக்கும் மற்ற பகுதி சிறிது சுகாதாரக் குறைவாக இருக்கும்.

புதுச்சேரியிலுள்ள புதுமைகளில் ஒன்று, வீதிகள் கோணலே இல்லாமல் நேராக இருக்கும். வீதிகளின் இரு மருங்கிலும் திறந்த சாக்கடைகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. வீதிக்கும் வீட்டுக்கும் நடுவே இருக்கிறது இந்தச் சாக்கடை. வீதியிலிருந்து வீட்டுக்குச் செல்வதென்றால், இந்தச் சாக்கடையைத் தாண்டித் தான் செல்லவேண்டும்.

புதுச்சேரியின் மற்றொரு புதுமை, கண்ணாடி பங்களா. கட்டிடம் சிறிது, எங்கும் கண்ணாடி, சுவர்கள் எல்லாம் கண்ணாடி. மேலே பார்த்தால் கண்ணாடி, பார்க்குமிடங்களிலெல்லாம் உங்களுடைய திருவுருவம் தான் உங்களுக்குக் காட்சியளிக்கும், சில கண்ணாடிகளில் பார்த்தால் உங்கள் உருவம் பல மடங்கு பெரிதாகத் தோன்றும். சில கண்ணாடிகளில் உங்கள் உருவம் மிக நீளமாகத் தோன்றும். இந்தக் கண்ணாடி பங்களா பார்க்க மிக அழகானது; ஆனால் வசிப்பதற்குச் சிறிதும் உபயோக மில்லாதது.

புதுச்சேரி ஒரு துறைமுகம். ஒரு காலத்தில் ஏராளமான கப்பல்கள் இங்கே வந்தன. இத்துறைமுகத்தி லிறக்கப்படும் சாமான்களுக்குத் தீர்வை கிடையாது.

எனவே பிரான்ஸிலிருந்து வந்த சில்க், வர்ணத் திரவியம் முதலிய பல பொருள்கள் இங்கே மிக மலிவான விலைக்குக் கிடைத்தன. குடிவகைகள் மிக மிக மலிவு. ஒரு காலத்தில் புதுச்சேரி குடியர்களின் சுவர்க்கமாக விளங்கியது. புதுச்சேரி துறைமுகமாயிருந்த போதிலும் கப்பல் கரையோரத்தில் வந்து நிற்பதில்லை. கரையிலிருந்து சுமார் ஒரு மைல் தூரத்தில் நங்கூரம் போட்டு நிற்கும். கரையிலிருந்து சுமார் இரண்டு பர்லாங் நீளம் சமுத்திரத்தில் ஒரு பாலம் கட்டியிருக்கிறார்கள். இப்பாலத்தின் கோடியிலிருந்து, படகுகள் மூலமாகக் கப்பலுக்குச் செல்லவேண்டும். நீளமான இப்பாலத்தின் இரு ஓரங்களிலும் சாய்வு பெஞ்சுகள் போடப் பட்டிருக்கின்றன. புதுவை வாசிகள் பலர், மாலை நேரங்களில் இங்கு வந்து சமுத்திரக் காற்றை ஆனந்தமாக அனுபவிப்பார்கள்.

கடற்கரையிலே அழகான பார்க் ஒன்றிருக்கிறது. இந்துக்களின் விக்கிரகங்கள் சில இந்தப் பார்க்கிலே அழகுப் பொருள்களாக வைக்கப்பட்டிருக்கின்றன. டூப்ளே என்னும் பிரெஞ்சுக் காரனின் உருவச் சிலையும் இங்கு வைக்கப்பட்டிருக்கிறது.

புதுச்சேரியில் ஐந்து சினிமாக்கள். பெரும்பாலும் தமிழ்ப்படங்கள்தான் காட்டுகிறார்கள். மாதமொன்றுக்கு இந்தச் சினிமாக் கொட்டகைகளில் சுமார் முப்பதாயிரம் ரூபாய் வசூலாகிறது. இதில் சுமார் மூவாயிரம் ரூபாய் நகர சபைக்குத் தமாஷா வரியாகப் போய் விடுகிறது. புதுச்சேரி நகர சபையின் முக்கியமான வருவாய்களில் இதுவும் ஒன்று.

புதுச்சேரியில் வீதிகளின் பெயர், பிரெஞ்ச், தமிழ் ஆகிய இரு பாஷைகளில் எழுதப்பட்டிருக்கும். பிரிட்டிஷ் இந்தியாவில் தமிழும் ஆங்கிலமும் கலந்து பேசுவது

போல, புதுவையில் தமிழும் பிரெஞ்சும் கலந்து பேசுகிருர்கள். இவ்வூரில் க்ஷவரக் கடை ஒன்றுக்கு 'நவீன தலை யலங்காரம் செய் விடுதி' என்று பெயர். பிராமணுள் காபி கிளப் ஒன்றுக்கு 'அன்சாரி க்பே' என்று பெயர்.

சம்பா கோவில் எங்கே இருக்கிறதென்று கேட்டால், ஒரு பெரிய மாதா கோவிலைக் காட்டுவார்கள். ஆதியில் இது சம்பாதீச்வரர் எனும் மூர்த்தியைக் கொண்ட இந்து மதக் கோவிலாம். இப்பொழுது கூட இந்து மாதா கோவிலில், சிலுவைக்குப் பின்னுல் லிங்கம் இருப்பதாகக் கூறுகிருர்கள்.

புதுச்சேரி அரசாங்கம் தன்னிடத்தில் வந்து தஞ்சமடைந்தவர்களைக் காட்டிக் கொடுப்பதில்லை. கடன்காரர்களின் தொல்லைகளுக்கும் வாரண்டுகளுக்கும் பயந்து எத்தனையோ ஆயிரம் பேர் இங்கே சரண் புகுந்தனர். அரசியல் தொந்தரவுகளுக்காகப் புதுச்சேரியில் வசித்தவர்கள் பலர். அவர்களில் அரவிந்த கோஷ், வ. வே. சு. ஐயர், சுப்பிரமணிய பாரதியார் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

அரவிந்த ஆசிரமம் புதுச்சேரியில் மிகக் குறிப்பிடத்தக்க இடம். ஐரோப்பியர்கள் வசிக்கும் பகுதியில், ஆசிரமத்துக்குச் சொந்தமாகச் சுமார் இருபது கட்டிடங்கள் இருக்கின்றன. ஆசிரமத்தில், அன்னிய நாட்டினரும், இந்தியாவின் பல பாகங்களிலிருந்து வந்தவர்களும், முக்கியமாக வங்காளிகளும், ஆண்களும் பெண்களுமாக சுமார் 150 பேர் வசிக்கிருர்கள். பல தமிழ் நூல்களை எழுதி வரும் சுவாமி சுத்தானந்த பாரதியாரும், வருவாய் நிறைந்த வக்கீல் தொழிலை உதறித் தள்ளிய ஸ்ரீ துரைசாமி ஐயரும் இங்கேதான் வசிக்கின்றனர். ஆசிரமத்துக்கு உள்ளே நடக்கும் விஷயங்களை அன்னை யென அழைக்கப்படும் ஒரு பிரெஞ்ச் மாது கவனிக்கிருர். ஆசிரமத்துக்கு வெளியே நடக்கும் விஷயங்களை ரகசியப் போலீசார் கவனிக்கின்றனர்.

(இக்கட்டுரை 1942-ல் எழுதப் பட்டது.)

செஞ்சி

சென்னையிலிருந்து செஞ்சிக்குச் சுமார் 93 மைல்கள் தான். ரெயிலில் செல்வதானுல் திண்டிவனம் வரை தான் செல்லமுடியும். அப்புறம் பதினேழு மைல் பஸ்ஸிலோ அல்லது தனி மோட்டாரிலோ செல்ல வேண்டும்.

செஞ்சியை நோக்கிச் செல்லும்பொழுது நாம் சரித் திரத்தை நோக்கியே செல்கிறோம். தேசிங்கு ராஜா ஐந்து வயதில் குதிரையைப் பிடித்து அடக்கினுனே இல்லையோ, அது நமக்குத் தெரியாது; ஆனுல், அவன் தன்னுடைய கோட்டையிலிருந்து கொண்டு பல்லாயிரக் கணக்கான மக்களை அடக்கி ஆண்டிருக்கிறுன் என்பது உண்மை.

செஞ்சி நகரம் ஒரு காலத்தில் சீர் பெற்று விளங் கியது. ஆனுல், இன்று அது ஒரு சிறு கிராமம். செஞ்சித் தாலுகா தென்னுற்காட்டைச் சேர்ந்தது. தாலுகாவின் தலைநகர் செஞ்சிக் கிராமம்தான்.

இத்தகைய சரித்திரக் கோட்டைகளில் வழக்கமா யுள்ள தாலுகாக் கச்சேரி, மாஜிஸ்ட்ரேட் கோர்ட் முதலியவைகள்தான் அங்கே காணப்படுகின்றன. அந்த ஊரிலேயே வசதியான நல்ல கட்டிடம் ஆற்றங் கரையில் அமைந்துள்ள முசாபரி பங்களாதான். செஞ்சிக் கோட்டையில் ஏறிப்பார்ப்பதற்காகச் சென்னை யிலிருந்து நாங்கள் மூன்று நண்பர்கள் புறப்பட்டோம்.

எங்கள் மோட்டார் செங்கற்பட்டு ஸ்டேஷனை அடைந்ததும், எங்களையறியாமலே பசி உண்டாயிற்று.

செங்கற்பட்டு ஸ்டேஷனை விட்டால், வேறு நல்ல இட்டலி வழியிலே எங்கே கிடைக்கப் போகிறது? ஸ்டேஷனிலுள்ள ஹோட்டலுக்குச் சென்றோம். என்ன ஆச்சரியம்! பிராமணர் சாப்பிடுமிடம் — பிராமணரல்லாதார் சாப்பிடுமிடம் என்ற போர்டுகளைக் காணவே முடியவில்லை. அவைகள் எல்லாம் எங்கே சென்று மறைந்தன? எல்லோரும் எங்கே வேண்டுமானாலும் சாப்பிடலாமாம். நல்ல காலம்! புதிய இந்தியா இப்பொழுதுதான் உதயமாகிறது!

திண்டிவனம் வரையில் ரோடு பாதகமில்லை; அப்புறம் மோசமாக இருக்கிறது. செஞ்சியை அடைந்ததும் நேராக முசாபரி பங்களாவுக்குச் சென்றோம்.

முசாபரி பங்களா 'வாச்மென்' முருகேசம் பிள்ளை பதினாறு வருஷங்களாக அங்கே வேலை பார்க்கிறாராம். ஆனால் அவருடைய சம்பளம் மட்டும் ரூபாய் பன்னிரண்டிலிருந்து உயரவேயில்லை.

முருகேசம் பிள்ளையைக் கூப்பிடுவதென்றால், உண்மையிலேயே கஷ்டந்தான். முருகேசம் பிள்ளையைக் கூப்பிட்ட உடனே 'ஏன்?' என்ற சத்தம் கேட்டுவிடும். ஆனால், பத்து நிமிஷம் வரை அவர் உங்கள் முன் வரமாட்டார். நீங்கள் கூப்பிட்ட உடனேயே அவர் தமது பழைய கோட்டை மாட்டிக்கொண்டு தலைப்பாகையை, வரிந்து வரிந்து கட்டிக்கொள்வதற்கு, குறைந்தது பத்து நிமிஷமாவது பிடிக்கும். இந்தக் கஷ்டத்தை உத்தேசித்து நாங்கள் அவரைக் கூப்பிடுவதேயில்லை. ஏதாவது அவரிடம் கேட்கவேண்டுமானால், நாங்களே அவர் இருக்குமிடத்துக்குச் சென்றுவிடுவோம். 'செஞ்சியைப் பற்றி ஏதாவது புத்தகம் இருக்கிறதா? இங்கே கிடைக்குமா?' என்று முருகேசம் பிள்ளையைக் கேட்டோம். அவர் தேசிங்குராஜன் பாட்டுப் புத்தகம்

ஒன்றைக் கொண்டுவந்து கொடுத்தார். அந்தப் புத்தகத்தின் அட்டையில் "இது ராமாயியின் புத்தகம். யாரும் எடுத்துக்கொண்டு போனால் போலீஸில் சார்ச் செய்யப்படும்" என்று எழுதியிருந்தது! புத்தகத்தைப் பிரித்து எனது நண்பர் பின்வருமாறு படித்தார்:

"குதிரை பிறந்தது வெள்ளிக்கிழமை
ராஜா தேசிங்கு!

யானை பிறந்தது வெள்ளிக்கிழமை
ராஜா தேசிங்கு!

நீயும் பிறந்தது வெள்ளிக்கிழமை
ராஜா தேசிங்கு!"

இதைப் படித்ததும் என் நண்பருக்கும் 'கவிதா சக்தி' பிறந்துவிட்டது. உடனே அவர்

"நானும் பிறந்தது வெள்ளிக்கிழமை
ராஜா தேசிங்கு"

என்று பாட ஆரம்பித்துவிட்டார்.

இந்தப் புத்தகத்தை அரை குறையாகப் படித்து முடித்ததும் "வேறு புத்தகம் ஏதாவது இருக்கிறதா?" என்று முருகேசம் பிள்ளையைக் கேட்டோம். அவர் "முச்சாபரி பங்களாவில் ஒரே ஒரு புத்தகம்தான் இருக்கிறது" என்று கூறி, 'பைபிளை'க் கொண்டுவந்து கொடுத்தார். "அட கடவுளே, பாதிரிகள்தான் கிறிஸ்தவமதப் பிரசாரம் செய்கிறார்கள். நாசமாய்ப் போன ஜில்லா போர்டுமா, இந்தப் பிரசாரம் செய்ய வேண்டும்!" என்றார் நண்பர். 'நாசமாய்ப் போன' என்பது இந்த நண்பர் அடிக்கடி கூறும் அர்த்தமில்லாத ஒரு வார்த்தை.

அன்று மாலையில் கோட்டையைப் பார்க்கச் சென்றோம். முதலாவது ராஜகிரி. இது ஒரு பிரம்மாண்டமான கோட்டை. ஒரு காலத்தில் சேனைகள் அணிவகுத்து நின்ற இடங்கள், இப்பொழுது வயல் காடுகளாக இருக்கின்றன. சில சமயங்களில் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் அங்கே மனிதர்களையே காண முடியாது. நெளிந்தும் வளைந்தும் செல்லும் பாதைகள் வழியாகப் பல வாயிற்படிகளைக் கடந்து, ராஜகிரியின் அடிவாரம் போய்ச் சேர்ந்தோம்.

முதன்முதலாக ஆறு மாடியுள்ள அழகிய கட்டிடம் ஒன்றைக் கண்டோம். இதனருகே ஒரு பெரிய குதிரை லாயம் இருக்கிறது. 'அரசர் ஸ்நானம் செய்த இடம்', 'அரசி ஸ்நானம் செய்த இடம்' என்று சில இடங்களைப் பற்றி நாங்களே நினைத்துக்கொண்டோம்.

அழகிய குளம். அதன் நாற்புறமும் மண்டபம். இந்த மண்டபம் பூமி மட்டத்திலேயே இருக்கிறது. மண்டபத்திற்குக் கீழே, பூமியைக் குடைந்தாற்போல் ஒரு வழியிருக்கிறது. அந்த வழியில் சென்றால்தான் குளத்தை அடையலாம்.

ஏராளமான களஞ்சியங்கள், தானியங்களைச் சேகரித்து வைப்பதற்காகக் கட்டப்பட்டிருக்கின்றன. பிரம்மாண்டமான இந்தக் களஞ்சியங்களில் ஒரு தூண்கூடக் கிடையாது.

உடற்பயிற்சி மண்டபமும் மலை அடிவாரத்திலேயே யிருக்கிறது.

நாங்கள் மூவரும் ராஜகிரியில் ஏறுவதற்காக முயற்சித்தோம். வழி நெடுக, சுமார் பத்து மண்டபங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மண்டபத்திலும் தங்கி இளைப்பாறிச் செல்லலாம்.

படிகளில் ஏறுவது மிகக்கஷ்டமாக இருந்தது. ஏனெனில், நாங்கள் மூவரும் ஏறக்குறைய 'பெரிய மனிதர்கள்.' எங்களில் மிகப் பெரிய மனிதர் சுமார் 160 பவுண்டுதான் எடையுள்ளவர்.

மூன்றாவது மண்டபம் வந்த உடனேயே நான் உட்கார ஆரம்பித்து விட்டேன். என்னை உற்சாகப் படுத்திக் கொண்டே மற்ற இரு நண்பர்களும் உட்கார்ந்து விட்டார்கள்.

அப்பொழுது தான் மலையிலிருந்து காவற்காரன் இறங்கி வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் எனது நண்பர் "ஏனப்பா, உச்சிக்கு ஏறி இறங்கு வதற்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்?" என்று கேட்டார். அதற்கு அவன் "சுமார் ஒன்றரை மணி நேரம் பிடிக்கும்" என்றான். எனது நண்பர் "சரி; போவ தற்கு முக்கால் மணி, வருவதற்கு முக்கால்மணி" என்று கணக்குப் போட்டுக் கூறினார். உடனே காவற்காரன் "இல்லீங்கோ; போவதற்கு ஒருமணி, வருவதற்கு அரைமணி யாகும்" என்றான். எனது நண்பரின் கணக்கிலே பிசகில்லை. ஆனால் காவற்காரன் கூறியதுதான் உண்மை. கடைசியாக, மலையின் உச்சியை அடைந்தோம். ரங்கநாதர் கோவில், மணிக்கூண்டு, தேசிங்குராஜா தர்பார் நடத்திய இடம், பொக்கிஷசாலை முதலியவைகளைப் பார்த்தோம்.

மறுநாள் காலையில் கிருஷ்ணகிரிக்குச் சென்றோம். இது மிகவும் சிறிய மலை. சுமார் முந்நூற்றெண்பது படிகள் தான். ஆனால் இதில் ஏறி இறங்குவதற்குள் முழங்கால் முறிந்து விடும்போல் தோன்றியது.

செங்குத்தான இம் மலையின் மேல் சில ஆலயங் களும் களஞ்சியங்களும் அரச மண்டபங்களும் இருக் கின்றன. உச்சியிலுள்ள மண்டபம் மிக அழகானது.

ஆனால் அங்கே வரும் மனிதப் 'பிராணிகள்', இந்த அழகிய மண்டபத்தில் தங்கள் பெயர்களைக் கரியாலும், மற்றும் பலவகையாலும் எழுதி ஆபாசப்படுத்தியிருக்கின்றன.

மூன்றாவது மலை ரங்ககிரி. ஆனால் இம் முறை அங்கே செல்ல எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ரங்ககிரி, செஞ்சியிலிருந்து சுமார் இரண்டரை மைல் தூரத்திலுள்ள சிங்கவரத்தில் இருக்கிறது. இம் மலைக் கோவிலில் ரங்கநாதர் பள்ளி கொண்டிருக்கிறார்.

ஆனால், இந்த ரங்கநாதர் மற்ற ரங்கநாதர்களைப் போல் இல்லாமல் ஆகாயத்தை நோக்கிக்கொண்டிருக்கிறார். தேசிங்குராஜா சண்டைக்குச் செல்வதற்காக உத்தரவு கேட்க வந்ததாகவும், அதற்கு ரங்கநாதர் சம்மதமில்லாமல் தலையைத் திருப்பி வைத்துக்கொண்டதாகவும் அங்குள்ளவர்கள் கூறுகிறார்கள். அது எப்படியானாலும் சரி; ஒரே கல்லில் செதுக்கப்பெற்ற ரங்கநாதரின் பிரம்மாண்டமான அந்தத் 'திருஉருவம்' பார்க்கத்தக்கது.

செஞ்சிக்குச் செல்லுகிறவர்களுக்கு, ஒரு வார்த்தை. நீங்கள் அங்கே சென்றதும் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்துகொள்ளுங்கள்; அங்கேயிருக்கும் இரண்டொரு ஹோட்டல்களில் முன்னதாகவே சொல்லி வைத்து விடுங்கள். இல்லையானால், விநோதமான 'பறங்கிக்காய் வத்தல் குழம்பு' தான் உங்களுக்குக் கிடைக்கும்.

தரங்கம்பாடி

மாயவரத்திலிருந்து சுமார் 18 மைல். ஆடி அசைந்து செல்லும் ரெயில். இரண்டே முக்கால் மணி நேரத்தில் தரங்கம்பாடி ஸ்டேஷனை அடைகிறோம்.

ஸ்டேஷனிலிருந்து அரை மைல் தூரத்தில் பெரிய கோட்டை. இக்கோட்டைக்குள் இருக்கும் ஊர் தான் தரங்கம்பாடி. கோட்டையை அடைவதற்குள் இரண்டு ஆறுகளைக் கடக்கவேண்டும். ஒன்று உப்பனுறு; பெயரிலிருந்தே தண்ணீர் எப்படி இருக்கும் என்பதை அறியலாம். மற்றென்று பக்கிங்ஹாம் கால்வாய்; சென்னையில் இருக்கிறதே, அதே நாற்றம் நிறைந்த பக்கிங்ஹாம் கால்வாய் தான் இது. இந்த இரண்டு ஆறுகளும் தரங்கம்பாடிக்கு அருகே சங்கமம் ஆகின்றன.

கோட்டைக்குள்ளே ஒரு கோட்டை, குறுக்கிலும் நெடுக்கிலும் ஓடும் அழகான வீதிகள், பாழடைந்த பெரிய கட்டிடங்கள், ஒரு மசூதி, இரண்டு கோயில்கள், மூன்று சர்ச்சுகள், சுமார் 500 வீடுகள் ; இதுதான் தரங்கம்பாடி.

பதினெட்டாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் ஜெர்மன் பாதிரிகள் இங்கே வந்தார்கள். இன்னும் அவர்களுடைய பள்ளிக் கூடங்களும், மதமாற்றும் கருவிகளும் இங்கே யிருக்கின்றன. முதன் முதலாக இந்த ஊரைச் சீர்படுத்தி அரசாண்டது டேனிஷ்காரர்கள். அந்தக் காலத்தில் கட்டப்பட்ட பிரம்மாண்டமான கட்டிடங்களில் சில இன்னும் நல்ல நிலைமையில்

இருக்கின்றன. அந்தக் கட்டிடங்களில் டென்மார்க்கின் சிற்பங்கள் காணப்படுகின்றன.

ராஜா வீதி, ராணி வீதி, அட்மிரல் வீதி, பிரின்ஸ் வார்க்ன் முதலியன வீதிகளின் பெயர்கள். இந்தக் கோட்டை நகருக்கு மூன்று புறந்தான் வாயில்கள். ஒரு புறம் துறைமுகம். துறைமுகத்தின் அருகில் சிறிய கோட்டை. இந்தச் சிறிய கோட்டைக்கு அருகே பெரிய மைதானம். மைதானத்தின் மறு புறத்தில் ஜட்ஜ் பங்களா. அது இப்பொழுது நாடார் பங்களாவாக இருக்கிறது.

மைதானத்தின் மற்ருெரு புறத்தில் **மேனிக்** என்ற ஜெர்மானியர் வசிக்கிருர். இவருக்கு வயது 87. இவ்வூருக்கு வந்து 52 வருஷங்களாகின்றன. இத்தனை வருஷங்களாகியும் இவருக்குத் தமிழ் சரியாகப் பேச வராது. ஒருமுறை தம் வேலைக்காரனைக் கூப்பிட்டுத் தம் வீட்டுக்குப் போய் அம்மாளிடம் இரண்டு சுருட்டுகள் வாங்கி வரும்படி கூறினர். அதற்கு, "நான் சொல்லி, நீ சொல்லி, அம்மா சொல்லி, இங்கே போருன் ஒருவன், திரும்பி வருருன் ஒருவன்" என்று வேலைக்காரனிடம் சொன்னராம்.

மேனிக் துரைக்கு இந்தியர்களிடம் நிரம்ப அபிமானம் உண்டு. அதை எல்லா வகையிலும் காட்டிக்கொள்வார். பிறப்பில் ஜெர்மானியராக இருந்தாலும் முதலாவது உலக யுத்தத்தில் பிரிட்டிஷ் பிரஜையாக மாறி விட்டார்.

தரங்கம்பாடியில் பொதுவர்க பென்ஷன் வாங்குபவர்களும் செம்படவர்களும் தான் அதிகம். இந்தச் செம்படவர்கள் கோட்டைக் கருகே வசிக்கிருர்கள்.

மேனிக் இப்பொழுது காலமாகி விட்டார்.

மீன் பிடிப்பதிலும் சுருட்டுப் பிடிப்பதிலும் இவர்கள் கெட்டிக்காரர்கள். இவர்கள் இருக்கும் குடிசைகளுக்குப் பட்டணம் என்று பெயர். இவர்களுக்குப் பட்டணத்தார் என்று பெயர்.

இந்தப் பட்டணத்தாரின் ஜனத்தொகை சுமார் ஆயிரம். இங்கே ஒரு பள்ளிக்கூடமும் ஒரு கோயிலும் உண்டு. சில பட்டணத்தார்களுக்கு, ஒரு சமயம் தெய்வ பக்தி அதிகமாகி விட்டது. உடனே அவர்கள் இரவில் கோயிலுக்குச் சென்று விக்கிரகத்தைப் பெயர்த்து, அதற்கடியிலிருந்த பொன்னை, சுவாமியின் பிரசாதமாக எடுத்துச் சென்றார்களாம்.

பட்டணத்தாரின் கல்யாணமே அலாதியானது. கல்யாணத்தில் மாப்பிள்ளையையும் பெண்ணையும் விடப் புரோகிதருக்குத்தான் கஷ்டம் அதிகம். மணமகளுக்குத் தாலி கட்டி முடிந்ததும், மணமகன் கையையும் மண மகள் கையையும் ஒன்றாகச் சேர்த்து வைக்க வேண்டிய வர் புரோகிதர். மணப் பெண் கையைப் பின்புறமாக வைத்துக் கொள்வாள். புரோகிதர் பலவந்தமாக், பெண்ணின் கையைப் பிடித்து மாப்பிள்ளையின் கையோடு சேர்க்கவேண்டும்.

அம்மி மிதித்தல் ஒரு சடங்கு. மாப்பிள்ளை பெண்ணின் காலைத் தூக்கி அம்மியின் மீது வைக்கவேண்டும். கல்யாண வீட்டிலுள்ள ஆண்களுக்கும் பெண்களுக்கும் இதில் சண்டை வந்து விடும். 'தூக்கி வை' என்பார்கள் பெண்கள். 'தூக்காதே' என்பார்கள் ஆண்கள்.

'தூக்கி வை' 'தூக்காதே' 'தூக்கி வை' 'தூக்காதே' என்ற பெரும் இரைச்சல் உண்டாகும். சில சமயங்களில் சண்டையும் வந்து விடும். சில சமயங்களில் புரோகிதரே பெண்ணின் காலைத் தூக்கி வைக்கவேண்டும். இவ்வளவு

கஷ்டப்பட்டும் புரோகிதருக்குக் கிடைப்பது ஏழு ரூபாய் தான்! இந்தத் தொழிலை விட ஏ. ஆர். பி.யில் சேருவது நல்லதென்று புரோகிதர் கருதுகிறார்.

வாழ்ந்து முறிந்து போன ஊர் தரங்கம்பாடி. இங்கே வாழ்ந்து வதங்கியவர்கள் (பென்ஷன் வாங்கு பவர்கள்) அதிகம். இவர்கள் ஆபிரிக்கா, மலேயா, மோரீஸ் போன்ற வெளி நாடுகளிலே சம்பாதித்தவர் கள். அந்தக் காலத்திலே பணத்தைத் தண்ணீர் போல வாரி இறைத்தார்கள். இப்பொழுது காலணாச் செல விடவும் கணக்குப் பார்க்கிறார்கள். யாராவது வெளி யூரார் போய் விட்டால் பேசிப் பேசிப் பிராணனை வாங்கி விடுவார்கள்.

இவ்வூர் இளைஞர்களுக்குப் படிப்பு, அரசியல் இவை களைவிட விளையாட்டுக்களிலே அதிகப் பிரியம். டென்னிஸ், புட்பால், பாட்மிண்டன் முதலியன அதிகம்.

ஒரு காலத்திலே தரங்கம்பாடித் திராட்சை மிகப் பேர் பெற்றிருந்தது. இப்பொழுது மருந்துக்குக்கூட ஒன்றைப் பார்ப்பது கஷ்டம்.

தரங்கம்பாடியில் ஒரே ஒரு பாக்டரி; அதுவும் சோடா பாக்டரி. சாயா வந்த பிறகு சோடா வியாபாரம் படுத்து விட்டது.

பரம்பரையாகக் காபி கிளப் நடத்தும் ஐயர் ஒருவர் இருக்கிறார். இவர் பழைய காலத்து மெட்ரிகுலேஷன். இவருடைய பலகாரத்தைவிட, பேச்சு இனிமையாக இருக்கும்.

தென்னிந்தியாவில் உள்ள சிறந்த சுகவாச ஸ்தலங்களில் தரங்கம்பாடி குறிப்பிடத் தக்கது. வெயில் காலத்தில் இங்கு நல்ல ஆரோக்கியமான

காற்று. இவ்வூர் மக்களின் ஏழ்மை, சுகவாசிகளின் செலவைக் குறைத்து விடுகிறது.

சமுத்திரக் கரையின் ஓரத்திலுள்ள மணற்பரப்பில் அருமையான ஊற்று நீர் கிடைக்கிறது.

மாசிலாமணி கோயில், சமுத்திரக்கரை ஓரத்திலிருக்கிறது. கொஞ்சகாலத்தில் கோயிலும் சமுத்திரமும் ஒன்றாகி விடலாம். மாசிலாமணி கடவுளுக்கு நூற்றுக் கணக்கான வேலி நிலமிருந்தும் அவரைக் கவனிப்பார் யாருமில்லை. கடவுள் பெரியவர். அவர் தம் குறைகளை யாரிடமும் சொல்லமாட்டார்.

தரங்கம்பாடியைப் பற்றி நினைக்கும் பொழுது கொம்பில்லாத மாடுகளும், கூரையில்லாத வீடுகளுமே ஞாபகத்துக்கு வருகின்றன.

குமரி முனை

'நீலத்திரைக் கடலோரத்திலே நின்று நித்தம் தவம் செய் குமரி'யைத் தரிசிப்பதற்காக, சென்னையிலிருந்து பிரயாணமானேன்.

சென்னையிலிருந்து திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் ரயிலில் புறப்பட்ட பொழுது, எஞ்ஜினைத் தவிர, பத்து வண்டிகளுக்கு மேல் இணைக்கப் பட்டிருந்தன. 512 மைல் பிரயாணத்துக்கப்பால், திருவனந்தபுரத்தையே அடைந்த பொழுது, எஞ்ஜினைத் தவிர நாலு வண்டிகள் தான் மிச்சம்.

திருவனந்தபுரம் ரயில்வே ஸ்டேஷனின் மேல் மாடியில் பிரயாணிகள் தங்குவதற்காகச் சிறந்த முறையில் சௌகரியங்கள் செய்திருக்கிறார்கள். ஸ்டேஷனுக்கெதிரே, மிக அழகான 'பார்க்' ஒன்று அமைத்திருக்கிறார்கள். என் அருகே நின்ற வேலைக்காரன், அந்தப் 'பார்க்' அமைக்கப் பெற்ற வரலாற்றைக் கூறினான்.

பார்க் அமைப்பதற்கு முன் அந்த இடம் மைதானமாக இருந்ததாம். சமஸ்தானக் காங்கிரஸ்காரர்கள் அடிக்கடி இங்கே பொதுக் கூட்டங்கள் நடத்திக் கிளர்ச்சி செய்வார்களாம். இந்தக் காங்கிரஸ்காரர்களின் கூட்டங்களைத் தடுப்பதற்காகவே, அந்த மைதானத்தைச் சர்க்கார் அழகான 'பார்க்' ஆக்கி விட்டார்களாம். இந்த வரலாறு உண்மையாக இருக்குமானால், சமஸ்தானக் காங்கிரஸ்காரர்களுக்கு ஒரு யோசனை கூற விரும்புகின்றேன். "எந்த எந்த இடங்களில் 'பார்க்' அமைக்கப் படவேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அந்த அந்த இடங்களில் பொதுக்

கூட்டங்கள் நடத்த ஆரம்பித்து விடுங்கள்" என்பது தான் அந்த யோசனை.

திருவனந்தபுரத்தில் தங்கிய இரண்டு நாட்களில் மூன்று இடங்கள் என் மனதைக் கவர்ந்தன. ஸ்ரீ பத்மநாபசாமியின் ஆலயம், சித்திரசாலை, மீன் காட்சிச் சாலை (Aquarium).

ஆலயத் திறப்புச் சம்பந்தமாக, ரெயிலில்பிரயாணம் செய்த ஒரு நம்பூதிரிப் பிராமணரிடம் பேசிக்கொண்டிருந்தேன். "அதைப் பற்றி எங்களுக்கு என்ன கவலை? பிராமணர் தான் எப்பொழுதும் கோயிலுக்குப் போவதே யில்லையே! ஒவ்வொரு பிராமணர் வீட்டிலும் கோயில் உண்டு" என்றார் நம்பூதிரி. திருவாங்கூரில் ஆலயங்களை இந்து மதத்தினர் அனைவருக்கும் திறந்து விட்டது மிகவும் பாராட்டத்தக்க ஒரு நல்ல காரியம். சமஸ்தானத்தில் கிறிஸ்தவர்களின் செல்வாக்கு அதிகமாகாமலிருப்பதற்காகத் தான் ஆலயங்களைத் திறந்து விட்டதாகவும், இது ஓர் அரசியல் தந்திரம் என்றும் சிலர் கூறுகிறார்கள். பாராட்டத்தக்க நல்ல காரியத்தைச் செய்யும் பொழுது, அது எந்த நோக்கத்துடன் செய்யப்பட்டது என்று விவாதிப்பது பெருந்தன்மையாகாது.

உள்ளத்தைக் கவரும் ஓவியங்கள் நிறைந்தது திருவனந்தபுரம் சித்திரசாலை. ராஜா ரவிவர்மாவின் உயிர் ஓவியங்களை அங்கே நாள் முழுதும் பார்த்து அனுபவிக்கலாம். பாடப் புத்தகங்களிலே நாம் பார்த்திருக்கக்கூடிய அன்னமும் தமயந்தியும் என்ற படம் எவ்வளவு அழகாக இருக்கிறது! சகுந்தலையின் படத்தைக் கண் குளிரப் பார்த்து மகிழலாம்!

கீழ் நாடுகளிலேயே மிகச் சிறந்த மீன் காட்சிச் சாலை திருவனந்தபுரத்தில் உள்ளது தான் என்று

பெருமையடித்துக் கொள்கிறார்கள். அதைப் பார்த்ததும் 'இது உண்மை: வெறும் பிரசாரமல்ல' என்று நமக்குத் தெரிகிறது.

திருவனந்தபுரத்திலுள்ள பெண் போலீஸ் படையைப்பற்றிக் கேள்விப்பட்டேன். இந்தப்படையிலுள்ள ஒரு போலீஸ்காரியையாவது காண வேண்டுமென்று எனக்கு ஆவல். ஆனால், முடியவில்லை. முக்கியமான விசேஷங்களுக்கும், வரவேற்பு, அணிவகுப்புப் போன்ற வைபவங்களுக்குந்தான் இந்தப் பெண் போலீஸ்காரிகள் வெளியே வருவார்களாம். ஒன்றுமட்டும் நிச்சயமாகத் தெரிந்தது. இந்தப் போலீஸ்காரிகளைப் பாதுகாக்க, போலீஸ்காரர்கள் யாரும் நியமிக்கப்படவில்லையாம்.

திருவாங்கூர் நாணயம் என்ன தெரியுமா? 'சக்கரம்' என்பது தான். ஒரு ரூபாய்க்கு 28 சக்கரம். ஒரு சக்கரத்துக்குக் காப்பி' சாப்பிடலாம். அரைச் சக்கரத்துக்கு 'டீ' சாப்பிடலாம், சில இடங்களில் ஒரு சக்கரத்துக்குச் சினிமாக்கூடப் பார்க்கலாம்.

திருவனந்தபுரத்திலிருந்து இயற்கை எழில் நிறைந்த சாலை வழியாக, நாற்பது மைல் தூரத்திலிருக்கிறது நாகர் கோயில். இவ்வூர்க் கோயில் ஒரு காலத்தில் ஜைனர்களின் கையிலிருந்ததாம். நாகர் கோயிலை ஆஸ்பத்திரிகள் நிறைந்த நகரம் (City of Hospitals) என்று கூறலாம். எங்கே நோக்கினாலும் ஆஸ்பத்திரிகள், அதுவும் கிறிஸ்தவ மிஷன் ஆஸ்பத்திரிகள்!

இந்த நகருக்கு அருகேயுள்ள புத்தேரி என்னும் சிற்றூரில் தமிழ்க்கவி ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் வசிக்கிறார்கள், பிள்ளையவர்களைச் சந்திக்கும்

பாக்கியம் எனக்குக் கிடைத்தது. பிள்ளையவர்களின் மாசற்ற அன்பும், அடக்கம் நிறைந்த பேச்சும், மனம் உவந்த உபசரிப்பும் என் உள்ளத்தைக் கவர்ந்தன.

ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளையவர்களின் பாடல்களைத் தமிழ் நாடும் தமிழ் மக்களும் நன்கறிவார்கள். இவருடைய பாட்டுக்களைக் கண்டு யாரும் பயப்பட வேண்டியதில்லை. குழந்தைகளும் புரிந்து கொள்ளும் படியான எளிய நடையில் பாக்கள் ஆக்குவதிலே ஸ்ரீ பிள்ளையவர்கள் சிறந்து விளங்குகிறார்கள்.

நாகர் கோயிலிலிருந்து பன்னிரண்டு மைல் தூரத்திலிருக்கிறது கன்யா குமரி. முப்புறமும் கடல் சூழ்ந்த குமரி முனையில் நின்று எப்பக்கம் திரும்பினும் ஓர் இனிய உணர்ச்சி எழுகிறது. "அதோ, அங்கேயிருக்கும் பாறைக்கு நீந்திச் சென்று, அப்பாறை மீது தான் சுவாமி விவேகாநந்தர் தவம் செய்தார். இங்கே தான் மகாத்மா நீராடினார். பழம் பெருமை கொண்ட எனது தாய் நாட்டின் எல்லை இது' என்று நினைக்கும் பொழுது, எந்த இந்தியன் தான் மனம் பூரிக்காமல் இருக்க முடியும்? கன்யா குமரி மூன்று அல்லது நான்கு ஆயிரம் ஜனத்தொகை கொண்ட சிறு கிராமம். குமரி முனையிலே ஒரு மண்டபம் இருக்கிறது. மண்டபத்திலிருந்து இறங்கினால் சௌகரியமாக நீராடுவதற்கு வசதிகள் இருக்கின்றன.

மண்டபத்திலிருந்து பார்த்தால், சூர்ய உதயமும் சூர்ய அஸ்தமனமும் தெரியும். மண்டபத்துக்கு அருகேயுள்ள கடற்கரையில், பன்னிற வர்ணமுள்ள மணல் வகைகள் காட்சி யளிக்கின்றன. வான வில்லில் எத்தனை வர்ணங்கள் உண்டோ, அத்தனை வர்ணங்களை இம் மணல் வகைகளில் பார்க்கலாம். கடற்கரையின் ஓரத்தில் திருவாங்கூர் மஹா ராஜாவின் பங்களா,

முசாபரி பங்களா, கேப் ஹோட்டல் முதலிய கட்டிடங்கள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. இவை தவிர, ஏராளமான சத்திரங்களும் அங்கே இருக்கின்றன.

ஊருக்கு மத்தியிலே விவேகானந்த வாசக் சாலை ஒன்று இருக்கிறது. இதை ஸ்ரீ பரமேசுவரம் பிள்ளையும் ஸ்ரீ ராஜனும் வெகு நாளாகத் திறம்பட நடத்தி வருகிறார்கள். கன்யா குமரிக்கு வரும் யாத்ரீகர்கள் கொடுக்கும் அன்பளிப்பான பணத்தைக் கொண்டு தான், இதை அவர்கள் அபிவிருத்தி செய்து வருகிறார்கள். சுவாமி விவேகானந்தரின் பெயரால் இவ்வாசச் சாலை அமைக்கப் பெற்றிருப்பதால், இங்கே வருகிற வங்காளிகள் நிறையப் பொருளுதவி செய்கிறார்களாம்.

மகாத்மாஜி ஒரு முறை இவ்வாசச் சாலைக்கு விஜயம் செய்தார். அவ்வரலாற்றை, வாசகசாலைக் காரியதரிசி பின் வருமாறு கூறினார்;—"காந்திஜியை எங்கள் வாசகசாலைக்கு விஜயம் செய்யும்படி கேட்டுக் கொண்டோம். மறு நாள் காலையில் உலாவச் செல்லும்போது வருவதாக, அவர் வாக்களித்தார். எங்கள் வாசக சாலைக்கு அடுத்த கட்டிடம் 'விவேகானந்த காபிக் கிளப்' காந்திஜி தவறுதலாகக் காபிக் கிளப்புக்குள் நுழைந்து விட்டார். காபிக் கிளப்காரருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. 'காந்திஜி ஆட்டுப்பால் தானே சாப்பிடுவார். காபி சாப்பிடமாட்டாரே' என்று யோசிக்க ஆரம்பித்தார். அதற்குள்ளாக, காந்திஜி, காபிக் கிளப்பை விட்டு வெளியே வந்து வாசகசாலையை அடைந்தார்."

விவேகானந்த வாசகசாலைக்கு யார் போனாலும் இந்த வரலாற்றை அந்த வாசக சாலையார் கூறுவார்கள்.